கல்கி

KALKI 13.12.98
ரூ. 4.50



தொடர்கிறது,
தும்புருவின்
விமர்சன போக்ரன்!



சின்னத்திரையின் சில்வர் ஸ்டார்!

தரமான ஜாதிகற்கள் கிடைக்கும்

அதிர்ஷ்ட்ட கல் அணிந்து வாழ்க்கையில் வளம் பெருங்கள்

உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களையும், சகல துயரங்களையும் நாங்கள் உங்கள் ஜாதகத்தின் கிரக நிலைக்கு ஏற்ப எங்கள் முதல் தர ஜோதிட வல்லுனர்களை கொண்டு உங்கள் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண்கிறோம்.

வியாபாரத்தில் நஷ்டமா, வேலையில் நிரந்திரமின்மையா, திருமணத்தடையா, புத்திரதோஷமா, குழந்தையின் கல்வியின்மையா, வாழ்க்கையே பிரச்சினையாக உள்ளதா? இவை எல்லாவற்றிலும் இருந்து மனிதர்கள் வெற்றியும், மகிழ்ச்சியும் அடைய ராசிகல் அணிந்து முழு பலன்களையும் பெறவும்.

நேரில் வரும் அன்பர்களுக்கு ஜாதகத்தின் அடிப்படையில் எந்த ராசி கற்கள் அணியலாம் என்பதற்கு ரூ. **101/-** மற்றும் ஐந்து கேள்விகளுக்கு பதில் அளிக்க ரூ. 51/-. வெளியூர் அன்பர்களுக்கு கூடுதலாக தபால் செலவு ரூ. 45/- மட்டும். வெளிநாட்டில் வசிக்கும் அன்பர்களுக்கு US $10 (அ) ரூ. 400/- மட்டும். D.D./M.O. வை **K.V. NARAYANA** என்ற பெயரில் உடன் உங்கள் பிரச்சினைகளையும், ஜாதகத்தின் நகலையும் எடுத்து அனுப்பி முழு பலன்களையும் பெறலாம்.


பெண்களின் நினைவுகளை பிரதிபலிக்கும் புதிய பேஷன் ஜுவல்லரி (Party Wear Jewellery) மற்றும் எண்ணற்ற ஆபரணங்கள் அணிவகுத்துள்ளன.

ரூ. 1000க்கு நகை வாங்குவோர்களுக்கு
ஒரு ஜோடி முத்து வளையல்
(or) ஒரு ஜோடி பவள கம்மல்

இலவசம்

- நல் முத்து
- நல் பவளம்
- துளசி ஆபரணங்கள்
- ஆண்டிக் ஆபரணங்கள்
- நவரத்னா மாலைகள்
- ரூபி ஜேட் எமரால்டு மாலைகள்
- மீக்கி மோட்டா முத்துக்கள்
- *Emerald Ruby Sets*
- *Oxidised Jewellery, Etc.*

உங்கள் மனம் கவரும் டிசைன்களில்
புதிய வகை
ரோஜா பூ பவளம் & ஜேட்
இலைகள் கொண்ட நெக்லஸ்
குறைந்த விலையில்
கிடைக்கும்



அதிர்ஷ்ட்ட கல் அணிவதால் நலமே

NARAYANA PEARLS, GEMS & JEWELLS

62, Pondy Bazaar, (Near Panagal Park), Opp. Maya's Plaza,
T. Nagar, Chennai - 600 017. Tel : 43 22 6 44, 436 31 93
Sundays also open (11 am to 4 pm) - We Accept Cerdit Cards

எங்களுடைய பெயரை பயன்படுத்தி கண்காட்சி விற்பனை செய்பவர்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை.

கம்ப்யூட்டர் ஜாதகம்

★ மரகதம் ★ வைரம் ★ முத்து ★ கனக புஷ்பராகம் ★

★ கோமேதகம் ★ நீலம் ★ வைடூரியம் ★ பவளம் ★ மாணிக்கம்

ONLINE

இசை உலகில் இரு உ.பி.ச!

'கலோனியல் கஸின்ஸ்' ஹரிஹரனும் லெஸ்லி பீட்டர் லெவிஸும் ('லெஸ்') சமீபத்தில் சென்னை வந்திருந்தார்கள். ஃப்யூஷன் இசையால் உலகைக் கலக்கும் இந்த உடன்பிறவா சகோதரர்களைச் சந்தித்தபோது:

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com
ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in



"ஹரிஹரன், கர்நாடக இசைக் குடும்பத்தில் பிறந்த நீங்கள் ஹிந்துஸ்தானி, கஸல் பாடகரானது எப்படி?"

"என் அப்பா ஹெச்.ஏ.எஸ். மணி; அம்மா அலமேலு இரண்டு பேருமே மியூசிஷியன்ஸ்தான். என் அப்பா, மும்பையில் மியூஸிக் ஸ்கூல் நடத்தி வந்தார். பாம்பே சிஸ்டர்ஸ் கூட என் அப்பாவிடம் இசை பயின்றவர்கள்தாம்! இசை எங்கள் குடும்பச் சொத்து! நான் முறைப்படி கர்நாடக இசை கற்றவன் இல்லை. ஆனாலும், நான் கர்நாடக இசையைத் தெரிந்து கொண்டேன். பதினெட்டு வயதான சமயம், எனக்கு ஹிந்துஸ்தானி இசையில் ஆர்வம் ஏற்பட்டது. பத்மஸ்ரீ உஸ்தாத் குலாம் முஸ்தபா கான் என் குரு. ஆரம்பத்தில் ஹிந்துஸ்தானி இசை கற்றுக் கொள்ளக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், என் ஆர்வம் காரணமாக அது சுலபமாகத் தெரிந்தது. உங்களுக்கு ஆச்சரியமான ஒரு விஷயத்தைச் சொல்லட்டுமா? நான் ஒரு சயன்ஸ் பட்டதாரி; சட்டம் படித்தவன். இப்போது கூட நான் கறுப்புக் கோட்டு அணிகிறேன். மேடையில் பாடுகிறபோது!"

"லெஸ்! உங்கள் குடும்பப் பின்னணி என்ன? பிரிட்டிஷ் பிரஜையா?"

"நோ– நோ– நான் இந்தியன்தான். எங்களுக்குப் பூர்வீகம் ஆந்திரா. ஆனால் பிறந்து, வளர்ந்தது எல்லாம் மும்பையில்.

என் அப்பா, இந்தி சினிமா உலகில் கோரியோகிராபர் (நம் ஊர் சினிமா பாஷையில் டான்ஸ் மாஸ்டர்) நான் மவுண்ட் அபுவில் போர்டிங் ஸ்கூலில் படித்தவன். எனவே, வெஸ்டர்ன் மியூஸிக்கில் சின்ன வயசு முதலே ஆர்வம். அந்தக் கால கிளாசிகல்-சினி மியூஸிக், இரண்டுமாய்ச் சேர்ந்து, எனக்குள்ளே இசை மீது ஒருவித வெறியை ஏற்படுத்தி விட்டன. அப்போதே கிடார் வாசிக்கக் கற்றுக் கொண்டு விட்டேன். 87-ல் சொந்தமாய் ஒரு கம்பெனியை ஆரம்பித்து, அதன் மூலம் பல இசை ஆல்பங்கள் வெளியிட்டிருக்கிறேன். இன்று பிரபலமாக உள்ள சுனிதா ராவ், அலிஷா போன்றவர்களுடைய ஆல்பங்களையும் வெளியிட்டிருக்கிறேன்."

"உங்கள் இரண்டு பேருக்கும் எத்தனை வருடப் பழக்கம்?"



• லெஸ்

"ரொம்ப கரெக்டாய்ச் சொல்ல முடியவில்லை. பல வருடப் பழக்கம். லெஸ், மும்பையின் விளம்பரப் படத் தயாரிப்புத் துறையில் முக்கியமானவர். இவர் இசையில் உருவான பல விளம்பரங்கள் சூப்பர் ஹிட்! உதாரணமாக, தம்ஸ் அப், மேங்கோ ஃப்ரூட்டி... இவரது இசையில், விளம்பரங்களில் நான் நிறைய பாடியிருக்கிறேன்" என்கிறார் ஹரிஹரன்.

"நீங்கள் இரண்டு பேரும் இணைந்து இசையை வழங்கும் எண்ணம் எப்படி வந்தது?"

"அது மறக்க முடியாத ஒரு சம்பவம். அந்த அரைமணி நேரத்தை எங்கள் இருவரது வாழ்க்கையின் திருப்புமுனை என்று சொல்ல வேண்டும். ஒருநாள், ரெக்கார்டிங் ஸ்டுடியோவில் நாங்கள் இரண்டு பேரும் விளம்பரத்தின் ஸ்கிரிப்ட் வருவதற்காகக் காத்துக் கொண்டிருந்தோம். அது வந்தபாடில்லை. எனக்கு போரடித்தது. என் கிடாரை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன். சட்டென்று, ஹரி, பாட ஆரம்பித்தார். சுற்றி இருந்தவர்கள் எங்களை நெருக்கி, ஆர்வமாய்க் கேட்க ஆரம்பித்தனர். நாங்கள் பாட்டு + கிடாரைத் தொடர்ந்தோம். அரைமணி நேரம் கழித்து ஸ்கிரிப்ட் வந்த போதுதான், நேரம் போவது தெரியாமல் பாடினதும் கிடார் இசைத்ததும் எங்களுக்குத் தெரிந்தது! பின், இதுவே எங்களுக்கு வழக்கமாகி விட்டது. நேரம் கிடைக்கிற போதெல்லாம் இணைந்து இசைக்க ஆரம்பித்தோம்!"

"இரண்டு பேரும் இணைந்து இசை ஆல்பங்கள் வெளியிடுவதுதான் உங்கள் ஆசையா?"

"ஆல்பம் வெளியீட்டை விட, மேடையில் 'லைவ்' பர்ஃபாமென்ஸில்தான் எங்களுக்கு ஆர்வமும், ஈடுபாடும் அதிகம். இந்தியாவின் நெம்பர் ஒன் லைவ் பர்பார்மர்ஸ் நாங்கள்தான். எங்கள் நிகழ்ச்சிகள் இந்தியாவில் மட்டுமின்றி, உலகெங்கும் நடந்து கொண்டிருக்கின்றன என்பது பெருமைக்குரிய விஷயம்."

"உங்கள் கூட்டணிக்கு 'கலோனியல் கஸின்ஸ்' என்று ஏன் பெயர் வைத்தீர்கள்?"

"சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கிப் பெயர் சூட்ட எனக்கு இஷ்டமில்லை. எங்களுடையது இந்திய இசையும், மேற்கத்திய இசையும் இணைந்த ஒரு ஃப்யூஷன் மியூஸிக். எனவே அதன் தன்மைக்கேற்றபடி பெயர் சூட்ட விரும்பினோம். இந்தப் பெயர் சூட்டினோம். இந்தப் பெயரை நாங்கள் தேர்ந்தெடுத்த விதம் கூட சற்றே வித்தியாசமானது. ஹரி, பிளீஸ்! அதைச் சொல்லுங்கள்!" என்றார் லெஸ்.

"நான் லண்டனுக்கு ஒரு சமயம் சென்றிருந்தேன். அங்கே சந்தித்த ஒரு இந்திய நண்பர் சொன்ன விஷயம் என் கவனத்தைச் சட்டென்று கவர்ந்தது. பேச்சோடு பேச்சாக, 'என் பிரிட்டிஷ் நண்பர்கள், என்னை எப்படிக் கூப்பிடுவார்கள் தெரியுமா? கலானியல் கஸின். அதாவது, பிரிட்டிஷ் காலனியான இந்தியாவைச் சேர்ந்த உறவுக்காரராம்!' அட! இதையே நமக்கும் பெயராக வைத்துக் கொள்ளலாமே என்று தோன்றியது. நாங்கள் இருவரும் கலோனியல் கஸின்ஸ் ஆனோம்!"

"உங்கள் மனதை விட்டு அகலாத மேடை நிகழ்ச்சி என்று எதனைக் குறிப்பிடுவீர்கள்?"

"லண்டனில், எம்.டீ.வி.க்காக நாங்கள் நடத்திய 'எம்.டீ.வி. –அன்பிளக்டு' என்ற நிகழ்ச்சியைத்தான் குறிப்பிட வேண்டும். சர்வதேச அளவில் அங்கீகாரம் இருந்தால்

தான் அதில் பங்கேற்க வாய்ப்புத் தருவார்கள். லண்டனில் நடந்த அந்த நிகழ்ச்சிக்கு பிரம் மாண்டமான கூட்டம். ஏழு கேமராக்கள் வைத்து, அந்த நிகழ்ச்சியைப் படம்பிடிப் பார்கள். எனவே எம். டீ.வி. நிர்வாகமும் சரி, ரசிகர்களும் சரி; மிக உயர்வான தரத்தை எதிர்பார்ப்பார்கள். அந்த நிகழ்ச்சியை நடத் திய முதல் இந்தியர் நாங்கள். ஆசியாவில் இரண்டாவது. அகில உலக அளவில் இசை வட்டாரத்தில், இத்தனை மியூஸிக் ஆல்பங் கள் வெளியிட்டிருக்கிறேன்; இவ்வளவு மேடை நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறேன் என் றெல்லாம் சொல்ல வேண்டாம். 'எம்.டீ.வி - அன்பிளக்டு' வாய்ப்பு தரப்பட்டது என் றாலே போதும், சல்யூட் அடிப்பார்கள்!"

"இரட்டையர்கள் சேர்ந்து இசையமைப் பது என்பது, இந்திப் பட உலகில் வெகு சகஜம். நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து படங் களுக்கு இசையமைக் கும் எண்ணம் உண்டா?"

"எங்கள் திருப்திக் காகத்தான் நாங்கள் இந்தத் துறையில் இருக் கிறோம். நாங்கள் எதி லும், யாருக்காகவும் காம்ப்ரமைஸ் செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லாமல், எங் களுக்குப் பிடித்ததைச் செய்து கொண்டிருக் கிறோம். ஆனால், சினிமா என்பது அப்படி இல்லை. டைரக்டர், புரொடியூசர் இவர்களையும் திருப்திப்படுத்த வேண்டும்; அவர்களைத் திருப்திப்படுத்து வதற்காக, எங்களுக்குப் பிடிக்காதவற்றை நாங்கள் செய்ய மாட்டோம்.

"நாங்கள் உருவாக்கியுள்ள இசையை திரையுலகத்தினர் பயன்படுத்திக் கொள்ள விரும்பினால், எங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை. அதே நேரம், எங்களைப் போலவே சிந்திக்கிற யாராவது அணுகி, இசையமைக்கச் சொன்னால், எதிர்காலத்தில் ஒப்புக் கொள்ளுவோமா என்னவோ?" (சிரிப்பு)

"ஹரிஹரன் சினிமாவில் பாடுவது போல, நீங்கள் ஏன் லெஸ்... பாடு வதில்லை?"

"அடிப்படையில் அவர் ஒரு பாடகர். அவரது குரல் வளத்தை மற்றவர்கள் பயன் படுத்திக் கொள்கிறார்கள். நான் பாடகனில் லையே!"

"நான் இசையமைத்தால், நிச்சயம் இவ ரைப் பாட வைத்து விடுவேன்" என்கிறார் ஹரிஹரன்.

"ஏன் ஹரி? என் மீது ஏதாவது கோபமா? பழிவாங்கும் திட்டம் ஏதும் கைவசம் உள் ளதா?" (இருவரும் சிரிக்கின்றனர்)

"லெஸ்... உங்கள் ஆல்பத்தில், நீங்கள் 'கிருஷ்ணா நீ பேகனே' பாடியிருக்கிறீர் களே! அந்த அனுபவம் எப்படி இருந்தது?"

"அது ஓர் இனிய அனுபவம். நான் பாடு வதற்கு முன் அதன் அர்த்தம் என்னவென்று கேட்டுத் தெரிந்து கொண்டேன். கிருஷ் ணனை இவ்வுலகிற்கு அழைப்பது போன்ற அந்த வரிகள், இன்றைய காலகட்டத்துக்கு ரொம்பப் பொருத்தமானது. நல்லதை விட கெட்டது மிஞ்சி விட் டதோ என்று நினைக்கத் தோன்றும் இந்தக் கட் டத்தில், இந்த பூமிக்குக் கிருஷ்ணன் மட்டு மில்லை, ஜீஸஸ், அல்லா, புத்தர் எல்லோருமே குழந்தைகளாய்ப் பிறந்து வர வேண்டும் என்று தான் நான் நினைக் கிறேன்."

• ஹரிஹரன்



"ரொம்ப வித்தியாச மான முறையில் உடை அணிகிறீர்களே? இப் படியெல்லாம் கிரேஸி யாக நகைகள் அணி கிறீர்களே?"

"எங்களுடைய இசை இந்தியன் கிளாஸிகல் + வெஸ்டர்ன் இணைந்த 'ஃப்யூஷன்' இசை. இரண்டுவித மான இசைகளிலிருந்தும் எங்களுடையது மாறுபட்ட ஒன்று என்பதாலும், எங்களுடை யது பெரும்பாலும் மேடை நிகழ்ச்சி என்ப தாலும் வித்தியாசமான உடை, முடி அமைப்பு, நகைகள் இவைகள் தேவை என்று நினைக்கிறோம்."

"ஹரி, 'லெஸ்' பற்றி ஒரு வரியில் கமெண்ட்?"

"லெஸ் ஒரு பர்பெக்ஷனிஸ்ட்."

"லெஸ், ஹரியைப் பற்றிய உங்கள் கமெண்ட்?"

"இந்த உலகில் என்னை ஆழமாய் நேசிக் கும், என்னால் நேசிக்கப்படும் மனிதர்."

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**



• விறுவிறுப்பு....



• பரபரப்பு....

ஆல்ரவுண்டர் ~~அழகிப்~~ போட்டி!

பெண்களுக்குப் போட்டி என்றாலே அழகிப் போட்டி, சமையல் போட்டி, நீண்ட கூந்தல் போட்டி என்கிற ரீதியில்தான் அமைய வேண்டுமா?

'அவசியம் இல்லை' என்று 'திருப்தி' கோதுமை மாவு தயாரிப்பாளர்களான என்.எ.பி.சி. நிறுவனம் அண்மையில் நடத்திய போட்டியைப் பார்த்தவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள். அவர்கள் 'ஆஜ் கி நாரி' (இந்த இந்திப் பதத்துக்கு 'இன்றைய பெண்மணி' என்று பொருள் கொள்க!) என்று ஒரு போட்டி நடத்தினார்கள்.

பத்துப் பெண்மணிகளை, ஸ்லோகன் எழுதியதன் அடிப்படையில் தேர்ந்தெடுத்திருந்தனர். பத்து டேபிள்கள். ஒவ்வொன்றிலும் கேஸ் அடுப்பில் தொடங்கி, இடுக்கி, கத்தி, ஸ்பூன் வரை அத்தனையும் புத்தம் புதுசு. ஒரு தட்டில் கேரட், பீன்ஸ், தக்காளி.... அட, வெங்காயம், கொத்து மல்லி, கருவேப்பிலை இத்யாதி. இன்னொரு புறம் ரவை, சர்க்கரை, கோதுமை மாவு, மைதா, எண்ணெய், கொத்தாய் பல வகைப் பூக்கள். ஒரு துணி, பட்டன், ஊசி நூல் இவை தவிர இரண்டு கவர்கள்.

'போட்டியில் கலந்து கொள்கிறவர்கள், வீட்டுக்குப் போகிறபோது இத்தனை புது ஐட்டங்களையும் தங்களுடனேயே எடுத்துக் கொண்டு போய் விடலாமா?' என்ற ஒரு பெண்மணியின் சந்தேக முகத்தில், "போட்டியின் போது பயன்படுத்துவதற்குத்தான்" என்ற பதிலைக் கேட்டவுடன் லேசான வருத்தம்.

போட்டிக்கு ஏற்பாடுகள் செய்திருந்த ஆனந்த் விஸ்வநாதனும், அவர் மனைவி வாணியும் விதிமுறைகளை விளக்கினார்கள்.



ஸ்ரீரஞ்சனி : 'இன்றைய பெண்'!

மொத்த நேரம் முப்பது நிமிடங்கள்! இந்த அரை மணி நேரத்தில், ஏதேனும் ஓர் ஐட்டம் சமைப்பதுடன், ஒரு பட்டனை, துணியில் வைத்துத் தைக்க வேண்டும். பூக்களைப் பயன்படுத்தி, 'மலர் அலங்காரம்' செய்ய வேண்டும். ஒரு கவரில் வைக்கப்பட்டிருக்கும் குறுக்கெழுத்துப் புதிருக்கு விடை எழுத வேண்டும்; நாட்டு நடப்பு, பெண்களின் உலகம், விளம்பரங்கள், டெலிவிஷன் போன்றவை குறித்த கேள்விகள் அடங்கிய



• சுறுசுறுப்பு...



• படபடப்பு...

'குவிஸ்'க்கு விடை எழுத வேண்டும்.

ஆக, அரை மணி நேரத்தில் ஐந்து வித்தியாசமான வேலைகளை முடிக்க வேண்டும்!

போலீஸ் அதிகாரி பிரதீப் பிலிப், வர்ணனையாளர் பி.சி. ராமகிருஷ்ணா, மாடல் கம் நடிகர் முரளி மோகன், அழகி ரீச்சா சோயல், வழக்கறிஞர் ராதா ஸ்ரீனிவாசன் ஐவரும் நடுவர்கள்.

போட்டி ஆரம்பித்த அடுத்த அரை மணி நேரத்தில் நடந்தவற்றின் சுருக்கமான நேர்முக வர்ணனை :

● டென்ஷனுடன் பீன்ஸ் நறுக்க ஆரம்பித்த பெண்மணி நறுக்கியது பீன்ஸா, பீட்ரூட்டா என்று சந்தேகம் வந்து விட்டது. காரணம், புதுக் கத்தியின் கூர்மை விரலையும் சேர்த்துப் பதம் பார்த்து விட்டது!

● ரொம்ப ஸ்மார்ட் பெண்மணி ஒருவர், வாணலியில் ரவையைப் போட்டு விட்டு, குறுக்கெழுத்துப் புதிரில் மூழ்க, ரவை தீய்ந்தே போய் விட்டது! அப்புறம் அதைச் சுரண்டி எடுக்க அவர் பட்டபாடு... பரிதாபம்!

● எடுத்தவுடன், மடமடவென்று பட்டன் தைக்கிற பணியை நாலைந்து பேர் செய்து முடித்தாலும், ஒருவர் ஊசியில் நூல் கோக்கவே திணறிப் போனார். டென்ஷன்! டென்ஷன்!

● பூங்கொத்துகளை, கத்திரியால் சட் சட் என்று வெட்டின ஒரு பெண்மணி, இரண்டே நிமிடத்தில் செய்து முடித்த அலங்காரம் – வாவ்!

● பூரி போன்ற சாதாரண ஐட்டங்களைக் கூட, தட்டில் அலங்காரமாய் வைத்து, கொத்துமல்லி தூவி, பச்சை மிளகாய், வற்றல் மிளகாய் பயன்படுத்தி அலங்கரித்திருந்தது, பளிச்சென்றிருந்தது.

● எல்லாவற்றையும் முடித்தபின், டேபிளில் நறுக்கிப் போட்ட, சிந்தி விட்ட சமாசாரங்களைச் சுத்தம் செய்து, 'நீட்'டாக மேஜையை ஆக்கியதற்குக் கூட மார்க் அளிக்கப்பட்டது!

● தயாரிக்கப்பட்ட உணவு ஐட்டங்களில் உப்புமா, பரோட்டா, குல்சா, பூரி, கேசரி, அனைத்தும் அடங்கும்.

● குறுக்கெழுத்துப் புதிரில் நாலு பேர் பத்து விடைகளையும் சரியாக எழுதியிருந்தனர். மூன்று பேர் 'முட்டை' வாங்கியிருந்தனர். (ஆனாலும் சமையலுக்கு அதைப் பயன்படுத்தவில்லை)

● 'க்விஸ்'ஸில் கேட்கப்பட்ட கேள்விகளில் சாம்பிளுக்குச் சில : பெமினா பத்திரிகையின் விலை என்ன? சென்னையில் உள்ள ஒரே மெக்ஸிகன் உணவகம் எது? டெலிவிஷனில் ஒளிபரப்பாகும் மாமியார் – மருமகள் சண்டை அடிப்படையில் அமைந்த 'தூ தூ மே மே' தொடரின் விளம்பரதாரர்கள் யார்?

● 'குவிஸ்'ஸில் மூன்று பேர் பத்துக்குப் பத்து மார்க் வாங்கியவர்கள்.

"இவர்கள் பிஸியாக போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறபோதே, ஒவ்வொரு டேபிளிலும் ஒரு டெலிபோன் வைத்து, அதன் மூலம் அவர்களுக்குத் தொடர்ந்து உபரியாய் ஒருவித தொந்தரவு தரவும் திட்டமிட்டிருந்தோம். அதற்குரிய வசதிகள் இல்லாததால் விட்டு விட்டோம்" என்றார் ஆனந்த விஸ்வநாதன்.

போட்டியில் வெற்றி பெற்ற பெண்மணி ஸ்ரீரஞ்சனி ராஜசேகர். பெரம்பூரில் வசிக்கும் குடும்பத் தலைவி. கணவர் ராஜசேகர் இந்தியன் வங்கியில் பணிபுரிகிறார்.

'இன்றைய பெண்மணி'யாய்த் தேர்வானதற்காக வாழ்த்தி விட்டு, விசாரித்தோம்.

சிறு வயது முதலே ஸ்ரீரஞ்சனி ஒரு ஆல்ரவுண்டர். விளையாட்டு, நடனம், பேச்சுப் போட்டி, பெயின்டிங், கவிதை எழுதுவது என்று அனைத்திலும் ஆர்வம் உண்டு. 'ஆனாலும் குடும்பப் பொறுப்புகளை கவனிப்பதில்தான் எனக்கு ஆர்வம் அதிகம்' என்கிறார். கூட்டுக் குடும்பத்தில் வாழும் இந்த தம்பதிக்கு மைத்ரேயா என்று மூன்றரை வயதில் ஒரு பையன். விரைவில் இவரை சின்னத் திரையில் மட்டுமின்றி சினிமாவிலும் பார்க்கலாம். ஆம்! பாலசந்தரின் 'காசளவு நேசம்' தொடரிலும், 'இஞ்சினியர்' படத்திலும் ஸ்ரீரஞ்சனி நடிக்கிறார்!

— **மௌலஷ்மி**

படங்கள் : **யோகா**



பூதம்

• அம்பானி

இந்தியாவின் பெரும் பணக்கார நிறுவனங்களுள் முக்கியமானது, ரிலையன்ஸ். அம்பானியைத் தெரியுமல்லவா? அவருக்கு அஷ்டமத்தில் சனியோ என்னவோ. அடுத்தடுத்துக் கஷ்டங்கள்.

ரமேஷ் சர்மா விவகாரத்தில் ரிலையன்ஸின் முக்கியப் புள்ளி பாலுவின் பெயர் அடிபட்டது முதலாவது. அதிலாவது, 'பாலுவின் தனிப்பட்ட தொடர்புகளுக்கும் நிறுவனத்துக்கும் சம்பந்தமில்லை' என்று சொல்லித் தப்பிக்கப் பார்க்க ஒரு வாய்ப்பு இருந்தது.

இரண்டாவது புயலால் பெரும் சேதம். நிறுவனத்தின் பெயருக்கு, புகழுக்கு, வளர்ச்சிக்கு.

நவம்பர் – 20 அன்று மும்பையிலுள்ள அம்பானியின் அடுக்கு மாடி ஃப்ளாட்டுக்கு ஒரு சி.பி.ஐ. குழு வந்தது. கையில் ஸர்ச் வாரன்ட்!

அம்பானியின் வீட்டில் சோதனை நடந்த அதே நேரத்தில் மும்பையில், தில்லியில், வேறு பல இடங்களிலுள்ள ரிலையன்ஸ் அலுவலகங்களிலும் சி.பி.ஐ. நுழைந்திருந்தது! கடுமையான சோதனை. பல முக்கிய – ரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த முப்பத்தாறு வருடங்களில் முன்னதாக இரு சோதனைகள் இதேபோல் மேற்கொள்ளப்பட்டனவென்றாலும் இத்தனை தீவிரம் இல்லை என்கிறார்கள்.

எதற்காக இந்தச் சோதனை? இதுதான் மில்லியன் டாலர் கேள்வி.

புது தில்லியிலுள்ள ரிலையன்ஸ் அலுவலகத்தில் சோதனையிட்டபோது அதிகாரிகளுக்கு பலத்த அதிர்ச்சி.

காரணம், அரசின் வர்த்தகக் கொள்கைகள், புதிய முடிவுகள், விளக்க அறிக்கைகளெல்லாம், நிதி நிறுவனங்கள் அளிக்கும் 'முன் தேதியிட்ட காசோலை' போல முன்னதாகவே அங்கே ஜெராக்ஸ் அவதாரம் எடுத்திருந்தன.

அதாவது, அதிகாரபூர்வமாக அரசு ஒரு முடிவு எடுக்கிறதென்றால், அதை அறிவிப்பதற்கு முன்பே, ஆணைகளின் நகல் ரிலையன்ஸுக்கு வந்து விடுகின்றன, ரகசியமாக!

பெரும் தொழில் நிறுவனங்களுக்கும் அரசின் சில மேல்மட்ட மனிதர்களுக்கும் இடையே எப்போதும் உள்ள 'நல்லுறவு' காரணமாக இப்படி நடப்பது சகஜம்தான். ஆனால் ரிலையன்ஸ் விஷயத்தில் விவகாரம் இன்னும் கொஞ்சம் சிக்கலானது.

அம்பானியின் நட்பு வட்டம் மிகப் பெரியது. பிரதமர் வாஜ்பேயி ஆகட்டும், அவரது வலக்கரம் பிரமோத் மகாஜனாகட்டும், பெட்ரோலியத் துறை அமைச்சர் வாழப்பாடியாகட்டும், நிதித்துறைச் செயலராகட்டும் – எல்லோருமே அவருக்கு 'நெருக்கமான'வர்கள். முன்னறிவிப்பின்றி (முன் தகவலின்றி) சி.பி.ஐ. அவர் வீட்டிலும் அலுவலகங்களிலும் நுழைவதென்பது கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத விஷயம்.

அப்படியும் அது நடந்து விடக் காரணம் என்ன?

"இது தொழில் யுத்தம். என் எதிரிகளின் சதி" என்கிறார் அம்பானி.

எதிரிகள்?

அம்பானி க்ரூப்பின் தொழில் முறை எதிரி பாம்பே டையிங் நிறுவனம். இதன் அதிபர் நுஸ்லி வாடியா, டாடா க்ரூப்பின் ரத்தன் டாட்டாவுக்கு ரொம்ப சிநேகம். டாடாவுக்கும் ரிலையன்ஸுக்கும் ஏற்கெனவே ஆகாது. ஆக,

எதிரிக்கு எதிரி ஃபார்முலா வேலை செய் திருப்பதாக நம்புகிறார் அம்பானி.

"இது என்ன அபத்தம்? பாம்பே டையிங் கின் வருமானம் எப்போதுமே ரிலையன்ஸின் வருமானத்தை நெருங்கியதில்லை. வாடியா லைப் போட்டியாகக் கருதுவதும் வீண் பழி போடுவதும் சரியல்ல" என்று அத் தரப்புக்கு ஆதரவுக் குரல் எழுப்பினார் தொழிலதிபர்-கம்-அரசியல்வாதி ஜெயந்த் மல்ஹோத்ரா.

ஆனால் நடந்த விஷயம் வேறு என்கிறது புதுதில்லி தொழில் துறை வட்டாரம்.

ரத்தன் டாடாவின் டாடா டீ நிறுவனத் துக்கு (அஸ்ஸாமில்) உல்ஃபா தீவிரவாதி களுடனான தொடர்பு பற்றி வெளிப்படுத் தியதில் ரிலையன்ஸ் முக்கியப் புள்ளிகளுக்குப் பெரும் பங்கு உண்டாம். அதற்காகப் பழி வாங்கக் காத்திருந்தது 'டாடா'. பாம்பே டையிங் உதவியுடன் அதனைச் சாதித்துக் கொண் டார்கள் என்பது ஊர் வம்புப் பேச்சு.

கிளம்பப் போகிறது?!

தொழில் முதலைகளின் போட்டி – பழி வாங்கல் நடவடிக்கை என்றே இருந்தாலும் ரெய்டு நடத்தியிருப்பது சி.பி.ஐ. பிரதமரின் நேரடி கவனத்தில் இயங்கும் துறை.

பா.ஜ.கவுடன் அம்பானியின் நல்லுறவு உலகப் பிரசித்தம். ஒரே ஒரு சம்பவம் தான் – அத்வானிக்குப் பிடிக்காமல் போன ரிலையன்ஸின் நடவடிக்கை என் கிறார்கள்.

1995 மற்றும் 97-ல் குஜராத் முதல்வர் சங்கர்சிங் வகேலாவுக்கு ரிலையன்ஸ் 'தேர்தல் நிதி' உதவி செய்த சம்பவம் அது.

பா.ஜ.க.வுக்கே தலைவலியாக இருந்த 'கிளர்ச்சியாளர்' வகேலாவுக்கு இவர்கள் உதவி செய்ததோடு மட்டுமல்லாமல், அவர் மூலம் குஜராத்தில் 27 மில்லியன் டன் ரிபைனரி ப்ராஜக்ட் ஒன்றுக்கு அனுமதியும் பெற்றுக் கொண்டது அத்வானிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையாம்.

ஆனால், காரணம் இவை எதுவுமே இல்லை என்கிறது தொழில் துறை வட் டாரம்.

நிர்வாகத் தேக்க நிலை, விலைவாசி உயர்வு, கூட்டணி மிரட்டல் உள்ளிட்ட வண்டி வண்டியான காரணங்களால் சரிந்து கிடக்கும் தனது இமேஜ் பற்றிய கவலை பா.ஜ.கவுக்குச் சற்று அதிகமாகவே இருக்கிறதாம். நான்கு மாநில சட்டமன்றத் தேர்தல்களுக்குச் சற்று முன்னதாக வெடித்த ரமேஷ் சர்மா விவ காரத்தைத் தங்கு தடையின்றி விசாரித்து, விரைந்து செயல்படுவதன் மூலம் ஓரளவு சரிந்து கிடக்கும் தன் இமேஜை உயர்த்தலாம் என்ற நம்பிக்கை, பா.ஜ.கவுக்கு.

அதன் அடிப்படையில், ரமேஷ் சர்மா வுக்கும் ரிலையன்ஸ் பாலுவுக்கும் உள்ள 'நெருக்கம்' பற்றித் துப்புத் துலங்க, தில்லி யிலுள்ள ரிலையன்ஸ் அலுவலகத்தைக் கிளறியபோது அகப்பட்டவைதான் அந்த அரசாங்க ரகசியங்கள்.

சி.பி.ஐ. இயக்குநர் த்ரிநாத் மிஸ்ரா காட் டிய தீவிரத்தால், மும்பையிலுள்ள அம்பானி வீடு வரை ரெய்டுப் புயல் பரவித் தாக்கி விட்டது.

இப்போது ரிலை யன்ஸுடனான நல்லுறவு அறுபட்டதில் (தேர்தல் களிலும் தோற்றதில்!) பா.ஜ.கவுக்குத் தனிப்பட்ட வருத்தம்.

அம்பானியோ, "ரகசிய ஆவணங்களை வைத்திருப்பதாக எங்கள் மீது குற்றம் சாட்டும் அதேவேளையில், அவற்றை எங்களுக்குத் 'தந்துதவிய' பா.ஜ. அரசின் மேல் மட்டப் புள்ளிகள் மீதும் நடவடிக்கை எடுப்பார்கள் அல்லவா? பார்க் கிறேன் ஒரு கை!" என்று பூதம் கிளப்பு கிறார்.


அப்படியொரு நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில், 'ஊழலில்லாத அரசு' என்கிற நற்பெயர் பா.ஜ.கவை விட்டு ஓடிப் போய் விடும்!

இக்குத் தெரியாமல் திணறுகிறார் வாஜ் பேயி!

கொஞ்சம் போல் சரிந்து விட்ட நற் பெயரைத் தூக்கி நிறுத்த (ரூ. 150 விற்ற ரிலையன்ஸ் ஷேர்கள் இக்கட்டுரை எழுதும் போது ரூ. 118க்கு இறங்கி விட்டன.) முனைப்புடன் பணியாற்றிக் கொண்டிருக் கிறார் அம்பானி.

— ஔரங்கசீப்

விண்வெளி விடுதி



• பிரகாசமான விளக்கொளியில் அஸ்திவாரமின்றி வானில் தொங்கவுள்ள விண்வெளி ஓட்டல் இதுதான்!

கடந்த வருடம்... ஒரு பரிசோதனை முயற்சியாக 'எக்ஸ்பிரைஸ்' எனும் கலம் மூலம் மூன்று பயணிகளைச் சுமந்து கொண்டு பூமிக்கு நூறு கிலோமீட்டர் உயரத்தில் பறந்திருக்கிறார்கள் நாஸாவின் சில விஞ்ஞானிகள். விண்வெளியின் துவக்கம் என்று பூகோள ரீதியாக வகுக்கப்பட்டுள்ள எல்லைக் கோட்டுப் பகுதி இந்த நூறாவது கி.மீ.

'விண்வெளியின் இப் பகுதியில் ஒரு விடுதியை அமைத்து, உல்லாசப் பயணிகளை அதற்குள் இட்டுச் சென்று, விண்வெளிச் சுற்றுலாவுக்குப் பிள்ளையார் சுழி இட்டு வைத்தால்...' என்று ஒரு சிந்தனை! இதன் விளைவே 'விண்வெளி ஓட்டல்'!

பூமிக்கு மேல் நூறு முதல் முன்னூறு கிலோ

மீட்டருக்குள், தனக்கென வடிவமைக்கப்பட்டுள்ள சுற்றுப் பாதையில் சுழன்று கொண்டிருக்கப் போகிறது, இந்த மாபெரும் - விண்வெளி ஓட்டல்! இந்த ஓட்டலுக்கு, உல்லாசப் பயணிகளை ஒரு விண்வெளி ஓடம் இட்டுச் செல்லும். பூமியிலிருந்து புறப்படும் ஓடம், தன் பயணத்தின் முடிவில் ஓட்டலின் சுற்றுப் பாதையில் இறங்கி, பிறகு ஓட்டலுக்குள்ளும் நுழைந்து, பிரயாணிகளை இறக்கி விடும்!

மில்லியன் மில்லியனாக டாலர்கள் கொட்டப்பட்டு விண்வெளியில் ஓட்டல் நிர்மாணிக்கப்பட்டு வருவது உண்மை! ஆக்ஸிஜனை நிலைப்படுத்துவது - புவி ஈர்ப்பினை, மாற்றமின்றி அந்த விடுதியிலும் உண்டு பண்ணுவது - விண்கற்கள் போன்ற விண்வெளி எதிரிகளிடமிருந்து விடுதியைக் காப்பாற்றுவது - என, அனைத்து விஷயங்களும் கண்ணும் கருத்துமாக கவனத்தில் கொள்ளப்பட்டன. 2003 வாக்கில் முழு வீச்சில் இயங்கவுள்ளது இச் 'சுற்றுலாத் தலம்'.

அமெரிக்காவும் ரஷ்யாவும் - இதை நிர்மாணிக்கும் விஷயத்தில் கை கோத்துக் கொண்டிருக்கின்றன.

இருபத்து நான்கு டன் எடை கொண்ட விண்வெளி விடுதியின் இதயப் பகுதியை ரஷ்ய விண்வெளித் தளத்திலிருந்து, சென்ற மாதம் செலுத்திவிட்டார்கள்! புறப்பட்ட பத்தே நிமிடத்தில், பூமிக்கு மேலே 200 கிலோ மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த தன் சுற்றுப்பாதையில் நுழைந்து, அப்பகுதி இயங்க ஆரம்பித்து விட்டது. இப் பகுதியோடு, விடுதியின் மற்ற உதிரிப் பகுதிகளை, இன்னும் ஒரு வருடத்திற்குள் இணைத்து, விடுதியைக் கட்டி முடித்து விடுவார்கள்! இம்மி பிசகின்றி சூரியனிடமிருந்து சக்தி பெற்று, இதயப் பகுதி, ஜாம் ஜாமென்று இயங்கி வருகிறது!

அடுத்த மாதம், பத்து விண்வெளி வீரர்கள், இருபதுக்கும் மேற்பட்ட ஓட்டல் அறைகளைச் சுமந்து கொண்டு (!) அங்கு செல்லவிருக்கிறார்கள். விண்வெளியில் நடந்தபடியே, ஒவ்வொரு அறையாக, விடுதியின் இதயப் பகுதியோடு இணைக்கப்பட்டு, விடுதி பூர்த்தி பெறும்.

பற்பல அமெரிக்கர்கள், இப்போதே பிரயாணக் கட்டணத்தைக் கட்டி விட்டு, க்யூவில் காத்திருக்கிறார்கள் என்பது போனஸ் செய்தி! 70களில் பிரமிக்க வைத்த கம்ப்யூட்டர் இப்போது சர்வ சாதாரணமாக மாறி விட்டது போல, விண்வெளி சுற்றுலாவும் பேசப்படும் காலம் வெகு அருகில்! அது சரி. இந்த 'ஓட்டலுக்குப்' போகக் கட்டணம் எவ்வளவு தெரியுமா?

ஒரு லட்சம் டாலர்கள்!

— கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்

ஐரோப்பா வரவேற்கும் ஹனுமான்!

பிரெஞ்சு இயக்குனர் ஒருவர் ஹனுமான் என்ற தலைப்பில் திரைப்படம் எடுத்திருக்கிறார். இது குரங்குகளைப் பற்றியது. இந்தியாவின் பல்வேறு நகரங்களுக்கும் சென்று படம் பிடித்திருக்கிறார். குரங்குகள் கடவுளுக்குச் சமம், காதலர்களை சேர்த்து வைப்பது, வில்லன்களைப் பிடித்துத் தருவது போன்ற பல காரியங்களைச் செய்யும் என்று காட்டுகிறார். ஐரோப்பாவில் ஹனுமானுக்கு பலத்த வரவேற்பு!



— பாரீஸ் பார்த்தசாரதி

கார்ப்பரேட் மகா ராஜாக்கள்!

தொழில்துறையில் மந்த நிலை காரணமாக, இசை நிகழ்ச்சிகளுக்கான ஸ்பான்சர்ஷிப் குறைந்து போய் விட்டது என்று போன வருடமே சபாக்காரர்கள் சொன்னார்கள். அப்படியும் நவம்பர் டு ஜனவரி, 2035 இசை - நடன நிகழ்ச்சிகள் நடந்ததாக ஒரு புள்ளி விவரம் சொல்லுகிறது.

இந்த வருடம் எப்படி?


''மியூசிக் அகடமியில் உறுப்பினராக உள்ள சில தொழிலதிபர்கள் வழக்கம் போல, தாங்களாகவே முன்வந்து கொடுக்கும் ஸ்பான்சர்ஷிப்பில் ஏதும் குறைத்து விடவில்லை. ஆனால், மொத்தத்தில் சுமார் 30 சதவிகிதம் ஸ்பான்சர்ஷிப் குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். உதாரணமாக, ஒரு பெரிய தொழில் நிறுவனம், ஆறு சபாக்களுக்குக் கொடுத்து வந்த மொத்தத் தொகையைக் குறைத்துக் கொண்டு, நான்கு சபாக்களுக்கு மட்டுமே கொடுக்கிற மாதிரி ஆகிவிட்டது!'' என்றார் செயலர் எம்.எஸ். வெங்கட்ராமன்.

எல்லா வருடமும் மியூசிக் அகடமி ஸாவனீரை அங்கத்தினர்களுக்கு இலவசமாகக் கொடுப்பார்கள். இந்தத் தடவை அதற்குப் பத்து ரூபாய் விலை வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோம்.

இந்த வருடம் மியூசிக் அகடமிக்குப் பெரிய அளவில் கை கொடுத்திருக்கும் நிறுவனம் ICICI.

அதன் தலைவர் வாகுலைச் சந்தித்த போது மியூசிக் அகடமிக்கு ஒரு 'கணிசமான' தொகை கொடுத்திருப்பதாகச் சொன்னார். கட்டடப் பராமரிப்பு, மற்றும் லிஃப்ட் நிறுவும் பணிகளுக்காக இந்த நிதி உதவி கோரப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

''முன்பு அரசர்கள் கலைகளை வளர்த்தார்கள். இப்போது கார்ப்பரேட் மகாராஜாக்கள் அந்த வேலையைச் செய்தாக வேண்டும். அது தொழில் நிறுவனங்களின் சமூகக் கடமை என்று நான் நினைக்கிறேன்!'' என்ற வாகுல், ''இதனால் எங்களுக்கு என்ன லாபம் கிடைக்கிறது என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால், அப்புறம் அப்படி நிதி கொடுப்பதற்கு அர்த்தமே இருக்காது! Advertisement என்று வேண்டுமானால் சொல்லலாம்!'' என்றார்.



• வெங்கட்ராமன்



• வாகுல்

கிருஷ்ணகான சபா செயலர் யக்ஞராமன், ''சாதாரணமாக, ஸ்பான்சர்ஷிப் கிடைக்கிற வருடங்களில் மிஞ்சுகிற தொகையை சேமித்து வைப்பது உண்டு. போன வருடம் குறைந்து போயிற்று. இந்த வருடமோ ஸ்பான்சர்ஷிப்பே இல்லை. ஆனால் டிக்கட் விற்பனையை மட்டுமே வைத்துக் கொண்டு விழாவை நடத்தி, முடித்து விடுவோம். ரசிகர்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது!'' என்றார்.

''நாங்கள் சாதாரணமாகவே ஸ்பான்சர்களை நாடிப் போவது இல்லை. அதனால் ஸ்பான்சர்கள் ஆதரவு கூடியிருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்ற பிரச்னையில் நாங்கள் சிக்கிக் கொள்ளவில்லை!'' என்றார் நாரத கான சபாவின் செயலர் ஆர். கிருஷ்ணசாமி.

மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் விஷயத்திலும் ஸ்பான்சர்ஷிப் ஆதரவு

இல்லை என்றார் அதன் செயலர் வெங்கட்ராமன். சென்ற வருடம் பிலிப்ஸ் நிறுவனம் அளித்த ஸ்பான்சர்ஷிப் ஆதரவு, இந்த வருடம் கிடைக்க வில்லையாம். (டீ.வி பாதிப்பு?) ''காலை ஹரி கதை நிகழ்ச்சி முதல், மாலை மூன்று மணி இசை நிகழ்ச்சி வரை அத்தனையும் இலவசம்தான். ஆறரை மணி கச்சேரி களுக்கு மட்டுமே டிக்கட். ஆனால் எங்கள் உறுப்பினர்களுக்கு மாதாந்திர மெம்பர்ஷிப் டிக்கட்டோடு, இந்த டிசம்பர் சீசன் விழா டிக் கட்டுகளையும் சேர்த்தே கொடுத்து விடு கிறோம். விழா வுக்கு என்று உறுப் பினர் களுக்கு தனி யாக சீசன் டிக்கட் விற்பனை இல்லை!''


• வெங்கட்ராமன்


• ஆர். கிருஷ்ணசாமி


• ஏவிஎஸ். ராஜா


• ராமச்சந்திரன்

என்றார் வெங் கட்ராமன்.

அடுத்த வருடம், ஸ்பான்சர்ஷிப் இல்லாதபட்சத்தில், பிற்பகல் கச்சேரி யிலிருந்தே டிக்கட் சிஸ்டம் கொண்டு வந்து விடும் யோசனையும் இருக்கிற தாம்!

● இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைடிக்கு, வழக்கம் போல 'டெக்கான் ஹெரால்ட்' பத்திரிகை வெளியிடும் பிரிண்டர்ஸ் (மைசூர்) லிமிடெட் தவிர, நல்லி சின்னசாமி செட்டி நிறுவனம், மற்றும் தொழிலதிபர் ஓபுல் ரெட்டி ஆகி யோரது ஒத்துழைப்புக் கிடைத்திருக் கிறது.

● தமிழிசைச் சங்கத்துக்கு, எம்.ஏ.சி. குழுமத்தைச் சேர்ந்த நிறுவனங்கள், நாளுக்கு ஒன்றாக நிகழ்ச்சிகளை ஸ்பான் சர் செய்கின்றன. அவர்களுக்குப் பிரச்னை ஏதும் இல்லை.

● கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் இசை - நடன விழாவுக்கு வழக்கம் போல பாண்ட்ஸ் போன்ற நிறுவனங்களின் ஸ்பான்சர்ஷிப் இந்த வருடமும் உண்டு. ''ஆனால் விழாவின் முக்கிய ஸ்பான் சர்கள் இந்த வருடம் இந்தியன் ஆயில் கம்பெனிதான்!'' என்றார் அதன் தலைவர் ஏ.வி.எஸ். ராஜா.

'ஹம்சத்வனி'யின் நிதி நிலைமை படு ஸ்ட்ராங். அவர்களுடைய கார்ப்பஸ் ஃபண்ட் கிட்டத்தட்ட 28 லட்சமாம். ''அதனால் நாங்கள் ஸ்பான்சர்களைத் தேடிப் போகவில்லை. டிக்கட் விற்பனை, தவிர உறுப்பினர்களின் சந்தா இவற் றைக் கொண்டே விழாவை நடத்து கிறோம். எங்கள் உறுப்பினர் எண்ணிக் கையும் சுமார் 850. ஒரு டிக்கட் டுக்கு இருவர் வர அனுமதி இருப்பதால் கிட்டத் தட்ட, ஒரு நிகழ்ச்சிக்கு 1500 பேர் வருகிறார்கள்... எங்கள் சபா, கலைஞர் களுக்குக் கொடுக்கும் சன்மானமும் மற்றவர்களைவிட அதிகம்தான். அத னால்தான் கலைஞர்களும் எங்கள் நிகழ்ச்சிக்கு வர மகிழ்ச்சியோடு ஒப்புதல் தருகிறார்கள்!'' என்றார் ஹம்சத்வனி ராமச்சந்திரன்.

ஸ்பான்சர்ஷிப் பெறும் சபாக்கள், கலைஞர்களுக்குக் 'கணிசமான' சன்மானம் வழங்குகிறதா? அதற்கு இன் னொரு சர்வேதான் நடத்த வேண் டும்!

— சாருகேசி

மேலும் இசைவிழா சிறப்புக் கட்டுரைகள் பக்கம் 70விருந்து 77 வரை.

புதையல்

2

அதிகாலையிலேயே அவர்கள் தயாராகி இருந்தார்கள். கூடாரங்களின் நடுவில் இருந்த திறந்த வெளியில் கூடி இருந்த அவர்களைப் பார்த்துப் பேராசிரியர் பேச ஆரம்பித்தார்.

“நாம் இப்ப மேற்குப் பக்கமா போறோம். அதோ அந்த ரெண்டு மலைகளுக்கு நடுவுல போய் அந்தப் பக்கத்தை அடையறோம். அங்க ஒரு கூம்பின தாமரை மொட்டு வடிவத்துல இருக்கற ஒரு பதினைஞ்சு அடி உயரக் கல்லை நாம் தேடிக் கண்டுபிடிக்கப் போறோம்.”

வேலையாட்களின் லீடரைத் தம் அருகே அழைத்துச் சொன்னார். அவன் தன்னுடன் இரண்டு ஆட்களை அழைத்துக் கொண்டு கடைசி கூடாரத்திற்குச் சென்றான். அவர்கள் திரும்பி வரும்போது, ஒரு மரக் கூண்டை எடுத்து வந்தார்கள். அதனுள் உயிருடன் மூன்று கருங்குரங்குகள்.

“என்னப்பா இது?” என்றான் ப்ரேம்.

“தேவைப்படுது ப்ரேம்...” என்றார் பேராசிரியர்.

“எங்க புடிச்சீங்க இதை?”

“நான் முன்னாடியே ஏற்பாடு பண்ணி வச்சிருந்தேன். நாம் போபால் வரும்போதே, அங்க இந்தக் குரங்குங்க ரெடியா இருந்தது. இந்தப் பிரதேசத்துல இருக்கற குரங்குங்க தான்.”

“எங்ககிட்ட சொல்லவேயில்லையேப்பா?” என்ற ப்ரேமை பேராசிரியரின் ஒரு கோபப் பார்வை அமைதிப்படுத்தியது.

அவர்கள் கிளம்பினார்கள். லேசான மயக்க மருந்து கொடுக்கப்பட்டு பாதி மயக்கத்தில் இருந்த அந்தக் குரங்குகள் அமைதியாகவே இருந்தன. அந்தச் சிறிய ஊர்வலம் மேற்காக நகர்ந்து இரண்டு மலைகளுக்கு இடையில் இருந்த சிறிய பள்ளத்தாக்கு வழியாக மறுபுறத்திற்குச் சென்றது.

அங்கே அடர்ந்த காடு இவர்களை வரவேற்றது. இதுவரை அவர்கள் பார்வைக்கு மெலிதாகத் தெரிந்த பாதை, இல்லாமல் போனது. பல்வேறு பறவைகள் மற்றும் சில மிருகங்களின் சத்தங்கள் காற்றை ஆக்ரமித்திருந்தன. ஈரமும் மக்கலுமாய் வந்த மரவாசனை அவர்களை சற்றே திணறடித்தது.

சற்று நேரம் கழித்து, பேராசிரியர் நின்றார். தோளில் தொங்க விடப்பட்டிருந்த தோல் பையில் இருந்து அந்த செப்பேடுகளின் குறிப்புகள் அடங்கிய ஃபைலை எடுத்தார். அதைத் திறந்து புரட்டினார். பின்னர் தான் வந்த திசை நோக்கி, கடந்து வந்த தூரத்தைக் கணித்தார். பின்னர் தன்னுள்ளே மெல்ல முணுமுணுத்துக் கொண்டார்.

பின்னர் ஒற்றை வரிசையில் வந்து கொண்டிருந்த தன் ஆட்களைப் பரவலாக அமைத்தார். அவர்களுக்கு உத்தரவு கொடுக்க ஆரம்பித்தார்.

“எல்லாம் கவனமா கேட்டுக்கங்க. நாம் இப்ப கிட்டத்தட்ட அந்தக் கூம்பு வடிவப் பாறைகிட்ட வந்துட்டோம். ஆனா மரங்கள் அடர்த்தியா இருக்கறதால நமக்கு அது தெரியலை. அதனால இனிமே நாம் பரவ்லா பிரிஞ்சி அந்தப் பாறையைத் தேடணும். ஆனா யாரும் தன்னோட ரெண்டு பக்கத்துல இருக்கறவங்க பார்வையிலே இருந்து விலகிப் போயிடக் கூடாது. இந்தக் காட்டுல காணாம போயிட்டா தேடிக் கண்டுபிடிக்கறது ரொம்பக் கஷ்டம். அதனால ரொம்ப ஜாக்கிரதையா தேடுங்க. இன்னொன்றையும் சொல்றேன், யார் மொதல்ல அந்தக் கூம்புப் பாறையை கண்டு பிடிக்கறாங்களோ, அவங்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் போனஸ்...”

வேலையாட்கள் உற்சாகமாய் ஆர்பரித்தார்கள். அவர்களின் தேடல் ஒரு இரண்டு மணி நேரம் நீடித்த பின் ஒரு



வேலையாளின் குரல் பலமாய் ஒலித்தது.

"சார்... இங்க வாங்க... இங்க..."

எல்லோரும் அந்த வேலையாள் இருந்த இடத்தைச் சுற்றிக் குவிந்தார்கள். அந்த இடத்தில் அந்தப் பாறையின் அடிப்பாகம் தெரிந்தது. அடர் கருப்பில் தெரிந்த அந்த பாறையின் குறுக்களவு இருபது அடிக்கு மேல் இருந்தது. அதன் மேல் பாதி பகுதி மரங்களின் கிளைகளால் அடர்த்தியாக மூடப்பட்டிருந்தது. கீழிருந்து மேல் நோக்கிக் கூர்ந்து சென்ற அதன் மேற்பரப்பு அதன் கூம்பு வடிவத்தை உறுதிப்படுத்தியது.

''இதுதான் நாம் தேடிகிட்டிருந்த கூம்புப் பாறை.'' அதைக் கண்டுபிடித்த

ஹேமா இராஜ்

வேலையாளின் தோளை உற்சாகமாய்த் தட்டிக் கொடுத்த பேராசிரியர், தொடர்ந்து கட்டளைகளைப் பிறப்பித்தார்.

" இந்த இடத்தைச் சுத்தி மரங்களை வெட்டி க்ளியர் பண்ணுங்க. குறிப்பா இந்தப் பாறையோட மேல் முனை நல்லா பார்வைக்குத் தெரியணும். ஏழு பேர் இந்த வேலையைச் செய்யுங்க. மத்தவங்க என்னோட வாங்க."

பேராசிரியர், ப்ரேம், சோமு மூன்று

வேலையாட்கள் கொண்ட குரூப் மேலே மேற்காக முன்னேறியது.

தம் கையில் இருந்த குறிப்புகளைப் பார்த்தார் பேராசிரியர்.

"ப்ரேம், இந்தக் கூம்புப் பாறையிலேர்ந்து நேர் மேற்குல சரியா நூறு அடி தூரத்துல மரக் கோயில் ஒண்ணு இருக்குன்னு செப்பேடுகள் சொல்லுது. இப்ப நாம் அந்த மரக் கோயிலைக் கண்டுபிடிக்கணும். நேர் மேற்கா போவோம். கரெக்டா நூறு அடி தூரத்தை எண்ணிக்கிட்டு வாங்க."

அவர்கள் நூறு அடி மேற்காக நடந்தார்கள். அவர்கள் வந்து நின்ற இடம், ஏனைய இடங்களை விட வெகு அடர்த்தியாக இருந்தது. 'இந்த மரங்களை வெட்டி வழி செய்ங்க...' என்றார். சோமு தலைமையில் வேலையாட்கள் மரங்களையும் புதர்களையும் வெட்டி வழி ஏற்படுத்த ஆரம்பித்தார்கள்.

ஒரு பத்து அடி தூரம் சென்றதும் சோமுவின் நீள் கத்தி எதன் மேலோ கடினமாகத் தடைப்பட்டது. அந்த இடத்தில் அடர்த்தியாக இருந்த புதர்களை நகர்த்திய சோமு, அந்த மரக்கோயில் முழுமையாக வெளிப்பட்டதைக் கண்டான்.

வழக்கமான கோயில்களைப் போல நான்கு சுவர்களும் உள்ளே கர்ப்பகிரஹம் போன்ற இடத்துடனும் அந்தக் கோயில் அமைந்திருக்கவில்லை. ஒரு பத்தடி குறுக்களவு இருந்த ஒரு பெரிய அடி மரத்தை, அப்படியே நான்கு பக்கங்களைச் செதுக்கி, உள்ளே இடமில்லாமல் வெளியே மட்டும் சிலைகளைச் செதுக்கி அமைத்திருந்தார்கள். ஆகவே எந்தப் பக்கங்களும் வாசல்கள் இல்லாமல்; நான்கு பக்கங்களிலும் பெரிய கண்களுடன் உற்றுப் பார்க்கும் மார்பளவு தேவதைச் சிலைகளின் தோற்றத்தை மட்டும் கொண்டதாக அந்தக் கோயில் இருந்தது. அதன் மேல்பகுதி அடர்த்தியான மரக்கிளைகளுக்கிடையில் மறைந்து கிடந்தது.

அந்தக் கோயிலை பேராசிரியர் சில முறை சுற்றி வந்தார். நான்கு பக்கங்களிலும் இருந்த முகங்கள் வெவ்வேறாகக் காட்சி அளித்தாலும், ஆண்டாண்டு காலப் பராமரிப்பின்மையும், பச்சைப் பாசிகளால் மெலிதாக மூடப்பட்டிருந்தமையும் அந்த சிலைகளுக்கு ஒரு ஒத்த சாயலைத் தந்திருந்தன.

அந்தக் கோயிலின் கிழக்குப் பக்க முகப்பிற்கு வந்த பேராசிரியர், அங்கிருந்தவர்களுள் உயரமாக இருந்த வேலையாளை அழைத்தார்.

"உன் பேர் என்ன?"

"மாணிக்கங்க."

"மாணிக்கம், நீ மரம் ஏறுவியா?"

"ஏறுவேனுங்க."

"இந்தா, இந்த டார்ச்லைட்டை வச்சிக்கோ" என்றார் பேராசிரியர். சற்று தயங்கிய மாணிக்கம் பிறகு அந்த டார்ச் லைட்டையும் வாங்கிக் கொண்டான். வெகு அருகில் இருந்த மரத்தை நோக்கி நடந்த அவனை பேராசிரியர் நிறுத்தினார்.

"ஒரு நிமிஷம் மாணிக்கம். இந்தா இதையும் வாங்கிக்கோ." அவர் தன் பையில் இருந்த ஒரு மெல்லிய, ஆனால் உறுதியான ட்வைன் நூலை எடுத்திருந்தார். அதன் முனையில் ஒரு சிறிய, கூர் முனையுடன் கூடிய தாமிர குண்டு இணைக்கப்பட்டிருந்தது.

"இது எதுக்குங்க ஐயா?" என்றான் மாணிக்கம் சற்றே கலவரத்துடன்.

"தீயணைப்பு ஊழியரைக் கட்டிக்கிட்டது வம்பாப் போச்சுடி!"

"எப்படி சொல்றே?"

"நான் எரிஞ்சு விழுந்தாக்கூட ஓடி வந்து அணைச்சுடறார்!"

— சி. விஜய்குமார்

"பயப்படாம வாங்கிக்கோ மாணிக்கம். மேல ஏறினதும் சொல்றேன்."

மாணிக்கம் அந்த நூல் கண்டையும் வாங்கிக்கொண்டு அருகில் இருந்த மரத்தின் மேல் ஏறத் தொடங்கினான்.

மெல்ல மெல்ல மாணிக்கம் அந்த மரத்தின் கிளைப் பகுதியை அடைந்து அதனுள் புகுந்தான்.

"மாணிக்கம்" என்றார் பேராசிரியர் சற்றே உரத்த குரலில்.

"ஐயா..."

"அப்படியே அந்த கிளை வழியா இந்த மர கோபுரத்துக்கு வா."

"தோ... வரேங்க..."

அந்தக் கிளை மெல்ல அசைந்தது. மெல்ல தாழ்ந்து மாணிக்கத்தின் இயக்கத்தைப் புலப்படுத்தியது.

"ஐயா... ஐயா..." திடீரென்று சற்று பதட்டத்துடன் எழுந்த மாணிக்கத்தின் குரல்

பேராசிரியரையும் பதற வைத்தது.

"என்னாச்சு... மாணிக்கம்?"

"ஐயா, இங்க ஒரே அட்டைப் பூச்சியா இருக்கு ஐயா..."

"கடிக்காது மாணிக்கம். நீ அதுக்குள்ள கீழ வந்துடலாம். டார்ச் லைட்டை அடிச்சிக்கோ. வழி தெரியுதா?"

சற்று நேர அசங்கலுக்குப் பிறகு கிளைகளின் மேலே ஒரு மெல்லிய வெளிச்சம் பரவியது.

"வழி தெரியுதுங்க."


"கோபுரத்து முன் பக்கத்துல என்ன சிலை இருக்குனு பாரு."

சற்று நேரம் அந்த வெளிச்சத் திற்றல் அங்கும் இங்குமாக அலைந்தது.

"ஐயா. ஒரு பெரிய மாட்டு முகம் இங்க சிலையா இருக்குங்க."

"வெரிகுட்." என்ற பேராசிரியரின் குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

"மாணிக்கம் நான் இப்ப சொல்லப்



போறதை கவனமா கேட்டுக்கோ, அந்த மாட்டு முக சிலை நல்லா தெரியுதா?"

"நல்லா தெரியுதுங்க. மரத்தால செஞ்சது. ஆனா ரொம்ப பனிச்சினு தெரியலீங்க. பூரா பாசி படிஞ்சிருக்கு."

"அதனால ஒண்ணும் பிரச்னை இல்ல மாணிக்கம். அந்த மாட்டுச் சிலைக்குக் கொம்பு இருக்கா?"

"இருக்குங்க. நல்ல பெரிய கொம்பாவே இருக்குங்க."

"நல்லது. அந்தக் கொம்புங்க உள் பக்கமா திரும்பியிருக்கா? இல்ல வெளிப்பக்கமா திரும்பியிருக்கா?"

"வெளிப்பக்கமா திரும்பியிருக்கு. நல்ல பெரிய மூஞ்சி. பெரிய பெரிய கொம்பு! இந்தப் பக்கம் மூணு அடி. அந்தப் பக்கம் மூணு அடி. வெளிப்பக்கம் நல்லா நீட்டமா பிரிஞ்சிருக்குங்க."

"நல்லது மாணிக்கம். அந்தக் கொம்புங்களோட ரெண்டு பக்க நுனியையும் பாரு. எப்படி இருக்கு?"

வெளிச்சக் கிற்றல் அங்கும் இங்குமாக சற்று நேரம் ஆடியது.

"ரெண்டு பக்கக் கொம்புங்களும் முனைல ஒரு சின்ன வட்டமா வளைஞ்சிருக்குங்க!"

"வெரிகுட்..." என்று பேராசிரியர் துள்ளிக் குதித்தார்.

"இப்ப அந்த ரெண்டு பக்க ஓட்டைகுள்ள விரலை விட்டு சுத்தம் பண்ணு. பார்த்து பண்ணு மாணிக்கம்..."

சற்று நேர அசைவிற்குப் பின் சிறிய பாசிப் படிவங்கள் மேலிருந்து கீழே வந்து விழுந்தன.

"ஐயா சுத்தம் பண்ணியாச்சுங்க."

"நான் கொடுத்த அந்தத் தாமிரக் குண்டு அதுக்குள்ள போகுமா மாணிக்கம்?"

சற்று நேரத்திற்குப் பின். "ஐயா, போவுமுங்க..." என்று மாணிக்கத்தின் குரல் வந்தது.

"அந்தத் தாமிரக் குண்டை எடுத்துக்கோ. இடப்பக்க கொம்புல இருக்கற ஓட்டை வழியா அதைக் கீழே விடு."

"இதோங்க ஐயா."

சற்று நேரத்தில் மரக்கிளைகளின் மறைவில் இருந்து அந்தத் தாமிரக் குண்டு வெளிப்பட்டது. வெள்ளை நூல் வாலாக நீண்டு வர, அந்தத் தாமிரக் குண்டு சின்னச் சின்ன அதிர்வுகளுடன் கீழிறங்கி தரை தொட்டது. அது தரை தொட்ட இடத்தைப் பேராசிரியர் குறித்துக் கொண்டார்.

"அப்பா இந்த இடத்துலயா புதையல் இருக்கு?" என்றான் ப்ரேஜ்.

"இல்லை ப்ரேம்... ஆனா புதையல் இருக்கற எடத்துக்கு இந்த இடம் ஒரு முக்கியமான ரெஃபரன்ஸ் பாயின்ட்... இந்த இடத்தை அடிப்படையா வச்சி புதையல் இருக்கற எடத்தைக் கண்டுபிடிக்கணும்." என்ற பேராசிரியர், மாணிக்கத்தை இறங்கச் சொல்லிக் குரல் கொடுத்தார்.

மற்றொரு வேலையாள் மூலமாக, தாமிரக் குண்டு இறங்கிய இடத்தில் ஒரு துளை போடச் சொன்னார். துளை போடப்பட்டதும் ஒரு நீண்ட கழியைத் தயார் செய்யச் சொன்னார். அருகில் இருந்த மரக்கிளை ஒன்று வெட்டப்பட்டு ஒரு நீண்ட கழி தயார் செய்யப்பட்டது. அதன் அடியில் ஒரு அரை அடியை விட்டு விட்டு அதற்கு மேலாகப் பதினைந்து அடி உயரத்தில் ஒரு சின்ன குறியை தன் கத்தியால் ஏற்படுத்திக் கொண்டார். அந்த இடத்தில் அவருடைய ஆணைப்படி, ஒரு மெல்லிய, ஆனால் உறுதி

யான ஒரு நைலான் நூல் கண்முன் முனை கட்டப்பட்டது.

பிறகு அந்தக் கழி நிமிர்த்தப்பட்டு, தாமிரக் குண்டு தரைபட்ட இடத்தில் தோண்டப்பட்ட துளையில் இறக்கப் பட்டது. சரியாக, அரை அடி ஆழத்திற்கு அந்தக் கழி இறங்கியதும், அதைச் சுற்றிலும் மண் மற்றும் கல் உடைத்து, வேலையாட்கள் அதை நிலை நிறுத்தினார்கள். இப்போது மிகச் சரியாகத் தரையில் இருந்து பதி னைந்து அடி உயரத்தில், அந்தக் கழியில், அந்தமுனை சுற்றப் பெற்ற நைலான் கயிறு தவழ்ந்து கொண்டிருந்தது!

இவற்றை மீண்டும் ஒருமுறை உறுதி செய்து கொண்ட பேரா்சிரியர், திருப்தி யாகச் சிரித்தார்.

"முதல் கட்ட வேலை முடிஞ்சிடிச்சி ப்ரேம். இப்ப இந்தக் கழிதான் நமக்கு ரெஃபரன்ஸ் பாயிண்ட். நாம்ப கண்டுபிடிச்ச அந்தக் கூர்முனைப் பாறையோட முனை தான் இன்னொரு ரெஃபரன்ஸ் பாயிண்ட்! இந்த கழிக்கும் அந்தப் பாறைக்குமா இருக் கற நேர்க்கோட்டை அப்படியே ஒரு இரு நூறு அடி நீட்டினா..."

"புதையல் இருக்கற எடமா சார்...?" என்றான் சோமு ஆர்வமாய்.

"ரொம்ப அவசரப்படாத சோமு. ஒவ் வொண்ணா பார்க்கணும். இப்ப அந்த கூர் பாறையோட உயரம் பதினைஞ்சு அடி. அதனாலதான் இந்தக் கழியிலயும் பதி னைஞ்சி அடி உயரத்துல நைலான் கயி றோட முனையைக் கட்டி இருக்கேன். இப்ப இந்த நைலான் கயிறை அப்படியே நீட்டிக் கிட்டுப் போய் அந்த கூர் பாறையோட முனையில் வைச்சா, இந்தக் கழிக்கும் அந்த கூர்முனைப் பாறைக்குமான நேர்க் கோடு கிடைச்சிடும். அப்புறம் அதே நேர்க் கோட்டுல அந்த நைலான் கயிறை இன்னும் ஒரு இருநூறு அடி நீட்டினா வரக்கூடிய இடத்துல..."

"இடத்துல...?" என்றார் சோமு மீண்டும் ஆர்வமாய்.

பேராசிரியர் மெதுவாக சிரித்தார்.

"அவசரப்படாத சோமு. அப்படியே இங்க நடக்கறது எல்லாம் ரசிச்சி என்ஜாய் பண்ணு. ரைட். நாம் வேலைய ஆரம்பிக் கலாம். இப்ப இங்க இருந்து அந்தக் கூர்முனைக்குப் போற வழியை க்ளியர் பண்ணியாகணும். ஃபாஸ்ட்..."

அதிர்ஷ்டவசமாக கூம்புப் பாறையைத் தாண்டிய வனப்பகுதிகள் சற்று ஆச் சரியமாக மரங்களின் அடர்த்தி குறை வாகவே இருந்ததால் வேலை எளிதாக இருந் தது. சூரியன் உச்சியில் இருந்து சற்று சாய்ந்த போது அவர்கள் அந்த நைலான் கயிறின் நீட்டுவிக்கப்பட்ட நேர்க்கோட்டில் இருநூறு அடி தூரத்தை க்ளியர் செய்திருந்தார்கள். கூம்புப் பாறையில் இருந்து சரியாக இருநூறு அடியைக் கணக்கிட்ட பேராசிரியர் மிகச் சரியாக அந்த இருநூறு அடி தூரத்தைக் குறித்துக் கொண்டார்.

"இந்த இடம்தான். இந்த இடம்தான்..." என்று ஆர்பரித்த பேராசிரியரின் குரலில் இருந்த உற்சாகம் அனைவரையும் தொற்றிக் கொண்டது.

"இந்த இடத்துல தோண்டுங்க... நாம்ப நெருங்கிட்டோம்."

மெல்ல மெல்ல அங்கே ஒரு ஆறடி விட் டத்தில் ஒரு பள்ளம் உருவாக ஆரம்பித்தது.

பேராசிரியர் பள்ளத்தின் விளிம்பிற்குச் சென்று பார்த்தார். அவர் முகத்தில் குழப் பமும் பதட்டமும் தெளிவாகத் தெரிந்தன.

"இந்தக் குறிப்புகள்படி இவ்வளவு ஆழமான பள்ளம் தேவையில்ல ப்ரேம். ஒரு ஒரு அடி தோண்டினாக்கூடப் போதும்னு இந்தக் குறிப்பு சொல்லுது ப்ரேம்."


"ஆனா, ஆயிரம் வருஷம் ஆயிடிச் சேப்பா. மண் நிறைய மூடி இருக்குமேப்பா."

"மண் மூடிதான் இருக்கும். ஆனா நீ நினைக்கிற மாதிரி இல்ல. இந்த மண் மூடல்ங்கறது ரொம்ப ரொம்ப மெதுவான ப்ராசஸ். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் னாடி, தரைல கிடந்த பொருட்களை நான் ஒரு கால் அடி ஆழத்துல கண்டுபிடிச்சிருக் கேன்! தவிரவும் இந்த இடத்துல மரங்கள் நிறைய இருந்திருக்கு. அதனால மண் அரிப்பு ஏற்பட்டு அதனால மண் மூடறதுக்கு வாய்ப்பு ரொம்பக் கம்மி. மக்கிப் போன தாவரங்களோட இலைகள்தான் ஒரு லேயரை ஃபார்ம் பண்ணியிருக்கும். ஆனா அதைத்தான் நாம்ப இந்த இடத்தை க்ளியர் பண்ணும் போதே விலக்கிட்டோமே? அதனால இந்த இடத்துல, மிஞ்சிப் போனா ஒரு இரண்டு அடிக்கு மேல தோண்ட வேண்டிய தேவை இருக்கக் கூடாது."

"ஆனா, இப்ப கிட்டத்தட்ட ஆறு அடி தோண்டிட்டோமே அப்பா."

"ஆமா ப்ரேம். எங்கேயோ தப்பு நடந் திருக்கு!" என்று கலவரத்துடன் தன் குறிப் புகளை மீண்டும் பார்க்கத் தொடங்கி னார்.

(தொடரும்)





1998 டிசம்பர் 13
வெகுதான்ய கார்த்திகை 27
மலர் : 57
இதழ் : 20

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

பி.ஜே.பி. ஆட்சிக்கு மறுவாழ்வு!

பி.ஜே.பியின் மகத்தான தேர்தல் தோல்விக்கு என்ன காரணம்...?

'விலைவாசி உயர்வு அல்ல;

காங்கிரஸின் திட்டமிட்ட உழைப்பும் அல்ல;

வாக்காளர்களின் எதிர்ப்புணர்வும் அல்ல...


பி.ஜே.பிதான் பி.ஜே.பியின் தோல்விக்குக் காரணம்!'- இது சுஷ்மா சுவராஜின் அபாரமான கண்டுபிடிப்பு!

'உட்கட்சித் தகராறுகள் முற்றியதால் தேர்தல்களின்போது கட்சிக்காரர்கள் முறையாகப் பணியாற்றவில்லை. இதனால்தான் தோற்றோமேயொழிய, மக்கள் காங்கிரஸை நம்பி வாக்களித்ததால் அல்ல...' என்றார் சுஷ்மா!

இப்படியொரு கட்சி தனக்குத் தானே குழிபறித்துக் கொள்வதென்பது மக்களின் நம்பிக்கையை இழந்து தேர்தலில் தோற்பதைக் காட்டிலும் கேவலமானது!

அதை உணராமல் சுஷ்மா சுவராஜும் இதர பி.ஜே.பி. தலைவர்களும் தோல்வியைக் குறைத்து எடைபோட்டும் நொண்டிக் காரணம் சொல்லியும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

வடமாநிலத் தேர்தல் முடிவுகள், மக்களுக்கு பி.ஜே.பியிடம் நம்பிக்கை போய்விட்டதையே



உணர்த்துகின்றன. போக்ரன் சாதனையும் ஹிந்துத்வ கோஷமும் பி.ஜே.பி. எதிர்பார்த்த பிரமிப்பு கலந்த ஆதரவைப் பெற்றுத் தரவில்லை. இரு விஷயங்களுமே அபாயகரமானவை என்பதையும் நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுபவை என்பதையும் மக்கள் உணர்ந்து வாக்களித்திருக்கிறார்கள். விலைவாசி உயர்வும் பொருளாதாரத் தேக்கமும் வாக்காளர்களை யோசிக்க வைத்துள்ளன.

இந்த பலமான அடியினால் பி.ஜே.பி. அரசு வீழ்ந்து விடாமல் தூக்கி நிறுத்த உதவியிருப்பது அதன் தோழமைக் கட்சிகள் அல்ல... மாறாக, எதிர்க்கட்சியான காங்கிரஸ் அளித்த பரிசுதான் பி.ஜே.பிக்கு இன்று கிடைத்துள்ள மறுவாழ்வு.

போதுமான ஆதரவு கிடைக்காமல் போகும், அதனால் திரும்பவும் ஒரு நிலையற்ற ஆட்சியைத்தான் அமைக்க முடியும் என்று உணர்ந்ததாலும் கட்சித் தலைமை செல்வாக்குடன் தன்னைப் போதிய அளவு பலப்படுத்திக் கொள்ளத் தவறியதாலும் காங்கிரஸ், பி.ஜே.பியைக் கவிழ்த்துவிட்டு ஆட்சிக்கு வர முயற்சி மேற்கொள்ளவில்லை.

எனவே, காங்கிரஸின் பலவீனமே பி.ஜே.பிக்கு இன்னொரு வாய்ப்பை அளித்திருக்கிறது!

அந்த வாய்ப்பு காங்கிரஸின் ஆசியுடன் வருவதை உணர்ந்த ஜெ, பி.ஜே.பிக்குத் தமது ஆதரவு தொடரும் என்று அறிவித்துள்ளதில் வியப்பில்லை. மத்திய ஆட்சியில் தம் கட்சி அங்கம் வகிப்பதால் கிட்டும் ஆதாயங்கள் அவர் அறியாததல்ல.

ஆனால், நிலைமையின் தீவிரத்தை பி.ஜே.பி. உணர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றம்தான் மிஞ்சும்.

தோல்விக்கான காரணங்களைப் புனைந்துரைக்கும் கேவலம் ஒரு பக்கம். மறு பக்கத்திலோ, தனது போக்கை மாற்றிக் கொள்ளாமல் தொடர்ந்து அதே குழப்பப் பாதையில் மத்திய அரசு தொடர்கின்ற அவலம்.

ஆட்சிக்கு வந்த நாள் முதலாக நிலையான ஆட்சி; திறமைமிக்க பிரதமர் என்ற கோஷம்



பொய்யாகவே இருந்து வருகிறது. இப்போதும்கூட இன்ஷூரன்ஸ் துறை தனியார் மயமாக்கல் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசால் இயலவில்லை.

கொள்கையளவில் இத்துறைகளில் அயல்நாட்டினர் முதலீடு ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்படுகிறது. அடுத்த சில மணி நேரங்களுக்குள் ஆர்.எஸ்.எஸ்ஸின் எதிர்ப்புக்குப் பணிந்து அறிவிப்பு மாற்றப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் மசோதா அறிமுகமாகிறது; ஆர்.எஸ்.எஸ். அதை எதிர்த்து தர்ணா செய்யவிருப்பது தெரிந்ததும் அம் மசோதா முன்னுரிமைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விடுகிறது!

கொள்கையளவிலான அரசாங்க முடிவையும் பிரதமர் அலுவலகத்திலிருந்து வருகின்ற ஆணையையும் கட்டுப்படுத்தி மாற்றுகின்ற அளவுக்கு ஆர்.எஸ்.எஸ். இந்த ஆட்சி மீது ஆளுமை செலுத்த முடியும் என்பது கவலைக்கும் ஆட்சேபணைக்கும் உரிய நிலைமை.

இத்தனை காலமாக இதை அனுமதித்ததால்தான் பி.ஜே.பி. ஆட்சி நாட்டை அதலபாதாளத்துக்கு அழைத்துச் சென்றது. கூட்டணிக் கட்சிகளின் மிரட்டல்களைச் சமாளிப்பதிலும் பின்னணியிலிருந்து இயங்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் விருப்பு-வெறுப்புகளுக்கு வளைந்து கொடுப்பதிலும் பிரதமரின் நேரமும் சக்தியும் பெரும்பாலும் செலவிடப்பட்டு வந்தன. இனியும் இதே நிலை தொடருமானால், இந்தத் தேர்தல் தோல்விக்குப் பிறகு பி.ஜே.பி. பெற்ற மறுவாழ்வும் வீண் விரயமாகத்தான் போகும்.

மாறாக, அரசியல் கட்டாயங்களை ஒதுக்கிவிட்டு, மக்கள் நலன், நாட்டு நலன் என்கிற நோக்கில் மட்டுமே முடிவுகள் எடுத்து செயல்பட்டால், இந்த ஆட்சி எஞ்சியுள்ள காலத்தில் நற்பெயர் அடைய வாய்ப்பு உண்டு.

எந்தவித நலனையும் பயனையும் அளிக்க இயலாமல் நீண்ட காலம் ஆட்சி செய்வதைக் காட்டிலும், குறுகிய கால ஆட்சியில் உறுதியுடன் சிறந்த நிர்வாகம் அளிக்க முடிந்தால், மக்கள் மனத்தில் இடம் பிடிக்கலாம்; அடுத்தத் தேர்தலை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளலாம். ○

ஓலம்

நந்தன்

குழந்தை அழுது கொண்டிருந்தது.

மில்க் பிஸ்கெட்டும் பால் பாட்டிலும், தண்ணீர் நிரப்பப்பட்ட ஸ்ட்ரா தம்ளரும் மாற்றி மாற்றித் திணிக்கப்பட்டும் அது தன் ஓங்கிய அலறலை நிறுத்தவில்லை. ராஜம் குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு தொடையை பலமாய் ஆட்டிப் பார்த்தாள். அதை மார் மேல் கிடத்தி முதுகை வருடினாள். வெளியில் கொண்டு போய், பறந்து ஓடும் ஸ்கூட்டரைக் காட்டினாள். 'இதெல்லாம் எனக்குத் தூசடி பெண்ணே.... எனக்கு என் அம்மாவைக் காட்டு. என் அப்பாவை என் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்து...' என்கிற ரீதியில் குழந்தை விடாமல் வீறிட்டுக் கொண்டிருந்தது.

ஓடிசலாய் இருந்தாலும் அறுபத்தைந்து வயது தேகம் ராஜத்துக்கு. முன்னே மாதிரி ஒத்துழைக்க மாட்டேனென்கிறது. குனிந்து நிமிர்ந்து எழுந்தால் இடுப்புக் கண்ணியில் அவ்வப்போது பிடித்துக் கொள்கிறது. இதை, பெண் வித்யாவிடம் சொன்னால் உடனே விழுந்தடித்துக் கொண்டு டாக்டரிடம் அழைத்துச் செல்வாள். ஆனால் தனக்குத் தான் ஏதும் சொல்லத் தோன்றவில்லை. எதற்கு வீண் செலவு? வெறும் வாய்வுப் பிடிப்பாகத்தான் இருக்குமென்று வாய்வுப் பதார்த்தங்களைக் குறைத்துப் பார்த்தாயிற்று. இன்னமும் பிடிப்பு விடமாட்டேனென்கிறது. இனியும் விடக் கூடாது. வித்யாவிடம் சொல்லி டாக்டரிடம் அழைத்துப் போகச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பையன் ஆகாஷோடு மாரடிக்க முடியாது. ஒன்றரை வயசுப் பயல் என்னமாய்க் கூத்தடிக்கிறான்!

வாசல் கதவை ஒருக்களித்துத் திறந்து வைத்தால் போதும். தத்தித் தத்தி வாசலுக்கு ஓடி விடுகிறான். சதாசர்வ நேரமும் காரும் ஸ்கூட்டரும் புழங்கும் ரோடு. கண்ணிமைக்கிற நேரம் தவற விட்டாலும் போச்சு. அதற்காக வாசற்கதவை முழுசாய் சாத்தியும் வைக்க முடியவில்லை. பால்காரி ஆனில் லையென்று பால் பாக்கெட் போடாமல் போய் விடுகிறாள். இந்தப் பயலோடேயே எப்பவும் சுற்றிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

மத்தியானம் சாப்பிட்ட பிறகு சிறிது கண்ணசந்தால் தேவலை போல் இருக்கும். முடியுமா...? அப்போதுதான் இந்தப் பயல் அசுர விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பான். ஆடி முடித்து அவன் அசந்து தூங்குகையில் நமக்குத் தூக்கம் வர மாட்டேனென்கிறது. நாம இழுக்கிற இழுப்புக்கு உடம்பு வருமா...? வயசாகி விட்டால் அது சொல்கிறபடிதானே நாம் கேட்க வேண்டியிருக்கிறது...!

ராஜம் அவ்வப்போது அங்கலாய்த்துக் கொள்வாள். எதனாலோ கட்டுண்ட மாதிரி விழி சொருகுவாள். கூடவே இன்னொரு வருத்தமும் அவளைக் கொத்திக் கொள்ளும்.

அவர் இருக்கும்போது கூட இவ்வளவு கஷ்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆசிரியரான தன் கணவர் சிவசுப்ரமணியனை நாற்பது வருஷமாய் பள்ளிக்கூடத்துக்குக் கிளப்பி அனுப்பிக் கொண்டிருந்த போதும், ரெண்டு குழந்தைகளைப் பெத்து ஆளாக்கிய போதும் ராஜத்துக்கு இத்தனை கஷ்டப்பட்டதாகத் தோன்றவில்லை. வயசு தான் காரணமோ என்று கூட நினைத்துக் கொள்வாள். இதை நினைக்கும் போது கணவன் பற்றிய நினைப்பு கிறலாய்ப் பனிச்சிட்டு விட்டால் போதும். அவள் கண்கள் பனித்துப்போய் நீர் கட்டிக் கொண்டு

விடும். நீண்டதாய் ஏக்கப் பெருமூச்சு நாசித் துவாரங்களிலிருந்து வெளியேறும்.

இப்போதாவது கொஞ்சம் தேவலை. மூன்று நான்கு மாதக் குழந்தைக் காலங்களில் ஆகாஷ் ராஜத்தை துவம்சம் செய்து விட்டான். மூத்திரம் துடைத்து மூத்திரத் துணி பிழிந்து நிமிர்வாள். குழந்தை படுத்த பாயிலேயே வெளிக்குப் போயிருக்கும். பாய் அலசி படுத்த இடத்தை டெட்டால் விட்டுத் துடைத்து குழந்தையை இடுப்பில் தூக்கி நிற்பாள். குடித்த பவுடர் பால் ஒத்துக் கொள்ளாமல் குழந்தை புடவை முழுக்க வாந்தி எடுத்து வைக்கும். புடவை அலசி, புடவை மாற்றி, குழந்தைக்குச் சட்டை மாற்றி... ராஜம் ஓய்ந்து போவாள்.

என்ன செய்வது? மாப்பிள்ளை, பெண் இருவருக்குமே கவர்மெண்ட் உத்தியோகம். நடுத்தரக் குடும்பத்துக்குப் பணத் தேவை ரொம்பவும் அத்தியாவசியமாக இருக்கிறதே. இரண்டு மூன்று வருஷக் கஷ்டத்துக்காக ஆறாயிரம் ரூபாய் சம்பளம் தரும் வேலையை விட்டு விட மனசு வரமாட்டேனென்கிறதே...

மூணு வயசு வரைதானே... அப்புறம் குழந்தை ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்து விட்டால் அப்பா அம்மாவே பார்த்துக் கொள்வார்களே... என்கிற எதிர்பார்ப்பில் ராஜம் காலம் கடத்தி விட்டாள்.

வெள்ளைச் சொக்காயும் கருநீல அரை டிராயரும் அணிந்து கருப்பு ஷூவுக்குள் தன் பாதம் புகுத்திக் கொண்டு டொக்... டொக்... என்று ஆகாஷ் நடப்பது பார்த்து ராஜம் இரட்டிப்பாய்ப் பூரித்தாள்.

தன் நெடுநாளைய கனவு, ஆயுசு முழுவதும் தம் கணவன் ஆசைப்பட்ட ஒன்று நிறைவேற வாய்ப்புக் கிட்டியதற்காக ராஜம் சந்தோஷப்பட்டாள். குழந்தையை மூன்று வயது வரை ஆளாக்கி மகள் வித்யாவிடம் ஒப்புவித்து விட்ட பிறகு, இனி கிளம்பி விடுவதாய் எண்ணம் கொண்டாள்.

சிவசுப்ரமணியன் வாய்க்கு வாய், வார்த்தைக்கு வார்த்தை ராஜத்திடம் சொல்லிக் கொண்டிருப்பார். "ராஜம்... குழந்தை ரெண்டையும் ஆளாக்கி ஒவ்வொரு துணையை ஏற்படுத்திக் கொடுத்துப்ட்டு நாம கிளம்பிடணும்டி.. என் ஃப்ரெண்டு கேசவன் ஒரு அநாதை ஆசிரமம் நடத்திண்டிருக்கான். சிட்டுச் சிட்டா எத்தனை குழந்தைகள் தெரியுமோ? பிஞ்சும் பூவும் மொட்டுமா அதது திரியறதைப் பாத்தா நெஞ்சு விட்டுப் போயிடுண்டி! அங்கேயே அதுகளோடவே இருந்து, கஞ்சியோ கூழோ குடிச்சிண்டு, ஏதோ ஆஸ்ரமத்து கணக்கு வழக்கைப் பாத்



துண்டு, நம்மாலானதைச் செஞ்சுண்டு இருந்துடணும்டி. ஏழேழு ஜென்மத்துல பண்ணின பாபம் அத்தனையும் கரைஞ்சு தண்ணியா ஓடிப் போயிடும்! நீ வா. ஒருதரம் குழந்தைகளை வந்து பார். 'பச்'சுனு ஒட்டிண்டுடுவே."

ராஜத்துக்கு முதலில் ஒட்டுதல் இல்லாமலிருந்தது. சிவசுப்ரமணியன் சொல்லச் சொல்ல, ஒருநாள் ஆஸ்ரமத்துக்கு நேரில் போகப் போய், ராஜம் முற்றிலும் மாறி விட்டாள்! அங்கு சுற்றித் திரியும் அத்தனைச் சிட்டுகளுக்கும் தன்னை அம்மாவாய் பாவித்துக் கொண்டு விட்டாள். 'தனக்கு இதுதான்' என்று அழுத்தமாய் முடிந்து கொண்டாள்.

ஆனால் விதி வேறுவிதமாய் இருந்தது. முதல் பையனைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டு, அடுத்தப் பெண் வித்யாவுக்கு மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் செய்து முடித்து விட்ட வேளையில், 'பொசுக்'கென்று ஒருநாள் சிவசுப்ரமணியன் சிவபதம் அடைந்து விட்டார். கல்யாணம் ஒரு வருடம் தள்ளிப் போய், அதுவரை மாப்பிள்ளை பொறுமையாய் இருந்து வித்யாவைக் கல்யாணம் செய்து கொண்டார்.

கல்யாணம் முடிந்த கையோடு புறப்பட நினைத்த ராஜத்தை மாப்பிள்ளை, 'எங்க கூடத்தான் நீங்க இருக்கணும்! உங்க புள்ளையோ அமெரிக்காவுலேயே செட்டிலாயிட ட்ரை பண்ணிண்டுருக்கான். எங்களோடயே இருந்துடுங்கோ' என்று விஷயம் புரியாமல் அன்பால் கட்டிப் போட்டு விட்டார்.

பிறகு, கொஞ்ச நாளில் வித்யா கருத்தரிக்கப் போக, அவளைக் கவனிக்க வேண்டி வந்தது. பின் பிள்ளை பிறந்ததும், இரண்டு பேரும் வேலைக்குப் போகையில் எப்படி விட்டுச் செல்வது?

மூன்று வருடம் முட்டி தேய, முகம் வெளிறிக் காலம் கடத்திய பின்... இன்று பேரன் ஆகாஷ் 'டொக் டொக்' என்று நடக்கத் தெரியாமல் ஷூ மாட்டிக் கொண்டு நடந்து போகையில் எட்ட நின்று ரசித்த ராஜம் சந்தோஷித்தாள். முக்கியமாக - ஆஸ்ரமத்தில் சேர்ந்து மிச்ச காலம் செலுத்துவதற்காக!

ஆபீஸ் விட்டு வந்த வித்யா, காப்பி தம்ளரை எடுத்துக் கொண்டு, 'மாடிக்கு வாம்மா, சித்த பேசிண்டிருப்போம்...' என்று வித்தியாசமாய் தன்னை விளித்தது கண்டு ராஜத்துக்கு ஆச்சரியமாயிருந்தது.

"அம்மா... இதையெல்லாம் பர்மிஷன் மாதிரி கேக்கறதுக்கு எனக்குக் கூச்சமாத்தான் இருக்கு. நா அம்மாட்டல்லாம் கேக்க மாட்டேன்னு அவர்ட்ட சொல்லிப் பாத்துட்டேன். அவர் விட மாட்டேங்கறார். 'நம்பளோட நல்லது கெட்டதுல உங்க அம்மாவுக்கு முக்கியப் பங்கு உண்டு. அதுனால உங்க அம்மாட்ட இது பத்திப் பேசிடு'ங்கறார். என்னம்மா..."

மகள் சுற்றி வளைக்க ராஜம், காது விரைத்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"அம்மா ஆகாஷுக்கு மூணு வயசாயிடுத்தோல்லியோ... அதனால அடுத்த குழந்தையை அடுத்த வருஷம் பெத்துக்கலாம்னு ஒரு சின்ன யோசனைம்மா. எங்க ரெண்டு பேருக்குமே இதை இப்ப ப்ளான் பண்ணலாம்னு தோணறது. ஆகாஷுக்கு நாலு வயசாற போது குழந்தை பொறந்துதுன்னாக்க அது சரியாயிருக்கும்லியா...? ரொம்பவும் 'கேப்' விழறது சரியில்லை தானேம்மா? அதே சமயம் ரெண்டு குழந்தை கட்டாயம் வேணும் இல்லியாம்மா..."

வித்யாவின் ஏற்ற இறக்கமான பேச்சுக்கு ராஜம் துளியும் முறுவலிக்காமல் மகளின் முகம் ஏறிட்டாள்.

"அம்மா... இது பத்தியெல்லாம் உங்கிட்ட பேச மாட்டேன்னு நான் ஒத்தக் கால்ல நின்னேன். ஆனா இவர் என்னை விட மாட்டேங்கறார். 'இல்லடி வித்யா... அம்மாதான் குழந்தையைப் பாத்துக்கப் போறா. அதுனால உங்க அம்மாவோட சம்மதத்தையும் சிரமத்தையும் நாம புரிஞ்சுக்க வேண்டாமா'ங்கறார். எனக்கும் அது சரின்னு பட்டதாலத்தான் உங்கிட்ட கேக்கறேன்மா..." கடைசி வரிகளை விளம்பும்போது வித்யாவின் குரல் தணிந்து வாய்க் கூட்டுக்குள்ளேயே அடங்கிப் போனது.

ராஜம் விழிகள் நிலைகுத்த எதிரே தெரிந்த பச்சை மரம் வெறித்தாள்.

அம்மாவின் நெடு நேர மௌனம் வித்யாவை அச்சப்படுத்த, "என்னம்மா... ஏதும் பிரச்னையா?" என்று ஆதுரத்துடன் அவள் அம்மாவின் தோள் பற்றி உலுக்கினாள்.


ராஜம் சற்று யோசித்து விட்டுப் பின் சொன்னாள் :

"இதையெல்லாம் எங்கிட்ட கேக்கணுமாடி கண்ணு? உனக்காகத்தானே நான் இருக்கேன்?" ○



CONTRACT FRX 25269 TA

ஆஃபர் 31 டிசம்பர் அல்லது சரக்கு உள்ள வரை மட்டுமே.
இந்த ஆஃபர் இல்லாமலும் பேக்குகள் கிடைக்கின்றன.



கன்னட ஏரிக்கரையில்

வட மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளியான பரபரப்பான ஞாயிற்றுக் கிழமை. காலை முதல் மாலை வரை அரசியலை அலசித் தீர்த்த பெங்களூர்த் தமிழர்கள், ஓர் இலக்கிய அலசலுக்குத் தயாராகி அல்சூர் ஏரிக்கரையை நோக்கிப் படையெடுத்தனர். அங்கே திருவள்ளுவர் அரங்கில் பெங்களூர் தமிழ்ச் சங்கம் அமரர் கல்கி நூற்றாண்டு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. பிரும்மாண்டமான அல்சூர் ஏரியிலிருந்து சிலுசிலுவென்று தென்றல் புறப்பட்டு வரவேற்க, அரை நூற்றாண்டு கண்ட பெங்களூர்த் தமிழ்ச் சங்க அரங்க நுழைவாயிலில் தலைவர் து. சண்முகவேலன் சுபாவமான அமைதிப் புன்னகையுடன் வரவேற்றார்.

சுப்புடு பயமோ தும்புரு பயமோ இன்றி இனிமையான இறைவணக்கம் பாடினார் ஒளிமலரவன். பெங்களூர் வாழ் எழுத்தாளர் அமுதவன் பொருத்தமான சொற் சங்கிலிகளால் இணைப்புரை வழங்க, ஒவ்வொரு பேச்சாளராக மைக் முன்வந்தனர்.

“கலியுகத்தைக் காக்க ஆண்டவன் கல்கி உருவில் அவதாரம் எடுக்கிறான்; அந்த யுகத்தின் சமுதாயத்தை உயர்த்தத் தம் பேனாவால் முயற்சி செய்தார் அமரர் கல்கி...” இப்படிப் பேச ஆரம்பித்தவர் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி டி.என். வள்ளிநாயகம். தமிழ்க்குடிமகன் கேட்க வேண்டும் இவர் தமிழை! செவிக்கினிய செந்தமிழ்!

அமரர் கல்கி எங்கு சென்றாலும் மக்களின் மொழியைக் கூர்ந்து கவனித்தார். அதனால் அவர் எழுத்தாற்றல் வளப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை வள்ளிநாயகம். அதே போல், மனித இயல்புகளைப் படித்ததால் பாத்திரப் படைப்பிலும் அவர் தன்னிகரற்றுப் பிரகாசித்ததை எடுத்துக் காட்டினார். “பொன்னியின் செல்வன் நந்தினியைப் போல் இன்னொரு பாத்திரம் படைக்கப்படவில்லை” என அவர் ஆணித்தரமாய்ச் சொன்னபோது அரங்கம் கரவொலியால் அதிர்ந்தது.

மொழிபெயர்ப்பில் வல்லவர் சேஷநாராயணன். அடுத்து மைக் முன்வந்தவர் இவரே. தமிழில் சரளமாய்ப் பேச சற்றே இவர் தடுமாற, ‘கன்னடத்தில் பேசலாம்’ என கேட்டுக் கொண்டார்கள். ஒரே

பிடிவாதமாய் மறுத்துவிட்டு தமிழிலேயே தமது சிங்கார உரையை ஆற்றி முடித்தார் சேஷநாராயணன். கல்கியில் ஆரம்பித்து இன்று எழுதும் இளம் தமிழ் எழுத்தாளர்கள் வரை, பலரது படைப்புகளைக் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ள அனுபவசாலி. "எத்தனையோ சிறுகதைகளை மொழிபெயர்த்திருக்கிறேன். கல்கியின் நடை நயம் அலாதியானது. பார்த்திபன் கனவு நான் மொழிபெயர்த்த முதல் நாவல்..." என்று சிலிர்ப்புடன் நினைவுகூர்ந்தார்.

கன்னட மாநிலத்துத் தமிழ் தினசரியான தினச்சுடரின் ஆசிரியர் பா.கு. மணி. இந்த விழா அவருக்குப் பாராட்டு விழாவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதை அவ்வாறு ஏற்க மனமின்றி பெருந்தன்மையுடன் அமரர் கல்கிக்கே காணிக்கையாக்கினார் பா. கு. மணி.

''எந்தக் கூட்டத்துக்குப் போனாலும் மனத்தில் தோன்றியதைப் பேசுவேன். ஆனால் இந்த விழாவின் உயரம் வேறு. கல்கி அவர்களைப் பற்றிப் பேசுவதற்காக எழுதித் தயாரித்து வந்துள்ளேன்''

இனிய தமிழ் விழா!

என்று ஆரம்பித்தவர், கல்கி எத்தகைய சூழ்நிலையில் தமிழ் வளர்த்தார் என்பதைச் சுட்டிக் காட்டினார் :

சென்னை பல்கலைக் கழக செனட் கூட்டத்தில், 'நம் பிள்ளைகள் தமிழ் பயிலக் கஷ்டப்படுகிறார்கள். அதனால் பாடத் திட்டத்திலிருந்து அதை நீக்கி விட்டால் என்ன...?' என்று ஆலோசிக்கப்பட்டதாம்! 'தமிழில் கவிதை வேண்டுமானால் எழுதலாம். நகைச்சுவை எப்படி எழுத முடியும்?' என்று ஆங்கிலப் புலமை மிக்கவர்கள் பேசியதுண்டாம்! அத்தகைய சந்தேகங்களை உடைத்தெறிந்துவிட்டு கல்கி வெற்றிக் கொடி நாட்டியதை, தமிழை எல்லா விதமான சிந்தனைகளுக்கும் மனோநிலைகளுக்கும் வாகனமாக்கியதைச் சுட்டிக்காட்டினார்.

ஒரு பத்திரிகையாசிரியர் என்கிற முறையில் கல்கி பல எழுத்தாளர்களையும் பத்திரிகையாளர்களையும் ஊக்குவித்து உருவாக்கியதையும் நினைவூட்டிப் பேசினார் மணி. கல்கி அலுவலகத்தில் அச்சுக் கோப்பாளராக இருந்த விந்தனின் திறமையுணர்ந்து அவரைத் துணை ஆசிரியராக உடனே அமர்த்திய நிகழ்ச்சியை விவரித்தார்.

மணியின் உரையால் நெகிழ்ந்த கூட்டம் திரைப்பட இயக்குனர் வசந்த் பேசக் கேட்டு வியந்தது. கல்கியின் எத்தனையோ பண்புகளுள் தம்மை அதிகம் கவர்ந்தது அவரது தேசபக்திதான் என அவர் கூறக் கேட்டுச் சிலிர்த்தது.

திரைப்பட இயக்குனர்களுக்கேயுரிய அணுகுமுறையுடன் கல்கியின் தேசபக்தியைக் காட்சி விவரணையாகத் தந்தார் :

"திருச்சி மாநகரம்... காந்திஜி வந்தார். டாக்டர் ராஜன் கதர் மாலை போட, கல்கி பயபக்தியுடன் கைகட்டி அவரையே பார்த்தபடி அவரருகே நிற்கிறார்..." என்று ஆரம்பித்து, லோகமான்யர் நினைவு நிதிக்காக கல்கி அந்தக் கூட்டத்தில் சாதுர்யமாய்ப் பேசி நிதி வசூல் செய்ததைக் காட்சியாகக் கண்முன் நிறுத்திவிட்டார்!





இவரது வாரிசு எழுதிய கவிதை!

எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமியின் இலக்கிய வாரிசு பொ. வெண்மணிச் செல்வன். வயது 14. பத்தாம் வகுப்பு மாணவர். ''பள்ளியில் தமிழாசிரியர் நடத்திய கவிதைப் போட்டிகளே என்னை எழுதத் தூண்டியது'' என்கிறார். அவருடைய முத்துக்களில் மூன்று:

● வறுத்த மீன்
மடித்த காகிதத்தில்
'உயிர்களைக் கொல்லாதீர்'வாசகம்.

● உலகெங்கும்
ஒரே மொழியில்
பேசும்
மழை.

● சாத்தான் வேதம் ஓதியது.
சிகரெட் பெட்டியில்
எச்சரிக்கை.

தகவல்: வயலூரர் ஆர். பார்த்திபன்

"காந்திஜி சென்றபின் முக்கால் மணி நேரம் கல்கியின் பேச்சு தொடர்கிறது. உண்டியல் நிரம்புகிறது. கல்கியின் மனதும் நிரம்பியது என்று சொல்லவும் வேண்டுமா?" என வஸந்த் பேசி முடித்தபோது, கூட்டத்தில் ஒரு சிறிய 'ஆஹா' அலை எழுந்தது!

பெங்களூர் குளிருக்கு ஏற்ற ஸ்வெட்டரும் கழுத்தைச் சுற்றிய மப்ளருமாக வந்திருந்தார் குமரி அனந்தன். தேர்தல் வெற்றியின் உற்சாகம் முகத்தில் தெரிந்தது. எந்த மேடையிலும் சண்டமாருதம் பொழியும் இலக்கியச் செல்வர் கூட, குறிப்புகளை ஒரு கோப்பு நிறையத் தொகுத்து வந்து வைத்துக் கொண்டு பேசினார்!

"சோதிடம் தனை இகழ்' என்று பாரதி சொன்னதைக் கையிலெடுத்துக் கொண்டு நாடெங்கும் செல்கிறார் கல்கி. மகாபலிபுரம் போகிறார். அரக்கன் பெயரால் அவ்விடம் அழைக்கப்பட வேண்டுமா? – வருந்துகிறார். சிவகாமியின் சபதம் மூலம் மாமல்லபுரம் என்று மாற்றிக் காட்டுகிறார். புதுமைப் பித்தனையும் பாரதியையும் எல்லோருக்கும் தெரியும்படிச் செய்கிறார். My Experiments with Truth என்று மகாத்மா எழுதியதை 'சத்திய சோதனை' என்று மொழிமாற்றுகிறார். காந்தி என்றாலே சத்திய சோதனை; சத்திய சோதனை என்றாலே காந்தி என்கிற அளவுக்குப் பின்னாளில் ஆகிப்போகிறது..." என்று கூறியவர், கல்கியின் நகைச் சுவைக்கு உதாரணமாக 'ஓ மாம்பழமே' கட்டுரையை வரி வரியாகப் படித்து, வந்திருந்தவர்களைச் சிரி சிரியென்று சிரிக்க வைத்தார்.

நிறைவுரையாற்றிய கி.ரா., அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து, கல்கி தமது முதல் பயணக் கட்டுரையே பெங்களூர் – மைசூர் பற்றித்தான் எழுதினார் என்கிற பொருத்தத்தை நினைவுகூர்ந்தார். தமிழ்ச் சங்க நூலகத்துக்கு அமரர் கல்கியின் படம் வரைந்து அனுப்பப்படும் என்றும் உறுதியளித்தார்.

சங்கச் செயலாளர் கவிஞர் ந. தாஸ் நன்றி கூற, ஓர் அரிய மாலைப் பொழுதின் இனிய நிகழ்வுகளையும் சொற்பெருக்கையும் சுமந்து மனநிறைவுடன் கலைந்தது கூட்டம். ○

— பெர்னாண்டஸ்

ஓர் அறிவிப்பு

அமரர் கல்கி நூற்றாண்டு விழா


மினி தொடர்கதைப் போட்டி:

அமரர் கல்கி நூற்றாண்டு விழா "மினி தொடர்கதைப் போட்டி" முடிவு தேதியை டிசம்பர் 15 என அறிவித்துள்ளீர்கள். இன்னும் சற்று அவகாசம் கிடைத்தால் நிறைய இளம் எழுத்தாளர்கள் பங்கு பெற உதவும்.


– பா. சத்தியமோகன்

எழுத்தாளர்கள் பலர் இதேபோல் கேட்டுக் கொண்டதன் பேரில், நான்கு வாரத் தொடர்களை அனுப்பி வைக்க வேண்டிய கடைசி தேதி ஜனவரி 1, 1999க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

– ஆர்











● **எம். பிரபு,**
குமராட்சி.

? *சு. சுவாமி ஏன் இப்படி எல்லாத் தலைவர்களையும் குறைகூறுகிறார்?*

! தம்மிடம் மட்டும் குறையே இல்லை என்று அவர் எண்ணிக் கொண்டிருப்பதால்தான்!

● **என். பாலகிருஷ்ணன்,**
மதுரை – 1.

? *சந்தன வீரப்பன் மீண்டும் தப்பி விட்டானே?*

! எங்கே பிடிபட்டான், மீண்டும் தப்ப...? அவனது கேஸட் பேட்டியிலுள்ள கேலியால் சீண்டப்பட்டாவது காளிமுத்து கொஞ்சம் தீவிரம் காட்டலாம்.

● **த. குணசேகரன்,**
கவுந்தப்பாடி.

? *"ஜெயலலிதா மீது அவதூறு வழக்குத் தொடர நினைப்பது பைத்தியக்காரத்தனம்" என்று சு. சுவாமி கூறுகிறாரே...?*

! உண்மைதான்... உடனே தடைகோரி மனு கொடுப்பார். அப்புறம் உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம் என்று போவார். சென்னை தலைமை நீதிபதியை ஹைதராபாத்துக்கு மாற்ற செல்வாக்கைப் பயன்படுத்துவார்... குற்றச்சாட்டுகளை சந்திக்க அவருக்கு ஏது துணிவு?

● **கே. ஆர். ரவீந்திரன்,**
சென்னை – 1.

? *காஞ்சிபுரம் இரயில்வே விழாவில் முஸ்லிம் – கிறிஸ்துவ மதத் தலைவர்கள் கலந்து கொண்டதால்தான் சங்கராச்சார்யார்கள் அவ்விழாவைப் புறக்கணித்தார்களா...?*

! ஊர்ப் பெரியவர்கள் யாராயினும் ரயில்வே விழாவுக்கு அழைப்பது வழக்கம்தான். இதற்கு முன்பு பங்காரு அடிகளார் போன்ற மதத் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். அப்போது பி.ஜே.பி. ஆட்சி இல்லை. இது தெரிந்திருந்தும் காஞ்சிப் பெரியவர்களை அழைப்பதை சர்ச்சைக்கிடமாக்கியது அநாகரிகம். அப்படி சர்ச்சைக்கிடமான பிறகு ஒதுங்கிக் கொள்வதே நாகரிகம் என்று ஜெயேந்திரர் – விஜயேந்திரர் எண்ணியிருந்தால், அதைக் குறை சொல்வதற்கில்லை. முஸ்லிம், கிறிஸ்துவத் தலைவர்களும் கலந்து கொண்டால் தமக்கு ஆட்சேபணை இல்லை என்று காலந்தாழ்ந்து முதல்வர் கூறியதில் சாரமில்லை. ஆத்திகத்துடன் கூட நாத்திகமும் அழைக்கப்பட்டதே ரயில்வே நிர்வாகத்தின் நடுநிலையை உணர்த்தும்.

● **இரா. புவனேஸ்வரி,**
சென்னை – 81.

? *அந்த நாளில் பெண்களுக்கு இருந்த அச்சம், நாணம், மடம் போன்றவை இப்போது இல்லை என்கிறாரே தாமரைக் கனி...?*

! அந்தக் காலத்து அரசியல்வாதிகளுக்கு இருந்த யோக்கியதை இப்போதுள்ளவர்களுக்கு இருக்கிறதா...? அது போலத்தான்!

● **ஸ்ரீவித்யா காளிதாஸ்,**
சிதம்பரம்.

? *பழம்பெரும் இசைக் கலைஞர்கள் குறித்து தமது நினைவுகளைப் புத்தகமாக எழுதும்படி செம்மங்குடிக்கு முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளாரே?*

! மேடைப் பேச்சுடன் நின்று விடாமல் முதல்வர் செயல்படலாம். தமிழில் நல்ல வாழ்க்கை வரலாறுகளைப் பலர் எழுதியுள்ளார்கள். அவர்களில் ஒருவரை 'ஸ்பான்ஸர்' செய்து, செம்மங்குடியிடம் தகவல்கள் சேகரிக்கப் பணிக்கலாம். ஏற்கெனவே பல பத்திரிகைகளுக்கு விரிவாக பேட்டிகள் அளித்துள்ளார் செம்மங்குடி. அவற்றைச் சேகரித்துத் தொகுத்தாலே பாதிப் புத்தகம் தயாராகிவிடும்.

● **மு. இரவிச்சந்திரன்,**
சேலம் – 9.

? *லாலு விருந்தினர் மாளிகையிலுள்ள சிறையில் தச்சு வேலை செய்கிறாராமே?*

! அவரைத்தான் மாளிகையிலிருந்து கொட்டடிக்கு மாற்றி விட்டார்களே – பினாமி முதல்வராக இருந்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தார் என்பதற்காக!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
கே. காஸிகா,
5, புதிய பேருந்து நிலையம்,
பேராவூரணி.

● ஆர். ராஜதுரை,
சீர்காழி.

? நடிகை மீனா, இயக்குனர் சேரன் ஆகிய இருவரையும் இணைத்துப் பல பத்திரிகைகள் கிசுகிசு எழுதித் தள்ளின. அப்படியிருக்க, சிறந்த நடிகை, சிறந்த இயக்குனர் விருதுகளை முறையே அவர்களிருவரும் பெறத் தேர்வாகி, அதன்பொருட்டு முதல்வரைச் சந்திக்க ஒன்றாகச் சேர்ந்து போயிருக்கிறார்கள்... இது சரியா?...

! சரிதான். விருதுகள் வழங்கப்பட்டது சிறந்த நடிகை, சிறந்த இயக்குனர் என்பதற்காகத்தானே தவிர, சிறந்த கிசுகிசு ஜோடி என்பதற்காக அல்லவே!

● ஜி. ஜெயராமன்,
கூந்தலூர்.

? எடுக்க எடுக்கக் குறையாத பாத்திரம் அட்சய பாத்திரம். போடப் போட நிரம்பாத பாத்திரம் இருக்கிறதா...?

! இருக்கிறதே... மனித மனம்! போதும் என்று நிறைவடையாமல் மேலே மேலே ஆசைப்பட்டு மோசமும் போகிறது!

● கப்பு வேதையா
சித்திரவேலு, கருப்பம்புலம்.

? ஆண்மீகமாக இருக்கும் ஆன்மிகம் பெண்மீகமாக மலர்ச்சி பெற வேண்டும். அப்போதுதான் சமத்துவமும் ஏற்படும். ஆன்மிகமும் வளர்ச்சி அடையும் என்று லட்சுமி பங்காரு அடிகளார் கூறியிருக்கிறாரே...?

! ஆன்மிகம் என்பது ஆண் - பெண் பேதங்களைக் கடந்தது. அதை உண்மையாக உணர்ந்தவர்கள் இப்படி வித்தியாசம் பாராட்டிப் பேசி அசிங்கப்படுத்த மாட்டார்கள். லட்சுமி பங்காரு அடிகளார் இதிலும் 33 சதம் ஒதுக்கீடு கேட்டாலும் கேட்பார்.

● ந. வத்தியக்குமாரன்,
சென்னை - 41.

? காதல் சின்னம், கல்லறை, அழகியல் அற்புதம், உலகம் வியக்கும் பளிங்கு மாளிகை... இதில் தாஜ்மகாலை எப்படி வர்ணிக்கலாம்?

! இன்று : சுற்றுச் சூழல் மாசின் விளைவுகளை எடுத்துக் காட்டும் பரிதாபமான உதாரணம்.

● கே. கனிகா,
பேராவூரணி.

? சமூகம், அக்கறை என்று எழுதினாலும் எழுத்து உங்களுக்குப் பிழைப்புத் தானே...?

! யாரில்லை என்றார்கள்? எந்தப் பிழைப்பையும் தேசநலனுடன் இணைத்து நடத்த முடியும் என்பதுதான் முக்கியம். அந்த உணர்வோடு ஒவ்வொருவரும் செயல்பட்டால்தான் தேசமும் பிழைக்கும்.

● டி. முகம்மது வசீம்,
எலந்தங்குடி.

? ஐ.நாவின் விருது பெற்ற ஆந்திரப் பெண்மணி பாத்திமா பீவிக்குச் சேர 'ஜெ' கட்சிதானா கிடைத்தது...? வேறொன்றும் கிடைக்கவில்லையா...?

! அ.தி.மு.க.வின் ஏமாற்று வேலை, பிறகு அப்படியொன்றுமில்லை என்று பூசி மெழுகல் - இவை ஒருபுறமிருக்க, ஐ.நா. விருது பெற்ற ஆந்திரப் பெண்மணிக்கு, எதிலும் கையெழுத்துப் போடுமுன் (படித்துப்) புரிந்துகொண்டுதான் போட வேண்டும் என்று தெரியாமல் போனது ஆச்சர்யம்.

● கே. ஆர். வேலுச்சாமி,
அன்னூர்.

? ஓர் எழுத்தாளனுக்கு எழுதுவதற்கு எல்லை எதுவும் உண்டா...?

! பேப்பருக்கு வெளியே எழுத முடியாதே!

லாலு, தச்சு வேலை செய்கிறாராமே...?











காதில் விழுந்தவை:

● கலைஞரும் தட்டிக் கேட்கத் தயங்கும் ஸீனியர் அமைச்சரின் ஜூனியர் உதவியாளர் அவர். சில நாட்களுக்கு முன் அவர் வீட்டில் தங்க நகைகளும் ரொக்கப் பணமும் திருடுபோய்விட்டன. திருடு போன ஐந்தரை லட்சம் ரொக்கத்தைக் குறிப்பிட்டு புகார் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார் அவர். காரணம் அந்தப் பணத்தைக் குறிப்பிட்டால், வருமான வரி, லஞ்ச ஒழிப்புத்துறை ஆகியவற்றுக்குக் கூடுதலாக ஒரு கேஸ் கிடைத்துவிடுமோ என்ற பயம்தான். எனவே ஐம்பது சவரன் நகை மட்டுமே திருடு போய் விட்டதாகப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். இது பற்றி லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, "காற்று திசை மாறி வீசும்போது அவர் அகப்பட்டுக் கொள்வார். யாரிடம் பணம் வாங்கி யாருக்குக் கொடுப்பதற்காக வைத்திருந்தார் என்பது அப்போது தெரிந்து விடும்" என்றார்.





● "பா.ஜ.க மாநில இடைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது... இனி, எங்கள் கையில் வில்லாக வளைய வேண்டிய நிலை அவர்களுக்கு" என்றார் அந்த முன்னாள் அ.தி.மு.க அமைச்சர். தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் கோரிக்கை ஒரு பக்கம் இருக்க, தமது தமிழகக் கூட்டணிக் கட்சிகளுக்குத் தான் யார் என்பதைக் காட்டப் போகிறாராம் அம்மா. "வாழப்பாடி இலாகாவை மாற்றியே தீர வேண்டும்" என்று கோரிக்கை மீண்டும் வைக்கப்படும். அதைவிட முக்கியமாக, ம.தி.மு.க.வுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறதாம். பெர்னான்டஸ்ஸுக்கு இனி அதிக வேலை இருக்கிறது!

● அ.தி.மு.க. உட்கட்சித் தேர்தல்கள் அடிதடியோடு ஒரு வழியாக நடந்து முடிய, தி.மு.க.வில் வட்டச் செயலாளர் தேர்தல் துவங்கி பல்வேறு உயர் பதவிகளுக்குத் தேர்தல் நடக்க இருக்கிறது. மாவட்டச் செயலாளர்கள் பதவிக்குப் போட்டியிடுபவர்கள் தோள் தட்டிக் கொண்டு களப் பணியில் இறங்கி இருக்கிறார்கள். இதற்கிடையில் கலைஞரை தினமும் சந்திக்கும் சில மூத்த பிரமுகர்கள் ஒரு ஸிண்டிகேட் அமைத்திருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களில் போட்டியில் இருக்கும் கட்சிக்காரர்களில் சிலரை மட்டும் அடையாளம் கண்டு கொண்டு, அவர்களை 'கை' தூக்கி விடும் பணியில் இறங்கி இருக்கிறார்களாம். எதிர்காலத்தில் கட்சியைத் தங்கள் பக்கம் இழுக்கப் பிள்ளையார் சுழி போடும் முயற்சியாம் இது. "அந்தாளு மேல தலைவருக்கு நல்ல ஒபீனியன் இல்லைப்பா" என்று கோயபல்ஸ் பிரசாரத்தின் மூலம் எதிராகப் போட்டியிட முனைந்துள்ள நபரின் செல்வாக்கைச் சரிய வைத்திருக்கிறார்களாம். அரசியலுக்குள் அரசியல்!

காங்கிரஸுக்கு ஜலதோஷம்!

● மூக்குள்ள வரை ஜலதோஷம். அதுவும் தமிழக காங்கிரஸ் கோஷ்டிப் பூசலைப் பற்றிச் சொல்லாமல் இருப்பதே நல்லது என்ற நிலை. திண்டிவனத்துக்கு தேன்கடி துவங்கி விட்டது. முதல் கட்டமாக அனந்தன், தங்கபாலு, எம்.பி. சுப்பிரமணியம் ஆகியோர் திண்டிவனத்துக்கு எதிராகக் கூட்டணி அமைத்திருக்கிறார்கள். சமீபத்தில் தமது ஆதரவாளர்களுடன் தனியாக ஒரு கூட்டம் நடத்தினார் தங்கபாலு. "பல்வேறு கட்சி நியமனங்களில் திண்டிவனம் காட்டிய பாகுபாடு பற்றி நீண்ட புகார் பட்டியல் தயாராகி வருகிறதாம். பனிக்காலம் ஆயிற்றே. ஜலதோஷம், கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும்!

— தில்லப்பா



காஞ்சி முனிவர் 4-வது ஆராதனை : 15.12.1998

ஸ்ரீ காஞ்சி மகா பெரியவர்களின் அருமை பெருமைகளில் அலையாடி அடியார்கள் மனம் குளிர ஆறு நூல்கள்!

ரா. கணபதி அளிக்கும்

சொல்லின் செல்வர் ஸ்ரீ காஞ்சி முனிவர்	ரூ. 30.00
மஹா பெரியவாள் விருந்து	ரூ. 18.00
காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம்	ரூ. 25.00
கருணைக் காஞ்சி - கனகதாரை	ரூ. 20.00
"மைத்ரீம் பஜத!"	ரூ. 20.00
சங்கரர் என்ற சங்கீதம்	ரூ. 22.00

தபாலில் பெறக் கட்டணம் தனி.

கிடைக்குமிடம் : ஹிக்கின்பாதம்ஸ், 814, அண்ணா சாலை, சென்னை - 600 002.
கிரி டிரேடிங் ஏஜென்ஸீஸ், 10, சந்நிதித் தெரு, மயிலை, சென்னை - 600 004.
சாயி சுதா, 4, அலமேலுமங்காபுரம், மயிலை, சென்னை - 600 004.

பதிப்பாளர் : திவ்ய வித்யா டிரஸ்ட், 106/1, ஹபிபுல்லா சாலை, தி. நகர், சென்னை - 600 017.

இட்லி 240 ரூபாய்; தோசை 320 ரூபாய்!

'சாதகப் பறவைகள்' என்ற மெல்லிசைக்குழு, அமெரிக்கா, கனடா என்று ஒன்றரை மாதம் சுற்றுப் பயணம் செய்து மேடை நிகழ்ச்சிகள் வழங்கித் திரும்பியுள்ளது. 'சாதகப் பறவைகள்' சங்கர், தம் அனுபவங்களைச் சொல்லுகிறார்:

அமெரிக்கா செல்ல விசாவுக்கு விண்ணப்பித்தபோதே ஒரு சின்ன சிக்கல். எங்கள் குழுவில் தபலா வாசிக்கும் ரகுவிடம் அமெரிக்கத் தூதரக அதிகாரிக்கு ஏதோ சந்தேகம். வாசித்துக் காட்டச் சொல்லி விட்டார். அப்புறம்தான் விசா கிடைத்தது!

ஹூஸ்டனில் தமிழக உணவகத்தில் சாப்பிடப் போனோம். இனிய அதிர்ச்சி! அதனை நடத்தி வருபவர் ராஜ்திலக். சுமார் நாற்பது தமிழ், தெலுங்கு படங்களில் நடித்தவர். சினிமா வாய்ப்பு குறைந்தவுடன், அமெரிக்கா வந்து, ஒரு ஓட்டலில் வேலைக்குச் சேர்ந்து, இன்று தாமே ஒரு ஓட்டல் நடத்துகிற அளவுக்கு வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார்.

அமெரிக்காவிலும் சரி, கனடாவிலும் சரி ஏராளமான இந்திய, தமிழ் நாட்டு உணவகங்கள் உள்ளன. இங்கே வந்து சாப்பிடுபவர்களில் மெஜாரிட்டி அமெரிக்கர்கள்தான். விலை எப்படி? இட்லி ஒரு பிளேட் 240 ரூபாய்! தோசை 320 ரூபாய். வடை 200 ரூபாய்! இவ்வளவு விலை கொடுத்து இட்லி, வடை, சாப்பிடுவதா? என்று இந்தியர்கள் நினைக்கிறார்கள். எனவேதான் இங்கே இந்தியர்கள் வருகை குறைச்சல்!

டொராண்டோவில் வார இறுதி நாட்களில், கால் பந்து மாட்ச் நடத்துகிறார்கள் இலங்கைத் தமிழர்கள். நுழைவுக் கட்டணம் இல்லை. ஆனால் ஒரு கண்டிஷன். தமிழ் பேசத் தெரிந்திருக்க வேண்டும். இலங்கை, இந்தியத் தமிழர்கள் தவிர, கால்பந்து ஆர்வம் மிகுந்த அமெரிக்கர்களும், கறுப்பு இனத்தவரும் கூட, சில தமிழ் வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, மைதானத்துக்குள் மாட்ச் பார்க்கப் போவது வித்தியாசமாக இருந்தது. கடல் கடந்து தமிழ் வளர்க்க இதுவும் ஒரு வழி!

டிஸ்னிலாந்தில் ஒரு பாகிஸ்தானியரைச் சந்தித்தபோது நாங்கள் இந்தியர்கள் என்று தெரிந்து கொண்டு, இந்தியில் பேசினார். எங்களுக்கோ இந்தி தெரியாது. 'என்ன, இந்தியாவிலிருந்து வருகிறீர்கள்! உங்கள் நாட்டு மொழி உங்களுக்குத் தெரியவில்லையே!' என்றார். இந்தியா என்பது பல மொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு என்பதை வெகு சிரமப்பட்டு அவருக்குப் புரியவைத்தோம்!



• வலது கோடியில் சங்கர் (தம் குழு நண்பர்களுடன்)

நியூயார்க்கில், டிஸ்கோ ஷாப்புக்குச் சென்றோம். அங்கே, வந்திருந்தவர்களில் இந்தியர்கள் சொற்பம் என்றாலும், ஏ.ஆர். ரஹ்மான், தலர் மெகந்தி ஆகியோர் பாடல்கள் தான் அதிகம் பாடப்பட்டன!

நியூயார்க்கின் ஒரு பிரதான சாலையில் இந்தியர் ஒருவருக்குச் சிலை வைத்திருப்பதும், அந்தச் சிலைக்கு தினம் மாலை அணிவித்து மரியாதை செய்வதும் ஆச்சரியம். இப்படி மரியாதை பெறுபவர் காந்திஜி.

தொகுப்பு : கௌதம்

மதச்சார்பின்மை: தவறாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்!

சுமார் 550 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது, நெல்லை மாவட்டம் நாங்குனேரியில் உள்ள வானமாமலை ஜீயர் மடம். ஜீயரின் ஆசியுடன் அண்மையில் சென்னையில் ஓர் இசை விழா நடத்தப்பட்டது. சென்னைக்கு விஜயம் செய்த வானமாமலை ராமானுஜ ஜீயரை, திருவல்லிக்கேணியில் உள்ள வானமாமலை மடத்தில் சந்தித்தோம்.

"மடத்தின் பணியில் ஆன்மீகம் தானே பிரதானம்? அடுத்தபடி கல்வி. அதிலிருந்து மாறுபட்டு இசை விழா நடத்துவதன் பின்னணி என்ன?"

"ஸ்ரீ ராமானுஜர் கல்வி அறக்கட்டளை சார்பில், நாங்குனேரியில் '96ம் வருடம் ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. எட்டாம் வகுப்பு வரை கொண்ட அதற்கு, புதிய கட்டடங்கள் கட்ட நிதி தேவைப்படுகிறது. வெறுமனே நன்கொடை வசூலிப்பதற்குப் பதிலாக, இசை நிகழ்ச்சி நடத்தி நிதி திரட்டலாம் என்ற எண்ணத்தின் விளைவு தான் இந்த இசை விழா!"

"இப்போதும் பள்ளிக்கூடம் நடத்தி வருகிறீர்கள். பூர்வாசிரமத்தில், சுமார் நாற்பது வருடங்கள், நாடெங்கும் உள்ள மத்திய அரசுப் பள்ளிகளில் கல்விப் பணியாற்றிய அனுபவம் உங்களுக்கு உண்டு. கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?"

"காலச் சக்கரம் சுழலுகிறபோது, மாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. மற்ற எல்லா விஷயங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகிறபோது, கல்வித் துறையிலும் மாற்றங்கள் வரத்தான் செய்யும். பழையன கழிதலும், புதியன புகுதலும் தவிர்க்க முடியாதவை. ஆனால், ஒரு விஷயம் பழையது என்பதாலேயே, அது எத்தனை நல்லதாக இருந்தாலும் கழித்துவிடுவதும் தவறு; அதே போல, புதியது என்ற ஒரே காரணத்துக்காக, இந்த சமுதாயத்துக்குத் தீமை பயக்கக் கூடியவற்றை ஏற்றுக் கொள்ளுவதும் தவறு. கல்வி என்பது நல்லது, கெட்டது எது என்று ஆராய்ந்து தெரிந்து கொள்ளும் அறிவைக் கொடுக்க வேண்டும் என்பது மிக முக்கியம்."

"பாடம் படிப்பதிலும், பொது அறிவிலும் சிறந்து விளங்க வழி செய்தாலும், இன்று இருக்கும் பாடத்திட்டத்தில், நல்லகுடிமகன்களாக மாணவர்கள் உருவாவதற்குப் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு சொல்லப்படுகிறதே!"

"அது சரிதான். அந்தக் காலத்திலும், மாணவர்களுக்கு விஞ்ஞானம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. அதே சமயம், அதற்கு இணையான முக்கியத்துவம் மெய்ஞானத்துக்கும் தரப்பட்டது. ஆனால் இன்று, விஞ்ஞானத்தின்



வானமாமலை ஜீயர் பேட்டி

முக்கியத்துவம் பல மடங்கு அதிகரித்து, அதேசமயம், மெஞ்ஞானம் ஒதுக்கப் பட்டு விட்டது. இதுதான் இன்றைக்கு இருக்கும் பெரிய குறை. இந்தக் குறையை நிவர்த்தி செய்து விட்டால், எல்லாம் சரி யாகி விடும்.''

''மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கல்வியில் புகுத்தினால் பிரச்னைகள் வராதா?''

''அவரவர், தம்முடைய மதங்களைப் பற்றிப் படிக்கட்டும். அதன் மூலம் அவற்றில் உள்ள நல்ல விஷயங்களைக் கடைப்பிடித்தால் நல்லதுதானே! இந்த நாட்டில், 'மதச்சார்பின்மை' என்கிற வார்த் தைதான் அரசியல்காரர்களால் மிகமிகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படும்- பயன்படுத்தப்படும் வார்த்தை என்று சொல்லலாம். 'மதச்சார்பின்மை' என்பது எந்த மதத்தையும் சமமாக பாவிக்கும் மனப் பக்குவம் என்பது முதலில் அனைவராலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். சுயநல நோக்கத்தில், இதனை அரசியலில் இருப்பவர்கள் பயன்படுத்து வதால்தான் இன்று நாட்டில் ஏகப்பட்ட பிரச் னைகள்.''

''இன்று நாட்டில் மதக் கலவரங்கள், ஜாதிச் சண்டைகள் மலிந்து விட்டன. இதற்கு என்னதான் தீர்வு?''

''சண்டை போட்டுக் கொள்ளுகிற மக்களை சமாதானம் செய்ய, என்னைப் போன்றவர்களை யாரும் அணுகுவதில்லை; அங்கு போய் ஏதாவது செய்ய உரிய ஏற்பாடு செய்வதில்லை. அரசியல் காரர்கள்தான் போகிறார்கள். ஆனால் அவர்கள் ஆன்ம சுத்தியுடன் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.''

''சமத்துவபுரங்களை, ஆங்காங்கே அரசு அமைத்து வருவதை வரவேற்கிறீர்களா?''

''மக்கள் தங்களுக்கிடையே உள்ள பேதங்களை மறந்து, ஒற்றுமையாய் வாழ இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துவதாக அரசாங்கம் சொல்லுகிறது. உண்மையில் இது நடக்குமானால், நான் மனப்பூர்வமாக வரவேற் பேன்.''

''காஞ்சி மடாதிபதிகளை, ரயில்வே விழாவுக்கு அழைத்ததை சர்ச்சைக் குரியதாக்கியது சரிதானா?''

''ஒரு ஊரில் ஒரு விழா என்றால், அதற்கு அப் பகுதி முக்கியஸ்தர்களை அழைப்பது பொதுவான மரபுதான். அந்த விஷயத்தில் சங்கராச்சாரியார் களை அழைத்ததில் தவறேதுமில்லை. அவர்கள், ரயில்வே விழாவில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் தானே வழங்கவிருந்தார்கள்? மதப் பிரசாரம் செய் வதாக இல்லையே! இதைப் புரிந்து கொள்ளாமல் சர்ச்சையாக்குவானேன்?'' ●

சந்திப்பு : **மானஸா**
படம் : **யோகா**

வேட்டை

“இதுக்கு, இன்னிக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும்'' என்றாள் என் மனைவி. முகத்தில் அசாத்திய கோபம். இந்தக் கோபத்துக்கு, நகைநட்டு, புடவை இதுபோல ஏதாவது வாங்கித் தராதது காரண மில்லை. எலி! ஒரு எலிதான் எங்கள் வீட்டின் பிரச்னை! அத னால்தான் என் மனைவியின் எண்ணெய் வழியும் முகத்தில் எள்ளும் கொள்ளும்.

ஒரு வாரமாக, எங்கள் வீட்டை உண்டு இல்லை என்று பண்ணிக் கொண் டிருக்கிறது ஒரு எலி. ரெண்டு நாட்களுக்கு முன்னால், மார்க்கெட்டிலிருந்து வாங்கி வந்த காய்கறிகளுள் ஒரு கிலோ தக்காளியும் அடக் கம். (வெங்காயம் வாங்கி உபயோகிக்கிற அளவுக்கு வசதியானவன் இல்லை நான்.)


எல்லா காய்கறிகளையும் பிளாஸ்டிக் பைகளில் போட்டு, ரெப்ரெஜிரேட்டருக் குள்ளே எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். சென்னை மாநகரத்து பிளாட்பாரங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் கடை போல, தோசை மாவு பாத்திரம் எங்கள் வீட்டு பிரிட்ஜை ஆக்கிரமித்துக் கொண்டிருந் தது. இடமில்லாத காரணத்தால், தக்காளியை மட்டும் ஒரு பிளாஸ் டிக் டிரேயில் போட்டு மூடி பிரிட்ஜுக்கு வெளியிலேயே வைத்து விட்டாள்.

மறுநாள் காலை எழுந்து, பால் பாக்கெட்டை எடுக்க பிரிட்ஜ் கிட்டே போனபோது, ‘தொபு கடீர்' என்று சப்தம். காலில் பிசுக்கென்று ஏதோ இருந்தது. டியூப் லைட்டைப் போட்டுப் பார்த் தால், தரையெல்லாம் தக்காளி ஜூஸ். கடித்துக் குதறப்பட்ட தக்காளித் துண்டுகள். ஒரு கிலோ தக்காளியையும் கிரிக்கெட் பந்தாக வும், தன்னை சச்சின் டெண்டுல்கராகவும் எங்கள் வீட்டு ரூமையே கிரிக்கெட் மைதான மாகவும் கருதி, ஒரு நாள் டெஸ்ட் மாட்சே ஆடி, துவம்சம் செய்திருந்தது எலி.

''எதாவது பண்ணி, அந்த சனியனைப் பிடியுங்கள்'' என்றாள் மனைவி. ''எலி பாஷாணம் வைத்து' விடுங்கள். கலபமாய் செத்துவிடும்'' என்று ஐடியா கொடுத்தாள் வேலைக்காரி. ''ஐயோ! எலி பாஷாணமா? வேண்டவே வேண்டாம்'' என்றாள் என் வீட்டுக்காரி.

''நாலு ரூபாய்தாம்மா செலவு. சோத்துல கலந்து, கிச்சன்ல வெச்சிட்டீங்கன்னா, எலி அதைத் தின்னுட்டு 'மவுத்' ஆயிடும்'' என்று தன் தரப்பு வாதத்துக்கு வலு சேர்த்தாள் வேலைக்காரி.

''இந்த விஷம் வைக்கிற பிசினசே வேணாம். போன மாசம் என் பிரண்டு கலோச்சனா வீட்டுல என்ன ஆச்சு தெரியுமா? இது போலத் தான் ஒரு எலி தொல்லை கொடுத்துக் கொண் டிருந்தது. எலி பாஷாணம் வெச்சாங்க. அதற் கப்புறம் ரெண்டு நாள் எலி நடமாட்டமே இல்லை. இவங்க எலி ஒழிஞ்சதுன்னு நிம்மதியா இருந்தாங்க. அப்புறம் தான் சிக்கலே! பால்கனி பக்கம் போகிறபோது, திடீர்னு ஏதோ நாற்றம். பால்கனி யில ஒண்ணுமில்லை. எங்கேயிருந்து நாற்றம் வருதுன்னு புதிரா இருந் தது. கடைசியில, பால் கனிக்கு மேல இருக்கிற பரணிலிருந்துதான் நாற்றம்னு கண்டு பிடிச் சாங்க. ஸ்டூலைப் போட்டு, ஏறிப் பார்த்தால்,



எஸ். சந்திரமௌலி

விஷம் தின்ன எலி அங்கே காலைப் பரப்பிக் கொண்டு, செத்துக் கிடந்தது.

''முகமூடிக் கொள்ளைக்காரன் போல, டவலால் மூக்கைக் கட்டிக் கொண்டு துடைப்பம், முறம் சகிதம் மேலே ஏறி, செத்த எலியை அப்புறப்படுத்தின பிறகும் நாலு நாளுக்கு, செத்த எலி நாற்றம் தொடர்ந்ததாக பிரமை அவர்களுக்கு. எனவே, உங்களுக்குப் புண்ணியமாகப் போகும். இந்த விஷம் வைத்துக் கொல்லுகிற டெக்னிக் எல்லாம் வேணாமே! ப்ளீஸ்!'' என்று குட்டிப் பிரசங்கம் ஒன்றே நடத்தி விட்டாள் என் மனைவி.

"நீ எலிப்பொறி இருக்கிறதா என்று அக்கம் பக்கத்தில் விசாரித்து வை. நான் எலி பிடிக்க வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று



என் ஆபீசில் யாரிடமாவது கேட்டுப் பார்க்கிறேன்" என்றேன்.

ஆபீசுக்கு வந்து, அட்டன்டென்சில் கையெழுத்துப் போட்ட கையோடு, பார்க்கிறவர்களிடமெல்லாம் எலிப் பிரச்னை பற்றித்தான் பேச்சு. அன்று ஆபீசில் நடந்த அரட்டையில் எலி பாஷாணம் வைத்து எலியைக் கொல்லலாமா? கூடாதா என்கிற வாதம், விவாதம்தான் ஆக்கிரமித்தது. அது பற்றி ஒரு பட்டிமன்றத்தில் பேசுகிற அளவுக்கு விஷயம் கிடைத்தது. (இப்போதெல்லாம் இது போன்ற உருப்படியான தலைப்புகளில் யார் பட்டிமன்றம் நடத்துகிறார்கள்?)

ஆபீசுக்குப் பக்கத்திலிருக்கும் ஹார்டுவேர் ஸ்டோர்சுக்கு, லஞ்ச் நேரத்தில் போனேன்.

நாற்பது ரூபாய் விலை சொன்ன எலிப் பொறியை, முப்பத்தெட்டு ரூபாய் பேரம் பேசிப் பணத்தைக் கொடுத்த போது, "நெய் தடவின வெங்காயம், தேங்காய், மசால் வடை எது வெச்சாலும் எலி மாட்டும்" என்றார். 'என்னங்க, மனுசனுக்கே சாப்பிட நாட்டுல வெங்காயம் கிடைக்கமாட்டேங்குது. நீங்க என்னடான்னா எலிக்கு வெங்காயம் வைக்கச் சொல்றீங்களே! என்றேன். கடனுக்குச் சிரித்து வைத்தார் கடைக்காரர்.

அன்று இரவே எலியுடனான என் நேரடி மோதல் ஆரம்பமானது. "இன்று இரவு பத்து மணிக்கு, அப்பாவும் எலியும் எதிர்த்து வழங்கும் நேருக்கு நேர்" என்று விவிதபாரதி வர்த்தக ஒலிபரப்பு பாணியில் என் மகன் அறிவித்தான்.

எலிப் பொறிக்குள் என்ன வைப்பது என்று என் மனைவியுடன் கலந்தாலோசித்தேன். 'போனால் போகுது' என்று அவள் ஆரம்பிக்க, "என்ன! எலியைப் பிடிக்காமலேயே விட்டு விடலாம்னு சொல்லறியா?"

சற்றே அதிர்ந்த குரலில், "ஐயோ! அது இல்லீங்க. போனால் போகுது! நெய் தடவின வெங்காயமே வெச்சிடலாம். ஒரே ஒரு வெங்காயம்தானே!" என்றாள். அதற்கு மேல் ஏது அப்பீல்?

ஒரு வெங்காயத்தை எடுத்து நெய் தடவி, பொறியினுள் கைவிட்டு, கம்பியில் குத்தி வைத்தேன். பத்தாவாக எலிப் பொறி தயாரானதும், சமையல் அறைக்குள்ளே குத்து மதிப்பாய், எலி நடமாட்டத்தைக் கணக்கிட்டு ஒரு இடத்தில் அதை வைத்தேன். லைட்டைப் போட்டு வைத்தால் எலி வருமா? அணைத்து வைத்தால் வருமா? என்ற கேள்வி அடுத்து எழுந்தது. என் மனைவி முடிவுப்படியே ஸ்விட்ச் ஆஃப் ஆனது.

உடம்பு படுக்கையில் கிடந்தாலும் என் காது கிச்சனில்தான் இருந்தது. எப்போது எலிப் பொறியின் வாய்மூடும் 'டப்' சப்தம் கேட்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அப்படியே தூங்கிப் போய்விட்டேன்.

நள்ளிரவில் திடீரென்று விழிப்பு வந்தது. எலி சிக்கியதா? இல்லையா? என்று அறிய மனம் குறுகுறுத்தது. மெதுவாக எழுந்து சமையலறைக்குப் போய்ப் பார்த்தேன். அகல வாய்திறந்தபடி எலிப் பொறி. வெங்காயம் உள்ளே இருக்கிறதா என்று அறிய பொறியினுள் கை விட்டேன். சட்டென்று கம்பி விலகி, கையை அழுத்தியபடி பொறி மூடிக் கொண்டது. வலி இல்லை என்றாலும், விரல்களில் 'சுரீர்' என்று இருந்தது. இன்னொரு கையால் லைட்டைப் போட்டால்... எறும்பு! வெங்காயமும், நெய்யும் சேர்ந்து எலியைக் கவரவில்லை என்றாலும், சாரி சாரியாய் எறும்புகளைக் கவர்ந்திழுத்து, எங்கள் வீட்டுச் சமையலறைக்குள்ளே, புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியின் பேரணியைத் தோற்கடிக்கும் விதத்தில் எறும்புகளின் பேரணி!

கையை உதறிவிட்டு, குழாயில் கைகழுவிக் கொண்டு, மறுபடி வந்து படுத்தபோது என் மனைவி விழித்துக் கொண்டு விட, அவளிடம்

சிறுமி நடத்திய இயக்கம்

சிறுமி விர்ஜினியின் அக்கா வன்முறையாளர்களால் அநியாயமாகக் கொல்லப்பட்டாள். இதற்கு அடிப்படைக் காரணம் டி.வி., சினிமாக்களில் உள்ள வன்முறைக் காட்சிகளே என்று நம்பிய விர்ஜினி ஒரு இயக்கமே நடத்தினாள். சிறுமியின் கருத்தை ஆதரித்து உலகம் முழுவதிலிருந்தும் கடிதங்கள் குவிந்தன. இவற்றை அரசிடம் காண்பித்து கனடா தேசத்தில் வன்முறைக் காட்சிகளைப் பகலில் ஒளிபரப்பத் தடை உத்தரவு பெற்று விட்டாள், சிறுமி. ஐ.நா. சபையின் யுனெஸ்கோ அமைப்பு கூட இதற்கு ஆதரவு காட்டியுள்ளது.

—பாரீஸ் பார்த்தசாரதி

விஷயத்தைச் சொன்னேன். என்னை மெத்தனப் பேர்வழி என்று சொல்கிற அவள், இப்போது, 'உங்களுக்கு எதிலும் அவசரம்' என்று பிளேட்டைத் திருப்பிப் போட்டாள்! சே! எறும்புகளே தேவலாம்!

அடுத்த நாள் இரவு, 'இன்று வெங்காயம் வேண்டாம். தேங்காய் வைக்கலாம்' என்றாள் என் மனைவி. தலையாட்டிவிட்டு, சமையலறை மேடையில் தேங்காய் மூடியை வைத்து, ஒரு கையால் தேங்காய் மூடியைப் பிடித்துக் கொண்டு, மறு கையில் கத்தியைப் பிடித்துக் கீற, கத்தி தேங்காயை மட்டுமின்றி என் இடது கை மோதிர விரலையும் வெட்டியது.

''ஜாக்கிரதையாய் நறுக்க



வேண்டாமா? சின்ன விஷயம்! இதுக்குக் கூடத் துப்பு கிடையாது'' என்று 'தமிழிலேயே அர்ச்சனை' நடந்தது.

கைக்கு மருந்து போட்டுவிட்டு, தேங்காய்த் துண்டை எலிப் பொறிக்குள் பொருத்தி விட்டு, 'இன்றைக்காவது எலி சிக்க வேண்டும்! உனக்கு முழுத் தேங்காய் உடைக்கிறேன் பிள்ளையாரப்பா!' என்று வேண்டிக் கொண்டே படுக்கப் போனேன்.

நடுராத்திரி மனைவி விழித்துக் கொண்டு, என்னையும் எழுப்பி, 'எலி என்ன ஆச்சு?' என்றாள். ''வா! போய்ப் பார்க்கலாம்!'' என்று சொல்லிவிட்டு இரண்டு பேரும் எழுந்து கிச்சனுக்குப் போனோம். எலிப்பொறி 'ஆ' என்று வாய் பிளந்து இருப்பதை நான் கவனிக்க, என் மனைவி, ''உங்களை என்ன செய்தா தேவலை?'' என்றாள். ''ஏன்? என்ன ஆச்சு?'' என்று நான் கேட்க, ''எலி வந்திருக்கு. ஆனால் எலிப் பொறிக்குள்ளே போகலை! ஸ்மார்ட் எலி!'' என்று சர்டிபிகேட் கொடுத்தாள். எனக்கு ஆத்திரமாக வந்தது.

''தேங்காய்த் துண்டு போட்டு, எலிப் பொறிக்குள் வைத்த பின், தேங்காய் மூடியை மறுபடி பிரிட்ஜில் கொண்டு போய் வைக்காமல் மேடையிலேயே வெச்சுட்டீங்க! எலி வந்திருக்கு. ஆனா, எலிப் பொறிக்குள்ளே போகாம, வெளியில இருந்த தேங்காய் மூடி மொத்தத்தையும் துருவித் தின்னுட்டு ஜூட் விட்டு விட்டது'' என்றாள்.

என் மொத்தக் கோபமும், மறைந்து நின்று என்னுடன் மோதும் என் எதிரி எலி மீது. 'இன்னும் இருபத்து நாலு மணி நேரத்தில் உன்னைப் பிடித்துக் காட்டுகிறேன் பார்!' என்று சவால் விட்டேன். தன்னை, அந்த எலி தரப்பு வக்கீலாக நினைத்துக் கொண்டு விட்டாள் என் மனைவி. ''அதையும் பார்த்து விடலாமே!'' என்று பதில் சவால் விட்டாள்.

வெங்காயம், தேங்காய் எல்லாம் ஜுஜுபி; மசால் வடைதான் பெஸ்ட் என்று முடிவு செய்து, மறுநாள் ஆபீஸிலிருந்து மாலை வீட்டுக்குப் புறப்படுகிறபோது, ஆபீஸ் வாசல், பிளாட்பார டீக்கடையில் ஒரு மசால் வடை வாங்கிக் கொண்டேன்.

இரவு பத்து மணி. மசால் வடையை எலிப் பொறியில் வைத்து, செட் பண்ணிவிட்டு, கிச்சன் கதவையும் லேசாய் மூடிவைத்து விட்டு, 'டப்' ஒலி கேட்கத் தயாராக, காதைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தோம்.

அரை மணி நேரம் கூட ஆகியிருக்காது.

''டப்''.

விருட்டென்று எழுந்து கிச்சனுக்குள்ளே போனோம்.

''சபாஷ்! மிஸ்டர் எலியாரே! என் எதிரியே! மாட்டிக் கொண்டாயா?'' என்று உரக்க நேரடியாகவே எலியைப் பார்த்து சந்தோஷமாய்க் கேட்டேன். அடுத்து என் மனைவியிடம், ''பார்த்தாயா? ஜெயித்து விட்டேன்'' என்று பெருமை பொங்கச் சொன்னவுடன் அவள் பட்டென்று சொன்னாள்:

''ரொம்ப அலட்டிக்காதீங்க! ஜெயித்தது நீங்க இல்லை! மசால் வடைதான்!'' ○



முப்பத்து ஆறாம் அத்தியாயம்

தகுதிக்கு மதிப்பு உண்டா?

இளவரசரும் 'நந்தினி'யும் நின்ற இடத்தை நோக்கி வந்தியத்தேவன் விரைவாகவே நடந்தான். அவன் அவ்விடத்தை அடைவதற்குள் கொஞ்சம் சந்தேகம் தோன்றி விட்டது. இவள் நந்தினிதானா? பழுவூர் ராணிக்குரிய ஆடை ஆபரணங்கள் ஒன்றுமில்லையே! சந்நியாசினியைப் போல் அல்லவா எளிய உடை தரித்திருக்கிறாள்? முகம் நந்தினியின் முகம் மாதிரி தோன்றுகிறது. ஆனால் ஏதோ ஒரு வித்தியாசமும் இருக்கிறது. அது என்ன?

அவர்கள் நின்ற இடத்துக்கு வந்தியத்தேவன் சென்றதும் அந்த ஸ்திரீ நகர்ந்து வீதி ஓரத்து வீடுகளின் நிழலில் மறைந்தாள். வந்தியத்தேவன் பரபரப்புடன் அவளைத் தொடர்ந்து செல்லப் பார்த்தான். இளவரசர் அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்.

"ஐயா! அந்த ஸ்திரீ யார்? பார்த்த முகமாகத் தோன்றியது!" என்றான்.

இதற்குள் அங்கு வந்து சேர்ந்த ஆழ்வார்க்கடியான்," அந்த ஸ்திரீ சோழ நாட்டின் குல தெய்வமாகத்தான் இருக்க வேண்டும். அதோ பாருங்கள்! நாம் அச்சமயம் நகர்ந்திராவிட்டால் இத்தனை நேரம் புத்தர் பெருமானின் சரணங்களை அடைந்திருப்போம்" என்றான்.



கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

திருமலை சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தார்கள். அங்கே கட்டடத்தின் மேற்பகுதி இடிந்து விழுந்திருந்த இடம் ஒரு சிறிய குன்றைப் போல இருந்தது. ஒரு பெரிய யானையைக்கூட அந்தக் குன்று, வெளியில் வர முடியாதபடி அமுக்கிக் கொன்றிருக்கும். மூன்று சிறிய மனிதர்கள் எம்மாத்திரம்?

"நல்ல சமயத்திலேதான் நம் குல தெய்வம் தோன்றி நம்மைக் கையைத் தட்டி அழைத்தது" என்றார் பொன்னியின் செல்வர்.

"இளவரசே! அந்த ஸ்திரீயை யார் என்று சொன்னீர்கள்?" என்று வந்தியத்தேவன் வியப்புடன் கேட்டான்.

"உமக்கு யார் என்று தோன்றியது? அவளைத் தொடர்ந்து போக ஏன் யத்தனித்தீர்?" என்று இளவரசர் கேட்டார்.

"சோழர்களின் குல தெய்வம் என்றல்லவா இந்த வைஷ்ணவர் சொன்னார்? சோழர் குலத்துக்குக் கேடாக வந்த தேவதையாக எனக்குத் தோன்றியது."

"அப்படியென்றால்...? யார் என்று எண்ணிச் சொல்கிறீர்?"

"என்னுடைய பிரமைதானோ என்னமோ? பழுவேட்டரையர் இளைய தாரமாக மணந்திருக்கும் நந்தினி தேவி என்று தோன்றியது. உங்கள் இருவருக்கும் அப்படிப்படவில்லையா?" என்றான் வந்தியத்தேவன்.

"நான் நன்றாய்ப் பார்க்கவில்லை. ஆனாலும் அது உன் சித்தப் பிரமையாகத்தான் இருக்க வேண்டும். பழுவூர் ராணி இங்கு எப்படி வந்திருக்க முடியும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இவர் சொல்வது முழுதும் சித்தப் பிரமையன்று. கண்ணின் பிரமையும் அதில் சேர்ந்திருக்கிறது. அப்படி ஒரு அதிசயமான முக ஒற்றுமை இருப்பதாக எனக்குக் கூடச் சில சமயம் தோன்றியதுண்டு... வாருங்கள்! நடந்து கொண்டே பேசலாம்!" என்றார் இளவரசர்.

வீதி ஓரமாக வீடுகளின் நிழலில் நடப்பதற்குப் பதிலாக இப்போது மூவரும் நடு வீதியில் நிலா வெளிச்சத்தில் நடக்கத் தொடங்கினார்கள்.

சற்று நடந்ததும், "இளவரசே! தங்களைக் கையைத் தட்டி அழைத்து அந்த அம்மாள் என்ன சொன்னாள்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"என்னைத் தேடிக் கொண்டு இரண்டு சத்துருக்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னாள். அவர்கள் என்னைக் கொல்வதற்குச் சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருப்பதாகவும் சொன்னாள்.

"அடிபாவி! ஒருவேளை எங்களைப் பற்றித்தான் அப்படிச் சொன்னாளா என்ன?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

பொன்னியின் செல்வர் சிரித்து விட்டு, "இல்லை, நீங்கள்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அப்படி நீங்களாகவே இருந்தாலும் கவலையில்லை. என் உயிர் மிகக் கெட்டியானது என்று அந்தத் தேவி சொல்லியிருக்கிறாள். முன்னம் பல தடவை என்னைக் காப்பாற்றியும் இருக்கிறாள்!" என்றார்.

"ஐயா! அந்த இரண்டு பகைவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பார்த்திபேந்திர பல்லவருடன் தங்களைத் தேடி வந்தவர்கள். இடிந்து விழுந்த மாளிகையில் இரண்டு உருவங்கள் தெரிந்தன. அவர்களாகத்தான் இருக்க வேண்டும்!" என்றான் திருமலை.

"ஐயா! வைஷ்ணவரே! இதை முன்னமேயே ஏன் சொல்லவில்லை! நீங்கள் மேலே செல்லுங்கள். நான் போய் அந்த இடிந்த வீட்டைச் சோதனை போட்டு விட்டு வருகிறேன்!" என்று வந்தியத்தேவன் திரும்ப யத்தனித்தான்.

இளவரசர் அவனை மறுபடியும் கையைப் பிடித்து நிறுத்தி, "அவசரம் ஒன்றுமில்லை. அந்தப் பாழடைந்த வீட்டில் அவர்களைக் கண்டுபிடிக்கவும் முடியாது. பிறகு பார்த்துக் கொள்ளலாம். நான் மறு உத்தரவு போடும் வரையில் நீர் என்னுடனேயே இருக்க வேண்டும், தெரிகிறதா? இந்தப் பாழடைந்த நகரத்தில் இன்னும் எந்த மூலை முடுக்கில் என்ன அபாயம் காத்திருக்கிறதோ, யார் கண்டது? வீர சிகாமணியே!

உம்மை நம்பியல்லவா நான் வேறு யாரையும் மெய்க்காவலுக்கு அழைத்து வரவில்லை? இப்படி நடுவீதியில் என்னைக் கை விட்டுப் போய் விட்டால் நான் என்ன செய்வேன்?" என்றார்.

இந்த வார்த்தைகள் வந்தியத்தேவனைப் போதை கொள்ளச் செய்தன. அவன் நாத் தழுதழுக்க, "ஐயா! உங்களை விட்டு இனி நான் ஒரு கணமும் அகல மாட்டேன்!" என்றான்.

ஆழ்வார்க்கடியான், "உன்னை விட்டு நானும் அகல மாட்டேன். இளவரசருக்கு நீ காப்பு; உனக்கு நான் காப்பு" என்று சொன்னான்.

சிறிது நேரத்துக்கெல்லாம், மகாஸேன சக்கரவர்த்தியின் பாழடைந்த மாளிகையின் உட்புறத்தை மூவரும் அடைந்தார்கள். விசாலமான ஓர் அறையின் மூன்று பேருக்கும் பழைய காலத்துக் கட்டில்களில் படுக்கை விரித்திருந்தது. மூவரும் படுத்துக் கொண்டார்கள். அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த பலகணியின் துவாரங்கள் வழியாக நிலா வெளிச்சம் உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

"பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரண்மனையில் இதே இடத்தில் இலங்கையின் சக்கரவர்த்திகளும் இளவரசர்களும் அவர்களுடைய அந்தப்புர மாதரசிகளும் படுத்திருந்திருப்பார்கள். அப்போதும் இதே மாதிரி நிலாவின் கிரணங்கள் இந்தப் பலகணியின் வழியாக எட்டிப் பார்த்திருக்கும். இப்போது அதே இடத்தில் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பார்த்து விட்டு இந்த நிலாக் கிரணங்கள் ஏமாற்றமடையும். இல்லையா, வந்தியத்தேவரே!" என்றார் அருள்மொழிவர்மர்.

"ஐயா! தங்களையும் இந்த வைஷ்ணவரையும் பற்றி நீங்கள் எது வேணுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். என்னை மட்டும் சாதாரண மனிதன் என்று சொல்ல வேண்டாம்!" என்றான் வல்லவரையன்.

"மறந்து விட்டேன்; மன்னிக்க வேண்டும். தாங்கள் பூர்வீகமான வல்லத்தரசர்கள் குலத்தில் பிறந்த அரசிளங்குமரர் அல்லவா...?"

"ஆம், ஐயா, ஆம்! என் மூதாதை ஒருவரைப் பற்றி ஒரு புலவர் பாடியிருப்பதைக் கேட்டால் இந்த வீர வைஷ்ணவர் பொறாமையினால் புழுங்கிச் செத்துப் போனாலும் போய் விடுவார்."

"போனாலும் போகட்டும்! திருமலை நல்ல தமிழ் அபிமானி, பல்லவ குலத்து நந்திவர்மனைப் போல் தமிழ்ப் பாடலுக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டார். ஆகையால், பாடலைச் சொல்லுங்கள், கேட்கலாம்."

கொஞ்சம் தயக்கத்துடன் வல்லவரையன் பின்வரும் பாடலைக் கூறினான்.

"என்கவிகை என்சிவிகை
என்கவசம் என்துவசம்
என்கரி யீ(து) என்பரி யீது
என்பரே – மன் கவன
மாவேந்தன் வாணன்
வரிசைப் பரிசுபெற்ற
பாவேந்தரை, வேந்தர்
பார்த்து!"

அதைக் கேட்ட பொன்னியின் செல்வர் "திருமலை, நீ தமிழ்ப் புலவனாயிற்றே! இந்தப் பாடலின் பொருள் என்ன, சொல்!" என்றார்.

"ஐயா! என்னைப் பரிசோதிக்கிறீர்கள் போலும். ஆகட்டும், இதோ சொல்லுகிறேன். மாவேந்தர் வாணரின் அரண்மனை வாசலில் சிற்றரசர்கள் பலர் இராஜ தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இலேசில் தரிசனம் கிட்டவில்லை. ஏனெனில், பாவேந்தர்களாகிய கவிராயர்கள் முன்னமே அரண்மனைக்குள் சென்றிருந்தார்கள். அவர்களுடைய பாடல்களைக் கேட்டு விட்டு வாணப் பேரரசர் மன மகிழ்ந்தார். அவர்களுக்குப் பரிசில்கள் கொடுத்து அனுப்பினார். பூச்சக்கரக் குடைகள், தந்தப் பல்லக்குகள், முத்துக் கவசங்கள், ரத்தினத் துவஜங்கள், யானைகள் குதிரைகள் முதலிய பலவகைப் பரிசுகள் கொடுத்து அனுப்பினார். ஆசார

வாசலில் காத்திருந்த சிற்றரசர்கள் அந்தப் பரிசில்களைப் பார்த்து வயிறெரிந்து, 'அடடா! இது என் குடை அல்லவா? என் பல்லக்கு அல்லவா? என் யானை அல்லவா? என் குதிரை அல்லவா? இந்தப் பாழும் புலவர்கள் கொண்டு போகிறார்களே!' என்று புலம்பினார்கள். அந்தச் சிற்றரசர்கள் மாவேந்தர் வாணருக்குக் காணிக்கைகளாகக் கொண்டு வந்து கொடுத்திருந்த பொருள்களை வாண மன்னர் புலவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார். இளவரசே! பாடலுக்குப் பொருள் சரிதானே?"

"நீ சொல்லுவதில் தவறு இருக்குமா? அடாடா! என்ன அற்புதமான பாடல்! எவ்வளவு நயமான கற்பனை! இதைப் பாடிய மகாகவி யாரோ தெரியவில்லை! வாணர் குலத் திலகமே! வந்தியத்தேவரே! உமது மூதாதைகளின் ராஜ்யம் பெரிதோ, சிறிதோ, அதைப் பற்றிக் கவலையில்லை. இந்த மாதிரி ஒரு பாடலைப் பெற்றார்களே, அதைக் காட்டிலும் அவர்களுக்குச் சிறப்பு என்ன வேண்டும்! அவர்களுடைய குலத்திலே பிறந்த தாம் இந்த அரண்மனையில் படுக்கத் தகுந்தவர்தாம்! மகாஸேனரின் கட்டில் மாத்திரம் என்ன? சாக்ஷாத் துஷ்டகமனு சக்கரவர்த்தி படுத்திருந்த கட்டில் இப்போது கிடைக்குமானால் அதிலேயே தாம் படுக்கலாம். நீர் அதற்குத் தகுதி வாய்ந்தவர்தான்!"

"ஆமாம், ஐயா! ஆமாம்! நான் எதற்கும் தகுதி வாய்ந்தவன்தான். ஆனால் இந்த நாளில் தகுதிக்கு யார் மதிப்புக் கொடுக்கிறார்கள்? அந்த பிக்ஷுக்கள் இந்த இலங்கா ராஜ்யத்தின் கிரீடத்தை எனக்குக் கொடுத்தார்களா? வேண்டாம் என்று மறுதலிக்கக்கூடிய தங்களைப் பார்த்துத்தானே கொடுத்தார்கள்? அப்போது எனக்கு என்ன ஆத்திரம் வந்தது தெரியுமா? கிரீடத்தைத் தூக்கி என் தலையில் நானே சூட்டிக் கொண்டு விடலாமா என்று பார்த்தேன்! இந்த வீர வைஷ்ணவர் போட்டிக்கு வந்து விடுவாரே என்று சும்மா இருந்து விட்டேன்!"

இதைக் கேட்டதும் அருள்மொழி வர்மர் கலகலவென்று உரத்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலியைக் கேட்டு வந்தியத்தேவன் உள்ளம் மகிழ்ந்தது. வெளிப்படையில் மேலும் கோபத்தைக் காட்டி, "சிரித்தால் மட்டும் சரியாகப் போய் விட்டதா? செய்த தவறுக்குப் பரிகாரம் என்ன?" என்றான்.

"ஐயா! வாணகுலத் திலகமே! சத்தியம், தர்மம் என்று சொன்னேனே! சிம்மாசனம் வேண்டாம் என்று மறுத்ததற்கு அவை சரியான காரணங்கள் என்று தங்களுக்குப் படவில்லையா?"

"சத்தியம், தர்மம் இவற்றின் பேரில் ஏற்கனவே எனக்குக் கொஞ்சம் சபலம் இருந்தது. இனிமேல் அவற்றின் முகத்திலேயே விழிப்பதில்லை. எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்து விட்டேன்."

"அடாடா! ஏன்? எதற்காக அப்படிப்பட்ட முடிவு செய்தீர்? அவற்றின் பேரில் என்ன கோபம்?"

"கோபம் ஒன்றுமில்லை. சத்தியம், தர்மம் என்னும் கன்னியர் மீது தாங்கள் காதல் கொண்டு விட்டதாகச் சொல்லவில்லையா? அதற்காக இந்த ராஜ்யத்தைத் தியாகம் செய்ததாகவும் சொல்லவில்லையா? வேறொருவர் காதலித்த பெண்களை நான் மனத்தினாலும் நினைப்பதில்லை!"


பொன்னியின் செல்வர் மறுபடியும் கடகடவென்று சிரித்தார். "உம்மைப் போல் வேடிக்கைக்காரரை நான் பார்த்ததே இல்லை!" என்றார்.

"ஆம், ஐயா! தங்களுக்கு வேடிக்கையாயிருக்கிறது. எனக்கு வயிறு எரிகிறது. இலங்கைச் சிம்மாதனம் தங்களுக்கு வேண்டாம் என்றால், பக்கத்தில் நான் நின்றேனே, என் பக்கம் கை காட்டி 'இவனுக்குக் கொடுங்கள்!'' என்று சொல்லியிருக்கக் கூடாதா?" என்றான் வந்தியத்தேவன்.



அருள்மொழி வர்மர் சிரித்து ஓய்ந்த பிறகு, "வந்தியத்தேவரே! இராஜ்யத்தை ஏற்றுக் கொள்வது அவ்வளவு

எளிய காரியமா? அதிலும் புத்த பிக்ஷுக்கள் கொடுத்து ஏற்றுக் கொள்வது சிறிதும் முறையல்ல. பின்னால் பெரிய விபரீதங்களுக்கு இடமாகும். மதத் தலைவர்கள் மத விஷயங்களுடன் நிற்க வேண்டும். மதத் தலைவர்கள் இராஜரீகக் காரியங்களில் தலையிட்டால் மதத்துக்கும் கேடு; இராஜ்யத்துக்கும் கேடு. மேலும் இன்று எனக்குச்



சிம்மாசனம் கொடுக்க வந்த புத்த பிக்ஷுக்கள் இந்த நாட்டிலுள்ள எல்லா புத்த மதத்தாருக்கும் தலைவர்கள் அல்ல. இவர்கள் ஒரு கூட்டத்துக்குத் தலைவர்கள். இவர்களுடைய சங்கத்தைப் போல் இன்னும் இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. இவர்களிடம் நாம் இராஜ்யத்தை ஒப்புக் கொண்டால் இவர்களுடைய இஷ்டப்படி இராஜ்யம் ஆள வேண்டும். மற்ற இரு சங்கத்தாரும் உடனே நம் விரோதிகள் ஆவார்கள்!'' என்றார்.

''வல்லத்திளவரசருக்கு இப்போது இவ்விடத்து நிலைமை புரிந்ததா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''புரிந்தது, புரிந்தது! அங்கே விஷ்ணு பெரியவரா, சிவன் பெரியவரா என்று சண்டை போடுகிற மூடர்களைப் போல் இங்கேயும் உண்டு என்று புரிந்தது!'' என்றான் வந்தியத்தேவன்.

''நீங்கள் இங்கே சண்டை ஆரம்பித்து விடாதீர்கள். இரவு வெகு நேரம் ஆகி விட்டது. அதோ பெரஹரா ஊர்வலத்திலிருந்து ஜனங்கள் கலைந்து வரும் சப்தமும் கேட்கிறது. இனிமேல் சற்றுத் தூங்கலாம்'' என்றார் இளவரசர்.

''எனக்குத் தூக்கம் வராது. நடுவீதியில் கையைத் தட்டி அழைத்து நம்மை உயிருடன் சமாதியாகாமல் காப்பாற்றிய அம்மான் யார் என்று தெரிந்து கொண்டால்தான் தூக்கம் வரும்.''

''அவள் யார் என்பது இன்னும் எனக்கும் தெரியாது. ஆனால் அவளைப் பற்றி எனக்குத் தெரிந்த செய்திகளை வேணுமானால் சொல்லுகிறேன். கேட்க விரும்பினால் என் அருகில் வந்து உட்காருங்கள்!'' என்று சொன்னார் இளவரசர்.

முப்பத்து ஏழாம் அத்தியாயம்

காவேரி அம்மன்

வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் ஆர்வத்துடன் எழுந்து போய் இளவரசரின் கட்டிலுக்குப் பக்கத்தில் கீழே உட்கார்ந்தார்கள். இளவரசர் பின் வருமாறு சொல்லத் தொடங்கினார்:-

''நான் சிறு பையனாயிருந்தபோது ஒரு சமயம் காவேரி நதியில் என் பெற்றோர்களுடன் படகில் போய்க் கொண்டிருந்தேன். என் தமையனும் என் தமக்கையும்கூட அச்சமயம் படகில் இருந்தார்கள். அவர்கள் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நான் மட்டும் காவேரி நதியின் நீர் சுழித்துச் சுழித்து ஓடுவதையும் அந்தச் சுழிகளில் சில சமயம் கடம்ப மலர்கள் அகப்பட்டுக் கொண்டு சுழல்வதையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சின்னஞ் சிறிய பூக்கள் அப்படிச் சுழலில் அகப்பட்டுத் தவிப்பதைப் பார்த்து எனக்கு வேதனை உண்டாகும். சில சமயம் படகின் ஓரமாகக் குனிந்து தவிக்கும் கடம்ப மலர்களை நீர்ச் சுழல்களிலிருந்து எடுத்து விடுவேன். அப்படி எடுத்து விட்ட ஒரு சமயத்தில் தவறித் தண்ணீரில் விழுந்து விட்டேன்! தலை குப்புற விழுந்தபடியால் திணறித் திண்டாடிப் போனேன்!

''காவேரியின் அடி மணலில் என் தலை இடித்த உணர்ச்சி இப்போதும் என் நினைவில் இருக்கிறது. பிறகு வேகமாக ஓடிய தண்ணீர் என்னை அடித்துத் தள்ளிக் கொண்டு போனதும் நினைவிருக்கிறது. எங்கேயோ வெகு தூரத்தில் பலருடைய கூக்குரல்களின் சத்தம் கேட்டது போலிருந்தது. மூச்சுத் திணறத் தொடங்கியது. சரி, காவேரி நதி நம்மைக் கடலில் கொண்டு போய்த் தள்ளி விடப் போகிறது என்று நினைத்துக் கொண்டேன். பெற்றோர்களும் தமக்கையும் தமையனும் நம்மைக் காணாமல் எவ்வளவு துன்பப்படுவார்கள் என்ற நினைவும் உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் யாரோ என்னை இரு கைகளாலும் வாரி

அணைத்து எடுத்தது போலிருந்தது. அடுத்தக் கணத்தில் தண்ணீருக்கு மேலே வந்து விட்டேன். தலை, கண், மூக்கு, வாய் எல்லாவற்றிலிருந்தும் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஆயினும் என்னை வாரி எடுத்துக் காப்பாற்றிய கைகள் என் கண்ணுக்குத் தெரிந்தன. பிறகு அந்தக் கரங்களுக்குரியவரின் முகத்தையும் பார்த்தேன். சில கண நேரந்தான் என்றாலும், அந்த முகம் என் மனத்தில் பதிந்து விட்டது. இதற்கு முன் எப்போதோ பார்த்த முகமாகவும் தோன்றியது. ஆனால் இன்னார் என்பதாகத் தெரியவில்லை.

பின்னர் அந்தக் கைகள் வேறு யாரிடமோ என்னைக் கொடுத்தன. மறு கணம் நான் படகில் இருந்தேன். தாய் தந்தை, தமக்கை, தமையன் எல்லாரும் என்னைச் சுற்றிக் கொண்டார்கள். அவர்களுடைய துயரமும், பரிவும், அன்பும், ஆதரவும் என் கவனத்தை முழுதும் கவர்ந்து விட்டன. சிறிது நேரத்திற்குப் பிறகு என்னைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றியது யார் என்பதைப் பற்றிக் கேள்வி எழுந்தது. ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள். என்னையும் கேட்டார்கள். நானும் சுற்று முற்றும் பார்த்தேன். அந்தத் தெய்வீகமான முகத்தை எங்கும் காணவில்லை. ஆகையால் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாமல் விழித்தேன். கடைசியில் எல்லாருமாகச் சேர்ந்து காவேரி அம்மன்தான் என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். நான் நதியில் விழுந்து பிழைத்த தினத்தில் ஆண்டு தோறும் காவேரி அம்மனுக்குப் பூஜை போடவும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் என் மனத்தில் மட்டும் திருப்தி ஏற்படவில்லை. என்னைக் காப்பாற்றியது காவேரி அம்மனாயிருந்தாலும் சரி, வேறு மானிட ஸ்திரீயாயிருந்தாலும், என் மனத்தில் பதித்திருந்த அவளுடைய திரு முகத்தை இன்னொரு தடவை தரிசிக்க வேண்டும் என்ற தாபம் என் மனத்தில் குடி கொண்டு விட்டது. காவேரி நதிப்பக்கம் போகும் போதெல்லாம் திடீரென்று அத் தேவி நீரிலிருந்து எழுந்து எனக்குத் தரிசனம் தர மாட்டாளா என்ற ஆசையுடன் அங்குமிங்கும் பார்ப்பேன். நாளாக ஆக, அவள் ஒரு மானிட ஸ்திரீயாகவே இருக்கலாம் என்ற எண்ணம் வலுப்பட்டது. ஆகையால் எந்தத் திருவிழாவுக்குப் போனாலும் அங்கே கூடியுள்ள மூதாட்டிகளின் முகங்களையெல்லாம் நான் ஆர்வத்தோடு உற்றுப் பார்ப்பது வழக்கம். சில காலத்துக்குப் பிறகு அப்படிப் பார்ப்பது அவ்வளவு நல்ல வழக்கமன்று என்பதை உணர்ந்தேன். வருஷம் ஆக ஆக, மறுபடியும் அந்தத் தெய்வ முகத்தைத் தரிசிக்கலாம் என்ற ஆசையை இழந்து விட்டேன்.

"சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னால் நமது தென் திசைப் படைகளின் மாதண்ட நாயகனாகி நான் இங்கு வந்து சேர்ந்தேன். அதற்கு முன்பே சேனாபதி பூதிவிக்கிரம கேசரி இலங்கையில் பல பகுதிகளைப் பிடித்திருந்தார். இந்த அநுராதபுரம் பல தடவை கைமாறி அப்போது மறுபடியும் மகிந்தன் படைகளின் வசத்தில் இருந்தது. இந்நகரை நம் வீரர்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். முற்றுகை நடந்து கொண்டிருந்த சமயத்தில் நான் இலங்கையின் பல பகுதிகளையும் பார்த்துத் தெரிந்து கொள்ள விரும்பினேன். பொறுக்கி எடுத்த ஆயிரம் வீரர்களை என்னுடன் சேனாபதி அனுப்பி வைத்தார். நம் சைன்யத்தின் வசப்பட்டிருந்த எல்லாப் பகுதிகளுக்கும், காடு, மேடு, மலை, நதி ஒன்றும் விடாமல் போய், அந்தப் பிரதேசங்களின் இயல்பை நன்கு தெரிந்து கொண்டு வந்தேன். இந்த இலங்கைத் தீவையொட்டிக் கடலில் பல சிறிய தீவுகள் உண்டு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தத் தீவுகளுக்கும் போய்ப் பார்த்து வந்தேன். இப்படிச் சுற்றி வருகையில் ஒரு சமயம் இந்த நகரத்துக்கு வடக்கே சில காத தூரத்தில் காட்டின் மத்தியில் தாவடி போட்டுக் கொண்டு தங்கியிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்தின் பக்கத்தில் 'யானை இறவு'த் துறை இருந்தது. அங்கே இலங்கைக்குக் கிழக்கேயுள்ள கடலும் மேற்கேயுள்ள கடலும் மிக

நெருங்கி வந்து ஒரு குறுகிய கால்வாயின் மூலம் ஒன்று சேருகின்றன. அந்தத் துறையின் வழியாகச் சில சமயம் யானை மந்தைகள் இலங்கையின் வடபகுதிக்குச் செல்லுவது வழக்கமாம். ஆகையால் அந்த இடத்துக்கு 'யானை இறவு' என்று பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் அங்கே தங்கியிருந்த சமயத்தில் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. இரவு நேரங்களில் தாவடிக்குச் சமீபத்தில் ஒரு புலம்பல் குரல் கேட்டது. அது மனிதக் குரலா, பட்சியின் குரலா, விலங்கின் குரலா என்று முதலில் தெரியவில்லை. கேட்பவர்கள் ரோமம் சிலிர்க்கும்படியான சோகம் அதில் தொனித்தது. முதலில், தாவடியின் ஓரத்தில் இருந்த வீரர்கள் காதில் விழுந்



நது. அதை அவர்கள் பொருட்படுத்தாமல் இருந்தார்கள். பிறகு, பாசறையைச் சுற்றிலும் பல இடங்களிலும் கேட்டது. என்னிடத்திலும் சிலர் வந்து சொன்னார்கள். நான் அதை இலட்சியம் செய்யவில்லை. 'பேய் பிசாசு என்று பயப்படுகிறீர்களா? அப்படியானால் ஊருக்குத் திரும்பிப் போய் அம்மா மடியில் பயமின்றிப் படுத்துத் தூங்குங்கள்!' என்றேன். இதனால் அவர்களுக்கு ரோஷம் வந்து விட்டது. அப்படி ஓலமிடுகிற குரல் மனிதக் குரலா, விலங்கின் குரலா அல்லது பிசாசின்



குரலா என்று தெரிந்து கொள்ளத் தீர்மானித்தார்கள். ஓலம் வந்த இடத்தை நோக்கி ஓடிப் போய்ப் பார்த்தார்கள். அவர்கள் அருகில் நெருங்கியதும் அந்தக் குரலுக்குரிய உருவம் ஓடத் தொடங்கியது. அது ஒரு பெண்ணின் உருவம் போலத் தோன்றியது. ஆனால் அந்த உருவத்தை இவர்களால் பிடிக்க முடியவில்லை. அதற்குப் பிறகும் அந்த ஓலம் நிற்காமல் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது.

“முதலில் அதை நான் இலட்சியம் செய்யாமல்தானிருந்தேன். ஆனால் என்னுடைய வீரர்களுக்கு இதைத் தவிர வேறு பேச்சே இல்லாமற் போய் விட்டது. உண்மையிலேயே சிலர் பயப் பிராந்தி கொண்டு விட்டார்கள். அதன் பேரில் மர்மம் இன்னதென்பதைக் கண்டறியத் தீர்மானித்தேன். ஒருநாள் இரவு அந்த ஓலம் வந்த திசையை நோக்கி நானும் சில வீரர்களும் சென்றோம். புதர் மறைவிலிருந்து ஒரு ஸ்திரீ உருவம் வெளிப்பட்டது. ஒரு கண நேரம் எங்களைப் பார்த்து விட்டுத் திகைத்து நின்றது. மறுபடி ஓடத் தொடங்கியது. எல்லாருமாகத் துரத்திச் சென்றால் அந்த உருவத்தைப் பிடிக்க முடியாது என்று என் மனத்திற்குள் ஒரு குரல் கூறியது. எனவே, மற்றவர்களை ‘நில்லுங்கள்’என்று சொல்லி நிறுத்தி விட்டு, நான் மட்டும் தொடர்ந்து ஓடினேன். ஒரு தடவை அந்த உருவம் திரும்பிப் பார்த்தது. தனி ஆளாக நான் வருவதைப் பார்த்து என்னை வரவேற்கும் பாவனையில் காத்துக் கொண்டிருந்தது. இப்போது எனக்கும் திகிலாகத்தான் போய் விட்டது. ஒரு வினாடி நேரம் தயங்கி நின்றேன். மறுபடி நெஞ்சை உறுதிப்படுத்திக் கொண்டு முன்னால் சென்று அந்தப் பெண் உருவத்தை நெருங்கினேன். நிலா வெளிச்சம் அவள் முகத்தில் நன்றாக விழுந்தது. தெய்வீகமான அம் முகத்தில் புன்னகை அரும்பியிருந்தது. அந்தக் கணத்தில் எனக்கு நினைவு வந்து விட்டது. காவேரி அம்மன் இவள்தான்! என்னை வெள்ளம் அடித்துப் போகாமல் எடுத்துக் காப்பாற்றிய தெய்வ மங்கை இவள்தான்...! சற்று நேரம் பிரமை பிடித்தவன் போல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு ‘தாயே! நீ யார்! இங்கே எப்போது வந்தாய்? எதற்காக வந்தாய்? உன்னை எத்தனையோ காலமாக நான் தேடிக் கொண்டிருந்தேனே? என்னைப் பார்க்க விரும்பினால் நேரே என்னிடம் வருவதற்கென்ன? இந்தத் தாவடியைச் சுற்றி ஏன் வட்டமிடுகிறாய்? ஏன் புலம்புகிறாய்?’ என்று அலறினேன். அந்த மாதரசி மறுமொழி சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் நான் கேட்டும் பயனில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுடைய கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது. அந்தக் கண்ணீர் என் நெஞ்சைப் பிளந்தது. அவள் ஏதோ சொல்ல முயற்சி செய்தாள் என்று தோன்றியது. ஆனால் வார்த்தை ஒன்றும் வரவில்லை. உருத் தெரியாத சப்தம் ஏதோ அவள் தொண்டையிலிருந்து வந்தது. அப்போது சட்டென்று எனக்குத் தெரிந்து விட்டது – அவள் பேசும் சக்தி இல்லாத ஊமை என்று. அப்போது நான் அடைந்த வேதனையைப் போல் என்றும் அடைந்ததில்லை. இன்னது செய்வதென்று தெரியாமல் நான் செயலற்று நின்றேன். அந்த ஸ்திரீ சட்டென்று என்னைக் கட்டித் தழுவி உச்சி மோந்தாள். அவள் கண்ணீர்த் துளிகள் என் தலையில் விழுந்தன. உடனே, அடுத்தக் கணத்திலேயே, என்னை விட்டு விட்டு ஓடினாள். திரும்பிப் பார்க்கவும் இல்லை. நானும் அவளைத் தொடர்ந்து செல்ல முடியவில்லை. பாசறைக்குச் சென்றதும் என்னை ஆவலோடு சூழ்ந்து கொண்டு கேட்ட வீரர்களிடம், ‘அவள் பேயும் அல்ல, பிசாசும் அல்ல; சாதாரண ஸ்திரீதான்! வாழ்க்கையில் ஏதோ பெருந் துயரத்தினால் சித்தப் பிரமை கொண்டிருக்கிறாள். மறுபடியும் அவள் வந்தால் அவளைத் தொடர்ந்து போய்த் தொந்தரவு செய்யாதீர்கள்!’ என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டேன்.

“மறுநாள் முழுதும் அங்கிருந்து தாவடியைக் கிளப்பிக் கொண்டு போய் விடலாமா என்ற யோசனை அடிக்கடி எனக்குத் தோன்றி வந்தது. ஆனாலும் முடிவு செய்யக் கூடவில்லை. ஒருவேளை மறுபடியும் அந்த ஸ்திரீ வரக்கூடும் என்ற ஆசை மனத்திற்குள் இருந்தது. இத்தகைய யோசனையிலேயே பொழுதும் போய்

விட்டது. இரவு வந்தது. நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. தாவடிக்கு அருகில் அந்த ஓலக் குரல் கேட்டது. நான் மற்ற வீரர்களிடம் என்னைப் பின் தொடர்ந்து வர வேண்டாம் என்று சொல்லிவிட்டுக் குரல் கேட்ட இடத்தை நோக்கிப் போனேன். அந்தப் பெண்ணரசி என்னை முதல் நாள் மாதிரியே புன்னகையுடன் வரவேற்றாள். சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ சொல்ல முயன்றாள். எனக்கு விளங்கவில்லை.

பிறகு கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனாள். அவளுடன் போவதற்கு எனக்குக் கொஞ்சம்கூடத் தயக்கம் உண்டாகவில்லை. காட்டு வழியில் போகும்போது முள் செடிகளின் கிளைகள் என் மீது படாத வண்ணம் அவள் விலக்கி விட்டுக் கொண்டு போனது என் நெஞ்சை உருக்கியது. கொஞ்ச தூரம் போன பிறகு ஒரு குடிசை தென்பட்டது. அந்தக் குடிசைக்குள் ஓர் அகல் விளக்கு மினுக்கு மினுக்கு என்று எரிந்தது. அந்த வெளிச்சத்தில் அங்கே படுத்திருந்த கிழவன் ஒருவனைக் கண்டேன். அவன் நோயாகப் படுத்திருந்தான் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவன் உடம்பெல்லாம் பொறுக்க முடியாத குளிரினால் நடுங்குவது போல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் உடம்பையே சில சமயம் தூக்கிப் போட்டது. பற்கள் கிட்டிப் போயிருந்தன, கண்கள் சிவந்து தணல்களைப் போல் அனல் வீசின. ஏதேதோ உருத் தெரியாத வார்த்தைகளை அவன் பிதற்றிக் கொண்டிருந்தான்...

"உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? இன்று பாதாளக் குகையில் நாம் பார்த்த மகாபோதி விஹாரத்தில் ஒரு பிக்ஷு நடுங்கிக் கொண்டிருந்தாரல்லவா? அவர் பேரில் தேவர்கள் ஆவிர்ப்பவித்திருந்ததாகச் சொன்னார்கள் அல்லவா? அப்போது எனக்குக் காட்டின் மத்தியில் குடிசையில் பார்த்த கிழவன் ஞாபகம் வந்தது. அந்தப் பிக்ஷுவின் பேரில் தேவர்கள் ஆவிர்ப்பவித்திருக்கிறார்களா அல்லது நடுக்கு சுரம் என்னும் கொடிய நோய் ஆவிர்ப்பவித்திருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதைப் பற்றி நான் பிரஸ்தாபிக்கவில்லை! ஏன் அந்தப் பக்திமான்களின் நம்பிக்கையைக் கெடுக்க வேண்டும்? இந்த வருஷத்தில் இந்தப் பெரஹராத் திருவிழா நடப்பதற்கு அனுமதி கொடுத்தேனே, ஒரு விதத்தில் பெரிய தவறு செய்து விட்டேன் என்று தோன்றுகிறது. ஏற்கெனவே பாதிக்கு மேல் அழிந்து போயிருக்கும் இந்தப் புராதன நகரத்திற்குக் குளிர் காய்ச்சலும் வந்து விட்டால் என்ன கதி ஆவது? மிச்சமிருக்கும் ஜனங்களும் இங்கிருந்து ஓட வேண்டியதுதான்..."

இவ்வாறு சொல்லி அருள்மொழிவர்மர் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு வந்தியத்தேவன் "ஐயா! இந்த நகரம் எப்படியாவது போகட்டும். குடிசையில் பிறகு என்ன நடந்தது? சொல்லுங்கள்!" என்றான்.

"குடிசையில் ஒன்றும் நடக்கவில்லை. அந்த மாதரசி நான் அதிக நேரம் அங்கு நிற்கக் கூடாது என்று கருதினாள் போலிருக்கிறது. உடனே என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டாள். பிறகு, சில சமிக்ஞைகள் மூலம் தான் சொல்ல விரும்பியதைச் சொன்னாள். அவள் சொல்ல விரும்பியது என்னவென்பதை என் மனம் தெரிந்து கொண்டு விட்டது. 'இந்தப் பிரதேசத்தில் இருக்க வேண்டாம். இங்கே இருந்தால் இந்தக் குளிர் காய்ச்சல் நோய் வந்து விடும். உடனே இங்கிருந்து தாவடியைப் பெயர்த்துக் கொண்டு போய் விடு!' என்று அவள் சமிக்ஞைகளின் மூலமாகச் சொல்லி, என்னையும் தெரிந்து கொள்ளச் செய்து விட்டாள். என் பேரில் அவளுக்குள்ள அளவில்லாத அன்பின் காரணமாகவே இந்த எச்சரிக்கை செய்ததாகவும் அறிந்து கொண்டேன். தெய்வத்தின் எச்சரிக்கையாகவே அதை எடுத்துக் கொண்டு அன்றிரவே தாவடியை அங்கிருந்து கிளப்பும்படி கட்டளையிட்டேன். என்னுடனிருந்த வீரர்களுக்கும் அது மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அந்தப் பயங்கரமான ஓலக் குரலை இனி கேட்க வேண்டாம் என்று எண்ணி அவர்கள் உற்சாகமடைந்தார்கள்..."

(தொடரும்)

திறப்பு விழாக்கள்

சென்னை நகரின் சமூக வாழ்க்கையில் டிசம்பர் கடைசியில் நடக்கும் சங்கீத விழாக்கள் மிகுந்த முக்கியத்தை அடைந்திருக்கின்றன. இந்த விழாக்களைத் திறந்து வைப்பதற்குச் சங்கீதம் தெரியாத பிரமுகர்களை ஒவ்வொரு வருஷமும் அழைப்பதும் வழக்கமாயிருந்து வருகிறது. இந்தத் திறப்பு விழாக்களை நடத்துகிறவர்கள் சாதாரணமாக "எனக்குச் சங்கீதத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது" என்று அவையடக்கம் சொல்லிக் கொண்டுதான் ஆரம்பிக்கிற வழக்கம். ஆனால் இந்த வருஷம் மியூஸிக் அகாடமி விழாவைத் திறந்து வைத்த ஸர் எம். வெங்கட சுப்பராவைப் போல் அவ்வளவு அழகாக யாருமே தங்கள் பிரசங்கத்தை ஆரம்பித்ததில்லை. முதல் வாக்கியத்திலேயே இவர் தம்மை 'இக்னாரமஸ்' என்று தெரிவித்துக் கொண்டார். 'இக்னாரமஸ்' என்னும் அழகிய கம்பீரமான வார்த்தைக்குத் தமிழில் சரியான பிரதிபதம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆங்கிலமும் தமிழும் நன்கறிந்த சில நண்பர்களைக் கேட்டுப் பார்த்தேன். அவர்கள், "அஞ்ஞான இருள் குன்று" "மௌடீக மலை" "மட சாம்பிராணி" முதலிய சொற்றொடர்களைக் கூறினார்களே தவிர, 'இக்னாரமஸ்' என்பதைப் போல் கம்பீரமான தனிப்பதம் ஒன்றைக் குறிப்பிட முடியவில்லை. இது ஒருபுறமிருக்க,

ஸர் வெங்கட சுப்பராவ் தம்மைச் சங்கீத விஷயங்களில் 'இக்னாரமஸ்' என்று கூறிக் கொண்டது எவ்வளவு சத்தியமான வார்த்தை என்பதை அவருடைய பேச்சின் கடைசிப் பகுதியில் நிரூபித்து விட்டார். தமக்குக் கொஞ்சமும் தெரியாத விஷயத்தைப் பற்றி வேறு யாரோ சொல்லிக் கொண்டிருந்ததை ஒப்புவித்தார். தமிழ்ப் பாட்டு இயக்கத்தை வெளுத்து வாங்கினார். "கலையில் அரசியலைக் கொண்டு வரலாமா?" என்று கேட்டார். "இத்தனை நாளும் நீங்கள் தெலுங்குப் பாட்டுக்களையேதான் கேட்டுக் கொண்டு வந்தீர்கள்? இப்போது தமிழ்ப் பாட்டு என்ன வந்தது கேடு?" என்றார். "திராவிட பாஷைகளுக்குள் தெலுங்குதான் இனிமையானது" என்னும் பழைய பெயர் போன அபத்தத்தைத் திருப்பிச் சொன்னார். "தமிழ்ப் பாட்டு வேணுமானால் தேவாரம் - திருவாசகம் இருக்கிறதே? வேறு என்னத்துக்கு?" என்று கேட்டார். இன்னும், "இம் மாதிரி பயங்கர மர்ம இயக்கங்களினால் ஜெர்மனி எத்தகைய கேட்டை அடைந்தது தெரியுமா?" என்று மயிர்க் கூச்செறியக் கேட்டுத் தமிழிசைக்காரர்கள் எல்லாம் ஒரு வேளை ஹிட்லர் கோஷ்டியைச் சேர்ந்தவர்களோ என்ற சந்தேகத்தை உண்டாக்கினார். "நல்லவேளையாக, இந்தத் தமிழிசை இயக்கம் தமிழ் மக்களுடைய இருதயத்தையோ, தமிழ்ப் பாடகர்களையோ கவரவில்லையென்று அறிகிறேன். ரொம்பத் திருப்தி; பரிபூரண சந்தோஷம். ஆனாலும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். தமிழிசையாகிய பேரபாயத்தை அடியோடு வேரறுக்காத வரையில் நிம்மதியாகத் தூங்க முடியாது" என்றார்.

மூன்று நிமிஷத்துக்குள் இவ்வளவு அபத்தங்களையும், இல்லாத காரியங்களையும், அசட்டு வாதங்களையும் சொல்லக் கூடியவருக்கு 'இக்னாரமஸ்' என்ற பட்டம் தகுதியில்லையென்றால், வேறு யாருக்குத்தான் தகுதியாயிருக்க முடியும்?


தமிழிசை இயக்கத்தின் பைத்தியக்காரத்தனத்தை நன்கு எடுத்துக் காட்டும் பொருட்டு, மியூஸிக் அகாடமியார் 1941-ம் வருஷத்தில் ஒரு ஆந்திரரை விழாவைத் திறப்பதற்கும், இன்னொரு ஆந்திரரை மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்கவும் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் அகாடமியை ஏமாற்றி, "சங்கீதத்தில் பாஷை முக்கியமானதுதான்; தெரிந்த பாஷையில் பாடுவதுதான் விசேஷம்" என்று சொல்லி விட்டார்கள்.

இந்த வருஷத்து அகாடமி விழாவைத் திறந்து வைத்த ஸர் வெங்கடசுப்பராவ் அகாடமிக்காரர்களின் நோக்கத்தை நன்கு நிறைவேற்றி விட்டார். சொல்லிக் கொடுத்த பாடத்தை அப்படியே ஒப்புவித்து விட்டார்.

ஆனால், அகாடமியாரின் துரதிர்ஷ்டமும், தமிழ்நாட்டின் நல்லதிர்ஷ்டமும், சங்கீத தேவதையின் நல்ல காலமும் சேர்ந்து, இந்த வருஷத்து மகாநாட்டுக்கு மழவராய நேந்தல் சுப்பராம பாகவதர் அக்கிராசனராக வரும்படி நேர்ந்தது. ஸர் எம். வெங்கடசுப்பராவின் அபத்தங்களுக்கு வேறு யாரும் பதில் சொல்வதற்கு அவசியமே இல்லாதபடி பாகவதர் தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் பதில்

கல்கி கலெக்ஷன் :

• எம்.எஸ்



அமரர் **கல்கி**

சொல்லி விட்டார்.

1. "தமிழ் சங்கீதத்துக்கு உகந்த பாஷையில்லை;" 2. "தமிழில் உயர்ந்த சாஹித்யங்கள் இல்லை;" 3. "தமிழிசை இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் ஆதரவு இல்லை" என்னும் மூன்று கூற்றுக்களும் அபத்தம் என்பதைச் சங்கீத வித்வத் சபையின் அக்கிராசனர் எவ்வளவு தெளிவாக எடுத்துச் சொல்கிறார், கேளுங்கள் :

"இன்னும் நம் தமிழ்நாட்டின் தாய்ப் பாஷையாகிய அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் நம் முன்னோர்களான ஸ்ரீ சமயாசாரியாள், ஸ்ரீ முத்துத்தாண்டவர், ஸ்ரீ அருணாசலக் கவி, திருவிளையாடல் ஸ்ரீ சுப்ரமணிய பாரதிகள், ஸ்ரீ கவி குஞ்சர பாரதிகள், ஸ்ரீ சிதம்பர பாரதிகள், ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதிகள் ஆகியோர் பக்திப் பரவசத்தோடு ஆயிரக்கணக்கான பண்களும், கீர்த்தனங்களும், பதங்களும் தேனொழுகப் பாடியுள்ளார்கள். அவற்றில் தெலுங்கு முதலான பாஷைகளிலுள்ள பெரியவாளின் கீர்த்தனங்களைப் போலவே அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்கு உகந்தவாறு ராகம், பாவம், தாளம் ஆகிய சிறந்த அம்சங்கள் விசேஷமாய்ப் பொருந்தியிருப்பதைக் காணலாம். ஆகையால் தமிழ்ப் பெரியாரின் கீர்த்தனங்களையும் ஸங்கீத வித்வான்கள் கையாள வேண்டும் என்பது என் அபிப்பிராயம்."

பெரிய பரம்பரையில் வந்தவர் மகா வித்வான் ஸ்ரீ சுப்பராம பாகவதர். "இந்த நாளில் உள்ள வித்வான்களுக்குள்ளே சங்கீதக் கலையின் சகல அம்சங்களையும் பூரணமாய் அறிந்தவர் இவர் ஒருவர் தான்" என்று ஸ்ரீ பொன்னையாப் பிள்ளை இவரை மகாநாட்டுக்குத் தலைமைக்குப் பிரேரேபிக்கும்போது கூறினார். அத்தகையவர் தமிழில் "ஆயிரக்கணக்கான பண்களும், கீர்த்தனங்களும், பதங்களும் இருக்கின்றன" என்று கூறுகிறார். 'இக்னாரமஸ்' ஸர் வெங்கடசுப்ப ராவும் அவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தவர்களும், "தமிழில் தேவாரம் திருவாசகந்தான் இருக்கின்றன; கீர்த்தனம் இல்லை" என்கிறார்கள். யார் பேச்சை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் அறிவோம். ஸர் வெங்கடசுப்ப ராவின் சொல்லிக் கொடுக்கப்பட்ட பேச்சுக்கு மறுநாள் 25உ கோகலே ஹாலிலும் பதில் சொல்லப்பட்டது. இங்கே பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியாரின் சங்கீத விழாவை ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் ஆரம்பித்து வைத்தார். ராஜா ஸர் அவர்களை இந்த விழாவை ஆரம்



• அண்ணாமலை செட்டியார்

பிக்க அழைத்ததே ஸர் எம். வெங்கடசுப்பராவுக்கு ஒரு தக்க பதில் என்று சொல்லலாம். ராஜா ஸர் அவர்கள் தமிழிசை இயக்கத்துடன் கலந்தவர் என்பது சகலருக்குத் தெரியும். பெரிய மனுஷராதலால் இந்த இயக்கமே அவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரால் நடந்து வருவதாகத் தவறாய் நினைப்பவர்களும் இருக்கிறார்கள். அத்தகையவரை பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியார் திறப்பு விழா நடத்த அழைத்தார்கள் என்றால், தமிழிசை இயக்கம் தமிழ்நாட்டில் வேரூன்றி விட்டதென்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை. அகாடமியாரும், அவர்கள் தேடிப் பிடிக்கும் 'இக்னாரமஸ்'களும் கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்து விடாது என்பதற்கும் இது அறிகுறியாகும்.

ராஜா ஸர் அவர்களின் பிரசங்கத்தை நேயர்கள் தினசரிகளில் படித்திருப்பார்கள். தமிழ் இசை இயக்கத்தின் நோக்கத்தை அவர் தெளிவாக எடுத்துக் கூறினார். தமிழிசை இயக்கம் உண்மையில் சங்கீத வளர்ச்சி இயக்கந்தான் என்பதை எடுத்துக் காட்டினார். தமிழ் நாட்டில் தமிழர்கள் தமிழ்ப் பாட்டுக்களை விரும்புவது இயற்கை என்றும், அதற்கு விரோதமாகப் பேசுவது இயற்கைக்கு விரோதம் என்றும் கூறி, மகாகனம் சாஸ்திரியார், ராஜாஜி, டாக்டர் டாகூர் ஆகியவர்களின் கூற்றுக்களிலிருந்து அத்தாட்சியும் எடுத்துக் காட்டினார்.

ராஜா ஸர் அவர்களின் பேச்சில் ஒரு விஷயம் மிகவும் முக்கியமானது. பாடகர் பாடகிகளை அவர்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாகத் தமிழிசைக்காரர்கள் தமிழ்ப் பாட்டுப் பாடச் சொல்கிறார்கள் என்று தமிழ் இசை விரோதிகள் புகார் சொல்கிறார்கள். உண்மை இதற்கு நேர்மாறானது என்று ராஜா ஸர் எடுத்துக் காட்டினார்.

"சங்கீத சபைகளின் நிகழ்ச்சி முறையை நோக்கினால் தாய்மொழியல்லாத பிற மொழிப் பாடல்களையே பாட வேண்டுமென்று பாடகர்கள், பாடகிகள் வற்புறுத்தப்படுகிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்."

இவ்விதம் ராஜா ஸர் சொல்வது முற்றிலும் உண்மை என்பதை நிரூபிக்கப் பல அத்தாட்சிகள் சமீபத்தில் கிடைத்திருக்கின்றன. இதைப் பற்றிப் பிறகு விவரமாக எழுத வேண்டும்.

தமிழ்ப் பாட்டு இயக்கம், ரஸிகர்களின் ஆதரவை எவ்வளவு தூரம் பெற்று விட்டது என்பதை நிரூபிக்க இன்னொரு சிறந்த அத்தாட்சி கோகலே ஹாலில் அன்று மாலையே கிடைத்தது. திறப்பு விழாவுக்குப் பிறகு நடந்த ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரியைத்தான் குறிப்பிடுகிறேன். ஸ்ரீமதி எம்.எஸ். எத்தனையோ கச்சேரிகள் செய்திருக்கிறார்கள்; கோகலே ஹாலிலும் எத்தனையோ கச்சேரிகள் நடந்திருக்கின்றன. ஆனால் இதற்கு முன் எம். எஸ். இம்மாதிரி கச்சேரி செய்ததில்லை, கோகலே ஹாலிலும் இம்மாதிரி கச்சேரி நடந்ததில்லையென்று சொல்ல வேண்டும். பெரும்பான்மையாகத் தமிழ் பாட்டுக்கள்தான் பாடினார். பந்துவராளி, ஆபோஹி, சங்கராபரண ராகங்களில் இசைப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடிற்று. அந்த ராகங்களில் "நின்னருள்", "சபாபதிக்கு" "தூக்கிய திருவடி" என்னும் கீர்த்தனங்கள் ஒவ்வொரு ரஸிகருடைய உள்ளத்தையும் துள்ளும்படி செய்தன. முதற்பகுதியில் கடைசிக் கீர்த்தனமாக,

"காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே என்னைக்
கைதூக்கி ஆள் தெய்வமே"

என்று மத்தியம சுருதியில் எடுத்தபோது சபையில் நிசப்தம் ஏற்பட்டது. "இங்கும் அங்குமாய்த் தேடி" என்னும் இடத்தில் பலருக்கும் பரவசம் உண்டாயிற்று; சிலருடைய கண்ணில் ஜலம் வந்து விட்டது. கீர்த்தனம் முடிந்ததும், எள்ளுப் போட்டால் எள்ளு விழாதபடி கூடியிருந்தவர்கள் அவ்வளவு பேரும் ஏகமனதாகக் கரகோஷம் செய்து மண்டபம் இடிந்து விழுமோ என்ற சந்தேகத்தை உண்டாக்கி விட்டார்கள். இத்தகைய பரவச நிலைமை, பின்னால் "கண்ணா என்று நான் கதறிடும் போதினில்" என்ற இடத்திலும் ஏற்பட்டது.

அன்று எம்.எஸ்.ஸுக்கு ஸ்ரீ டி. டி. சங்கரய்யரும், மாஸ்டர் மூர்த்தியும் பக்கவாத்தியம் வாசித்தார்கள். ஸ்ரீ சங்கரய்யர் எதிர்பாராத அளவில் அழகாக வாசித்து விட்டார். பாட்டுக்குப் பெரும் ஒத்தாசை; தனி ஆவர்த்தனங்கள் ரொம்பக் கச்சிதம். மூர்த்தியின் வாசிப்பில் மாதுர்யத்துடன் ஜீவ சக்தியும் ததும்பிற்று. கோகலே ஹாலில் பன்னிரண்டு நிமிஷம் தனி ஆவர்த்தனம் வாசித்து முடிவில் கரகோஷமும் அவர் பெற்றுக் கொண்டதை ஒரு அற்புதம் என்றே சொல்ல வேண்டும். ●

(கல்கி, ஜனவரி 1, 1943)



• மதுரை மணி

அமரர் கல்கி

சங்கித உலகத்தில் சில சில வித்வான்களைச் சுற்றி கோஷ்டிகள் சேர்ந்து விடுவதைக் காண்கிறோம். இதற்குக் காரணம் அந்த வித்வான்களின் அதிர்ஷ்டம் என்றோ, அவர்களுடைய குணாதிசயம் என்றோ சிலர் நினைப்பதுண்டு. இது தவறு. ஒரு வித்வானைச் சுற்றி கோஷ்டி சேர்ந்தால், அவர் சங்கீதத்தில் ஒரு புதிய பாணியை உண்டுபண்ணுகிறார் என்று எண்ண வேண்டும். அந்தப் பாணி பிடித்துப் போனவர்களுக்கு அது ஒன்றுதான் சங்கீதமாகவும், மற்றதெல்லாம் வெறும் இரைச்சல் - தலைவலி - என்பதாகவும் தோன்றும்.

"கானகலாதரர்" மதுரை மணி ஐயருக்கும் தமிழ் நாட்டில் ஒரு கோஷ்டி ஏற்பட்டிருக்கிறது. இந்த கோஷ்டி அவர் சிறு பிள்ளையாய்ப் பாடத் தொடங்கியபோதே ஏற்பட்டு நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இன்னமும் அது சின்ன கோஷ்டிதான்; ஆனால் மகா ரஸிகர்கள் அடங்கிய கோஷ்டி.

மதுரை மணி ஐயர் கையாளும் சங்கித பாணி அவ்வளவு நயமானது; அவ்வளவு உயர்வானது. அதை அநுபவிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எல்லாருக்கும் எளிதில் கிட்டி விடாது.

கர்நாடக சங்கீதத்தின் உயர்வுக்கு முக்கியமாயிருப்பது ராக ஆலாபன முறை. நமது வித்வான்களில் சிலர் ராக ஆலாபனத்தையே ஸ்வரம் பாடுவது போல் பாடி விடுவதுண்டு. ஆனால் மதுரை மணி ஐயர் ஸ்வரம் பாடுவது கூட ராக ஆலாபனம் மாதிரி இருக்கும். ஒரு ஸ்வரத்திலிருந்து இன்னொரு ஸ்வரத்துக்கு அவர் தாவ மாட்டார்; அப்படியே நழுவி விடுவார். கேட்கும் ரஸிகர்களோ இசை இன்பத்திலே ஆழ்ந்து விடுவார்கள்.

மதுரை மணி ஐயரைச் சங்கித வித்வான் என்று சொன்னால் மட்டும் போதாது; சங்கித மேதாவி என்றும் அவரைச் சொல்வது பொருத்தமாயிருக்கும். ○

(கல்கி, நவம்பர் 12, 1944)

சங்கீத மேதாவி!


நாய்வால்
கதை: அருண் சரண்யா
படம்: சசி
நந்தனம் சிக்னல் அருகே பைக்கை நிறுத்திய மணி அதிர்ந்தான்.
ஐயோ! அது நம்ம தேவநாதன் சார் ஆச்சே!
தேவநாதன் வீட்டில்...
சார்! தேவநாதன் சார்! எழுந்திருங்க!
ரொம்ப நன்றி ! அந்த பைனான்ஸ் கம்பெனியை மூடிட் டான்னு தெரிஞ்சதும் சாப்பிடாம கிளம்பிப் போயிட்டார்.
உடம்பை கவனமா பார்த்துக்கங்க! பணம்போகும், வரும்!
இது தவிர இன்னும் ரெண்டு இடத்துலயும் போட்டிருந் தார். எட்டு லட்சம் போச்சு!
நிச்சயம் நல்ல தீர்ப்பு வரும் மாமி! சாரைப் பார்த்துக் கங்க!



அடிக்கடி தேவநாதன் வீட்டுக்கு வந்து போக ஆரம்பித்தான் மணி.
மணிபிளான்ட்! இதை வளர்த்தால் வீட்டுல பணம் சேரும்னு என் ப்ரெண்ட் சொன்னான்!
உங்க பணம் கண்டிப்பா திரும்பக் கிடைச்சுடும் சார்!
கிடைக்கணும்பா! அதை வெச்சுதான் எங்க மக கல்யாணமே!
சில வருடங்கள் சென்றன...
அம்மா! தனி நீதி மன்ற தீர்ப்பு வந்தாச்சு! தேவநாதன் சார் பணம் கிடைச்சுடும்!
அலுவலக வேலையாக ஒரு மாதம் வெளியூர் சென்று திரும்பியவன் நேராக தேவநாதன் வீட்டுக்குப் போனான்.
வாப்பா! சௌக்கியமா?
பணம் கிடைச்சுடுச்சா சார்?


நீ எவ்ளோ அக்கரையா தினம் இவருக்கு தைரியம் சொல்லுவே? கிடைச் சுடுச்சுப்பா!
பணத்தை என்ன பண்ணீங்க?
தேவநாதன் தயங்க, அவர் மனைவியே பேசினாள்...
அவர் ப்ரெண்டு பிசினஸுக்கு ஒரு லட் சம் கடன் தந்திருக்கார். நம்ப தெரு முனைலேயே புதுசா ஒரு பைனான்ஸ் கம் பெனி... அங்க மீதியைப் போட்டிருக்கார்...
நாலு வருஷமா முடங்கின தொகையாச்சே! இதைப் பெருக்க வேணாமா? பொண்ணு கல்யாணம் அடுத்த வருஷம்தான். இங்க நிறைய வட்டி. நல்லா விசாரிச்சேன். நம்பகமான இடம் தானாம்...
எப்படி சார் தைரியம் வந்தது...?
ஜோசியரைப் பார்த்து, இதோ பச்சைக்கல் மோதிரம் வேற போட்டிருக்கேன்! எல் லாம் நல்லபடியா நடக்கும்!

"அந்த வார்த்தையைக் கேட்டதுமே நான் என் நகைகளைக் கழற்றி எறிந்தேன். தேசத் துரோகத்தினால் இதெல்லாம் வந்த துன்னா வேண்டாம்னு சேலையைக் கூடக் கழற்றி எறிந்தேன். அவ்வளவு வெறுப்பில் இருந்தேன். அந்த 'சோமு' ஃபைல்களை எடுத்து எரிக்க முயற்சி பண்ணேன். சிரிச்சார்.

'பஞ்சாங்கத்தை எரிச்சா நட்சத்திரத்தை எரிக்க முடியுமா? பைத்தியமே. எல்லாம் இங்கே இருக்கு' என்று தன் தலையைத் தொட்டுக் காட்டினார்.


"ஒன்றுமறியா மக்கள் செத்துப் போவாங்கங்கறது உங்களுக்குத் தோணவே இல்லையா ஆனந்த்?"

"யானை நடக்கறபோது எறும்புகள் மிதிபட்டுத்தான் ஆகணும் பாரதி. இல்லை எறும்பு மிதிபடுதுன்னு செருப்பு போடாம இருக்க முடியுமா"ன்னு அலட்சியமா சொல்றார்.

"ஆனந்த் ஏன் இவ்வளவு இன்சென்சிடிவ் ஆயிட்டீங்க. பூ மாதிரி இருந்தீங்க. பாம்பாயிட்டீங்க. ஏன்னேன்?"

"இல்லை பாரதி, சரித்திரத்தை படித்துப் பார்த்தாலே போதும், விளங்கும். சில புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டு வரதுக்கு சில இழப்புகள் இருந்தே ஆகணும்.

ஆர்யபட்டா



ப்ரெஞ்சுப் புரட்சியும் ரஷ்யப் புரட்சியும் கற்றுக் கொடுத்த பாடம்."

"அதனால் என்ன நன்மை வரப் போவுது நம்ம நாட்டுக்கு?"

"புரட்சி. இப்ப வந்துட்டுப் போனாங்களே, இவங்க நம்ம நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றி உண்மையான திறமைக்கு மதிப்பு தரக்கூடிய அமைப்பைக் கொண்டு வரப் போறாங்க. A controlled democracy, benevolent dictatorship வரும். அதுதான் நம் நாட்டுக்கு ஏற்றது"ன்னார்.

"சபாஷ் உங்களை நல்லா ப்ரெய்ன் வாஷ் பண்ணிருக்காங்க. இத்தனை புத்திசாலின்னு நினைச்சிருந்தேன். சரியான திட்டம் திட்டிருக்கீங்க"ன்னு கை தட்டினேன்.

"ஆனந்த் என்னை சந்தேகத்துடன் பார்த்தார்.

"இந்த மாதிரி குத்திக் காட்டற பேச்செல்லாம் வேண்டாம். தன்னம்பிக்கை இருக்கறவரைக்கும் என்னால எதையும் எதிர்கொள்ள முடிஞ்சுது. ஆனா எனக்கு தோல்வி மட்டும் தாங்கலை!''ன்னு உணர்ச்சிவசப்பட்டார்.

"காரணமே இல்லாத தோல்வி. அதனால் ஏற்பட்ட அவமானம், கடமை உணர்ச்சி உள்ள ஒருவனுக்கு எப்பவும் தோல்வி வரக்கூடாது."

"அவர் சொன்னதில் நியாயம் இருக்கறதா பட்டது. இருந்தாலும் அவர் செய்லை நியாயப்படுத்த முடியவில்லை.

20

"ஆனந்த் நீங்க மனசு வெச்சா இந்தத் தேசத்துக்கு ஒரு ஆபரணம் போல இருக்க வேண்டியவர். என் கற்பனையெல்லாம் பொய்யாக்கிட்டீங்க."

"இந்தச் சமூகம் என்னை ஏமாத்திருச்சு பாரதி. அதுக்கு நான் பாடம் கற்பிக்கணும். அதுவரைக்கும் எனக்கு நிம்மதி இல்லை"ன்னார்.

"நீங்க எவ்வளவு புத்திசாலி, எவ்வளவு சாமர்த்தியசாலி, நீங்க போய் இந்தக் காரியம் பண்ணலாமா? வேண்டாம் ஆனந்த். இந்த எண்ணத்தைக் கைவிடுங்க."

"அப்படின்னா பழைய வாழ்க்கைக்குப் போகணும்ங்கறியா? இதையெல்லாம் விட்டுட்டு?"

"அதனால என்ன ஆனந்த்? அப்ப நாம எவ்வளவு சந்தோஷமா, நிம்மதியா இருந்தோம். இந்தப் பாழாய்ப்போன வசதிகள் எல்லாம் எதுக்கு? மனச்சாட்சி சுத்தமில்லைன்னா?"

"ஸாரி. அதுவரைக்கும் காத்திருக்க மாட்டேன். உன்னை விட்டு, எல்லாரும் என்னை டிஸ்கரேஜ் பண்ணிக்கிட்டிருந்தாங்க. இப்ப நீயும் சேர்ந்துட்ட. கவலையில்லை. எந்தக் காரணத்துக்கும் நான் ஆரம்பிச்சதை விட மாட்டேன். நீயே எதிர்த்தாலும் விட மாட்டேன்."

அப்போது போன் அடித்தது.

"இட்ஸ் டூ லேட்! பாரு என் கனவு நனவாற சமயம் நெருங்கிட்டுது. இத்தனை நாள் முயற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் பலன் கிடைச்சுருச்சு. கூப்பிடறாங்க. அவங்க தேசத்துக்கு வந்துரும்படியா கூப்பிடறாங்க."

"நான் சரி சொல்லப் போறேன், போகப் போறேன். உனக்கு இஷ்டமிருந்தா வா. இல்லை இங்கேயே இருந்து 'தேச பக்தி'யையும் விசுவாசத்தையும் கட்டிக்கிட்டு அழு. எனக்கு உன் உபதேசம் கேட்டு அலுத்துப் போச்சு பெண்டாட்டி." என்றார்.

"வேண்டாம். போனை எடுக்காதீங்க எடுக்காதீங்க"ன்னு அலறினேன்.

"பைத்தியம்! என்னைக் கடவுளால கூட இப்பத் தடுக்க முடியாதுன்னு தெரியலையா உனக்கு?"

போன் எடுத்துப் பேசறார். "எஸ் ஸார். எஸ் ஸார். எஸ் மிஸ்டர் முஸ்தபா, நான் தயார். எல்லா ட்ராயிங்ஸும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் நான் தயார்."

"நான் தீர்மானிச்சுட்டேன். அவர் பரிசோதனைக்காக ஒரு துப்பாக்கி வாங்கியிருந்தது ஞாபகம் வந்தது. அவர் போன் பேசற நேரத்தில் மேசை இழுப்பறையிலிருந்த துப்பாக்கியை எடுத்து ஆனந்தின் முன்னால நீட்டினேன்."



ஆனந்த் சிரிச்சார். "என்னது? நீ அதாவது பாரதி, என்னை அதாவது உன் கணவனைச் சுடப் போறியா?"

"ஆமாம்"னேன்.

பாரதி இப்போது தொடர்ந்து கண்ணீர் விட்டு அழுதாள். மூக்கு நுனி சிவக்க வைரம் ஜொலிக்க, "அவர் நான் சுடுவேன்னு நினைக்கவே இல்லை."

"பாரதி, ஞாபகம் இருக்கா? என் சாதனைகளை சரியாப் பாராட்டற யோக்யதை கடவுளுக்கு மட்டும்தான் உண்டுன்னு ஒருமுறை சொன்ன

சுஜாதா

ஞாபகம் இருக்கா? அப்ப நான் என்ன சொன்னேன்? இந்த தேவதை என் சாதனையைப் பாராட்டினா போதும்னேன். பாரதி இதான் பாராட்டா? உன் கையால என்னைக் கொல்றதுதான் பாராட்டா? இல்லை. இது எப்பவும் சாத்தியமே இல்லை. நீயா? கொல்வியா? ஒரு எறும்பைக் கூடக் கொல்லத் தயங்குவே. எறும்பு கடிச்சாக் கூட அதைத் தள்ளி விட்டுருவே. நீயா கொல்வே? நோ பாரதி, Put that revolver down, you idiot! ரிவால்வரை வெச்சுட்டு என் கூடப் புறப்படு. டயம் இல்லை!

"ஃப்ளைட்டை புடிக்கணும். வெளிநாடு போகணும். ரெண்டு பேருக்கும் பாஸ் போர்ட், விசா எல்லாம் தயாரா இருக்கு. பாரதி சொல்றதைக் கேளு பாரதி! பாரதி!"

'சுட்டுட்டேன்!'

"ஆனந்த் முதல்ல ஆச்சரியம், அதன்பின் நம்பிக்கையின்மை காட்டி விழுந்து துடித் தார். நான் அப்படியே நின்னுக்கிட்டு இருக் கேன். என்ன செய்யறது தெரியலை."

அவள் கண்களில் கண்ணீர் பிரவாகமாக உதிர்ந்தது.

"ஆனந்த் மிகுந்த வலியில் மேசையில் டெலிபோனை எடுத்து 100 டயல் செய்தார். கடைசில என்ன சொன்னார் தெரியுமா?" 'பாரதி யோசிச்சுப் பார்த்தா நீ செய்தது சரி.'

"ஹலோ ஹலோ என்னை என்னைக் கொன்னது கொன்னது''ன்னு தயங்கி என்னைப் பார்த்தார். நான் காத்திருந்தேன். "சோமு" என்றார்.

நான் அப்படியே நிக்கறேன். முன்னா சேகர் உள்ளே வந்தான்.

அப்போதுதான் நினைவு வந்தது. "முன்னா முன்னா நான் என் கணவனைக் கொன்னுட்டேன். அவரைக் கொன்னுட் டேன்."

அதற்கு மேல் பாரதியால் பேச முடிய வில்லை. உடைந்து போய் தரையில் உட் கார்ந்து அழுதாள். ஓரத்தில் சோமசேகர் நின்று கொண்டிருந்தான். ரியாஸ் பிரமிப் புடன் அவளை மௌனமாகப் பார்த்தார்.

"மேல நடந்ததைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"துப்பாக்கியால கணவனைச் சுட்டுட்டுக் காலடியில விழுந்து கண்ணீரால் அவன் கால்களை நனைக்கிறா சார். எப்பேற்பட்ட பெண் இவள்? முன்னா அவர் துரோகம் செய்யறதை என் மனம் சம்மதிக்கலை. சுட் டுட்டேன். ரொம்ப வலிச்சிருக்குமா முன்னா?" என்கிறாள்.

ஆனந்தைக் கொன்றது யார்?

சுஜாதா கேட்டிருந்த இக்கேள்விக்கு நூற்றுக்கணக்கானோர் பதில் அனுப்பி யிருந்தார்கள்.

கொன்றது, ஆனந்தின் மனைவி பாரதிதான் என்கிற சரியான விடை எழுதியவர்கள் 83 பேர்!

இத்தனை அதிகமான பேர் சரியான விடை எழுதி விட்டதால், பரிசுக்கு குலுக் கலைத் தவிர வேறு வழியில்லை; ஸாரி!

சரியான விடை எழுதியவர்களுள் குலுக்கலில் தேர்வாகி சுஜாதா எழுதிய 'இன்டர்நெட் இணையம்' புத்தகத்தைப் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலிகள் கீழ்க்கண்ட பத்து பேர்:

ஜே. சித்ரா,
எண் 3, 12வது குறுக்கு,
5வது பிரதான சாலை,
ஸ்ரீநிவாசநகர்,
வயலூர் சாலை, புத்தூர்,
திருச்சி – 620 017.

"ஈஸி ஈஸி பாரதி. நடந்தது நடந்தாச்சு. கவலைப்படாதே. நான் சொல்றபடி செய்" என்றார்.

அவ பிரமிப்புடன், "நான்தான் கொன் னேன்னு சொல்ல வேண்டாமா போலீஸ் கிட்ட? வா போகலாம் போலீஸ் ஸ்டேஷ னுக்கு'ங்கறா.

"சொல்லலாம், சொல்லலாம். சமயம் வரப்ப சொல்லலாம். முதல்ல நீ என் கூட உடனே மதராஸ் வரே"ன்னேன்.

"அவங்களைக் கூப்பிட்டு நீயே சொல் லிடறியா?"

"சொல்லிடறேன் கேளு. முதல்ல புறப் படு பாரதி."

"இரு முன்னா. போலீஸ்கிட்ட சொல் லிட்டுப் புறப்படலாம்"- இப்படியே திருப் பித் திருப்பி சொல்லிக்கிட்டு இருந்தா. எந்த வகையிலும் தான் செய்த குற்றத்தை மறைக் கணும்ங்கற எண்ணமே இல்லை அவளுக்கு. மறைச்சது நான்தான்.

"அவளை நேரடியாக் கேட்டேன். போலீஸ்கிட்டப் போய் என்ன சொல்வே அவங்ககிட்ட? உன் கணவன் ஒரு தேசத் துரோகி. அதனால கொன்னேன்னா?"

"ஆமா. அதானே உண்மை!"

"உன் கணவனை இந்த நாடே ஒரு

பி. மூர்த்தி
42, 3வது பிரதான சாலை,
கல்யாண் நகர்,
முதலபள்யா,
பெங்களூர் – 560 072.

K. Muralidharan,
28C, Raipurmandal Para Road,
Keya Bagan,
Calcutta - 47.

செல்வி. எலிசா
C 13/8, ஹவுசிங் யூனிட்,
மேலப்பொன்னகரம் 5வது தெரு,
மதுரை – 625 010.

விஜயலட்சுமி,
46, 4வது பிரதான சாலை,
சி.ஐ.டி. நகர், நந்தனம்,
சென்னை – 600 035.

கே. சுப்ரமணியன்,
40, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

கே. மாணிக்க சுந்தரம்,
சித்தோடு டய்ரி எக்யூப்மெண்ட் கம்பெனி,
ஸ்ரீ வாசவி கல்லூரி (அஞ்சல்),
ஈரோடு – 638 316.

சு. சந்தானம்,
1/52 டி, திருமால் நகர்,
அழகாபுரம்,
சேலம் – 636 004.

கே. டொமேசன்,
21, மேல தெரு,
அய்யன்பேட்டை (அஞ்சல்),
காஞ்சிபுரம் – 631 601.

ஜி.எஸ். சிவகுமார்,
15/8, கனால் தெரு,
விஸ்வமேலு அப்பார்ட்மெண்ட்,
திருவான்மியூர்,
சென்னை – 600 041.

(புத்தகம் தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் அனுப்பிவைக்கப்படும்.)

வாழ்த்துகள்!

துரோகின்னு பட்டம் கட்டி எரிக்கிறதை விரும்பறியா? இல்லை மிலிட்டரி ஆனர்ஸோட அடக்கம் செய்யறதை விரும்பறியா? என் கூட வா. நான் இதை சமாளிக்கிறேன் வா!"

"அவளை அழைத்து வந்துட்டேன்."

"பாரதி சென்னையிலிருந்து பங்களூர் வந்ததை யாரும் பார்க்கவே இல்லை. அதனால் அவளை அடுத்த ப்ளைட்டில் சென்னைக்கு அழைத்து வந்து விட்டேன். அந்தத் துப்பாக்கியை எடுத்து ட்ரிக்கரில் துடைத்து அவள் விரல் அடையாளங்களை நீக்கி விட்டுப் பக்கத்து வீட்டுக் கிணற்றில் போட்டு விட்டேன். என்னுடைய பாரதி எந்தக் குற்றத்தையும் மறைக்கவில்லை. அவள்தான் இந்தக் குற்றத்தை செய்தாள் என்று உங்களால் நிரூபிக்கவே முடியாது" என்றான்.

"அப்படிச் சொல்லாதீங்க. முடியும், சர்க்கம்ஸ்டான்ஷியல் எவிடன்ஸை வெச்சு, போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை வெச்சு இண்டியன் ஏர்லைன்ஸ் அன்னிக்கு ப்ளைட் மானிபெஸ்டை வெச்சு ஆனந்த் கோட்ல ஒட்டிக்கிட்டிருந்த தலைமயிர் டிஎன்ஏ அனலிஸிஸ் பண்ணி பாரதியுடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமயே அவங்கதான் கொன்னாங்கன்னே எங்களால நிரூபிக்க முடியும். போலீசை அண்டர் எஸ்டிமேட் பண்ணாதீங்க."

பாரதி தன் கன்னத்தைத் துடைத்துக் கொண்டு பேசினாள்.

"நாங்க உங்களைக் கெஞ்சலை. கைது பண்ணிக்கிட்டுப் போங்க. முன்னா நான் செய்த குற்றத்தை மறைக்க உதவினது தப்புத்தான். நான் சொன்னதையெல்லாம் எழுதிக்கிட்டு வாங்க. கையெழுத்துப் போட்டுத் தரேன்" என்றாள்.

"வேண்டாம்" என்றார் ரியாஸ்.

"ஏன்?"

"சிபிஐயைப் பொறுத்தவரையில் இந்தக் கேஸை இதோட குளோஸ் பண்ணிரப் போறேன்."

"என்னன்னு?"

"அன்சால்வ்டு. இன்னும் கண்டுபிடிக்கப்படாதது. எத்தனையோ முடிவு பெறாத கேஸ்களில் இதுவும் ஒண்ணு."

"ஏன் அப்படிச் செய்யறீங்க?"

"என்னைப் பொறுத்தவரையில் பாரதி செய்தது குற்றம் இல்லை; தண்டனை" என்றார் ரியாஸ்.

வளாகத்தில் அமைதியாக இருந்தது.

காலைப் புல்வெளியில் வண்ணத்துப் பூச்சிகள் துடித்தன. சுமார் முன்னூறு விஞ்ஞானிகள் நாற்காலிகளில் வீற்றிருக்க, மேடையில் மூன்று நாற்காலிகளில் ஒன்றில் ஆனந்தின் பெரிதுபடுத்தப்பட்ட புகைப் படம் வீற்றிருந்தது. மற்ற இரு நாற்காலிகளில் டைரக்டரும் அருகே பாரதியும் வீற்றிருந்தார்கள். ஆனந்த் சிரித்துக் கொண்டிருந்தான் அடியில்.

ஆர். எஸ். ஆனந்த குமார்

தோற்றம் : 3.5.65

மறைவு : 2.11.97 என்று எழுதியிருக்க, பின்னணியில் புதிய கட்டடத்தின் முன் கற்பலகையின் வெல்வெட் திரை விலக்கப்பட்டு, கோல்ட் ஃப்யுஷன் ஆராய்ச்சிப் பிரிவின் புதிய கட்டடத்திற்கு 'ஆனந்த் லாபரட்டரி' என்று பெயர் வைக்கப்பட்டு திருமதி பாரதி ஆனந்தால் டைரக்டர் முன்னிலையில் இன்று திறந்து வைக்கப்பட்டது என்று பொறித்திருந்தது. கைதட்டல் ஓயக் காத்திருந்து டைரக்டர் தொடர்ந்து பேசினார்.

"விரும்பியிருந்தால் ஆனந்த் வெளிநாட்டுக்குப் போய் ஆராய்ச்சி செய்திருக்க முடியும். பணத்தையும், புகழையும் விட அவருக்கு தேசப்பற்று அதிகமாக முக்கியமாக இருந்தது.

"ஆனந்த் தினம் தினம் என்னிடம் ஒரு புதிய திட்டம் சமர்ப்பிப்பார். அத்தனை ஆர்வமும் புத்திசாலித்தனமும் உள்ளவர். அவருக்கு ஆர்யபட்டா அவார்டுடன் பத்ம பூஷன் அவார்டும் கொடுக்கும்படியாக சிபாரிசு போயிருக்கிறது. அவர் எனக்குச் சமர்ப்பித்தத் திட்டங்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டு விட்டன. அதுதான் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விட்ட அவர் நினைவாக நம்மால் செய்யக்கூடிய சிறிய கைங்கர்யம்."

பாரதி முகத்தைப் பார்க்க முடியாதபடி தலையைப் புடைவைத் தலைப்பால் மூடியிருந்தாள். முன்னா முதல் வரிசையில் உட்கார்ந்திருக்க, அவனை மட்டும் ஒருமுறை பார்த்தாள். அவன் அவளை சைகை மூலம் அமைதியாக இரு என்று சொன்னான்.

பந்தலின் ஓரத்தில் ரியாஸ் கைகட்டி நின்று கவனித்துக் கொண்டிருந்தார்.

ஒருமுறை பாரதியின் கண்களும் ரியாஸின் கண்களும் சந்தித்தன.

ரியாஸ் லேசாகப் புன்னகைத்தார்.

அவர் கையில் ஒரு மலர்க் கொத்து.

(முற்றும்)

கலைமாமணி விக்கிரமனின்

இலக்கியபீடம்

விருது – 1998 ரூ. 10,000/-

சிறந்த 'அறிவியல்' நூல் எழுதிய எழுத்தாளருக்கு வழங்கப்படும்

ஒவ்வோர் ஆண்டும் 'இலக்கியப்பீடம்' ஆண்டு விழாவில் இந்த விருது வழங்கப்படும். முதலாண்டு நிறைவு விழாவில் இந்த விருது திரு. பின்னலூர் மு. விவேகானந்தன் எழுதிய 'ஞாலம் போற்றும் ஞான சூரியன்' நூலுக்கு வழங்கப்பட்டது. ரூ. 10,000/- பொற்கிழியை டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கள் அளித்து மகிழ்ந்தார்.



இந்த ஆண்டு 1998ஆம் ஆண்டில் வெளியான
சிறந்த அறிவியல் நூலுக்கு வழங்கப்படும்.
ரூ. 10000/- பொற்கிழியை வழங்குபவர்

மாமனிதர் டாக்டர் பி. பாலசுப்பிரமணியம்
(சென்னைக் கந்தக்கோட்ட மூத்த அறங்காவலர் - நிர்வாக இயக்குநர், பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிட்)

1998-ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளிவந்த நூலாக இருக்க வேண்டும்.
கையெழுத்துப் பிரதிகளும் அனுப்பலாம்.

மேலும் முழு விவரங்களுக்கும், விண்ணப்பப் படிவம் பெறுவதற்கும் :

ஆசிரியர், 'இலக்கியப் பீடம்', தபால் பெட்டி எண் 3290, 2, ஜயசங்கர் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.

பரிசுக்கான நூல்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 31.1.1999.

அ ன் ப ளி ப் பு

67 ஆண்டுகளாக வெளிவரும் பாரம்பரியம் மிக்க
கலைமகள் மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு
கலைமகள் தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு

படித்தவர்கள் பாராட்டும், என்றும் பாதுகாக்க வேண்டிய காலாண்டு இதழ்
இலக்கியப்பீடம் 5 ஆண்டுகளுக்கு

நீங்கள் வாரந்தோறும் கல்கி வார இதழில் ஆவலுடன் விரும்பிப் படிக்கும் **அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன்** சரித்திரப் புதினத்தைத் தொடர்ந்து 51 ஆண்டுகளாக அமுதசுரபி ஆசிரியராகப் பணியாற்றும் **கலைமாமணி விக்கிரமன்** எழுதிய

நந்திப்புரத்து நாயகி (1200 பக்கங்கள், 8 பாகங்கள், விலை ரூ. 250/-)

இவையனைத்தும் நிரந்தர வருமானம் வரக்கூடிய, உங்கள் சார்பில் **அன்னை ஆர்ச்சர்ட்ஸ்** பராமரிக்கும் பண்ணை நிலம் (3 ஸெண்ட்) வாங்குபவர்களுக்கு

பண்ணை நிலத்தின் விலை **ரூ. 12,000** மட்டுமே.

பண்ணை நிலப் பத்திரப் பதிவு **இலவசம்.** **தவணை** முறைத் திட்டமும் உண்டு.

மேலும் விவரங்களுக்கு:

Annai Orchards Pvt. Ltd.,
C1, Bhagyam Palace, 12A, Puliyur First Lane, Trustpuram,
Kodambakkam, Chennai - 600 024. Phone: 481 84 35. Fax: 483 1744


நடக்குமென்பார்...

மேஷம் : (அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)



பனிச்சினு ஆரம்பிக்கும் இந்த வாரம். இதுவரைக்கும் செய்யலாமா, வேண்டா மான்னு யோசிச்சுக்கிட்டிருந்த காரியங்களை யெல்லாம் இந்த வாரம் மளமளன்னு செய்ய ஆரம்பிச்சிடுவீங்க. ஃபிரண்ட்ஸுங்க உதவி கரமா இருப்பாங்க. பணப் பிரச்னை இருக்காது. மங்கள காரியங்கள் உங்க வீட்டில நடக்கலாம். இல்லேன்னாலும் அது மாதிரியான விசேஷங் களுக்குப் போய் கலந்துக்கற சான்ஸ் இருக்கு. எதிரிங்க ஓரங்கட்டி நின்னுடுவாங்க. பெண் களுக்கு இது ரொடீன் வாரம்தான். பொலிடீ ஷியன்ஸுக்குத்தான் கொஞ்சம் கஷ்டமா இருக் கும். ஏன்னா, அவங்க சிந்திச்சுச் செயல்பட வேண்டியிருக்கும்!

ரிஷபம் : (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)




முக்கியமான கிரகங்கள் மக்கர் பண்றதால, இந்த வாரம் நீங்க எதிலும் நிதானமாவும் கவன மாகவும் செயல்படணும். பிள்ளைங்களால சில பிரச்னைகள் வரலாம். குடும்பத்திலும் சிறு சிறு சங்கடங்கள் ஏற்படும். இருந்தாலும் ஃபிரண்ட் ஸுங்க உதவுவாங்க. வெளி நாட்டுலேர்ந்து நல்ல சேதி வரும். உத்தியோகஸ்தர்கள் அதிக பொறுப்போடு செயல்படணும். கணவன் மனைவி உறவு அத்தனை திருப்தியா இருக் காது.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)




குரு 9-ல் பலம் கூடியிருக்கறதாலயும் சூரி யனும் புதனும் உங்க பக்கம் பிரகாசமா சஞ் சரிக்கிறதாலயும் ஹெல்த் விஷயம் டபுள் ஓகே! வெளிநாட்டுலேர்ந்து உற்சாகமான சேதி வரும். முயற்சிகள் எல்லாமே நல்லபடியா பலன் தரும். கொடுக்கல் வாங்கல், ஸ்பெகுலேஷன் விஷயங் களிலும் ஆதாயத்தையே எதிர்பார்க்கலாம். பண விஷயத்திலும் பிராப்ளம் கிடையாது. உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷனோடு கூடிய இட மாற்றம் வரலாம்.

கடகம் : (புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)



நல்ல பலன்களை நீங்க இந்த வாரம் கொஞ் சத்துக்குக் கொஞ்சம்தான் எதிர்பார்க்க முடி யும். கிரக சஞ்சாரங்கள் அப்படி. சின்னச் சின்ன பிரச்னைகளும் தொல்லைகளும் இருந் துக்கிட்டே இருக்கும். குடும்பத்துல அமைதி குறையற சம்பவங்கள் நடக்கற சான்ஸே அதிகம். பண விஷயமும் சீரா இருக்காது. எடுத்த காரியங்களிலும் குறுக்கீடுகள் வந்துக் கிட்டே இருக்கும். ஆனாலும் மனசுல துணிச்ச லோடு எதிர்ப்புகளைச் சமாளிப்பீங்க.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)




இதுவரைக்கும் இருந்த சங்கடங் களெல்லாம் ஓரங்கட்டி நிற்க, சுப மான பலன்கள் நடக்க ஆரம்பிக்கும். வீடு, நிலம், ரியல் எஸ்டேட் பிசினஸில் நல்ல ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வாகன யோகம் அல்லது வாகன வகையில் நன்மை கிடைக்கும். வியாபாரிகள், கமிஷன் ஏஜெண்டுகளுக்கு லாப கரமான வாரம். வேலை இல்லாதவங்களுக்கு வேலை கிடைக்கும். வேலையில் இருக்கறவங் களுக்கு ஊதிய உயர்வுக்கு சான்ஸ் இருக்கு.

கன்னி : (உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)



நீங்க ஒரு காரியத்தைத் தொடங்க ஆரம்பிச்சா போதும்; உடனே அதுக்குப் பல தடைகள் வந்து சேரும் வாரம் இது. எத்தனை தடை வந்தாலும் உங்க கடுமையான முயற்சி யால முறியடிச்சு வெற்றி காணக்கூடிய பலே ஆசாமி நீங்க. இருந்தாலும் அப்பப்போ மனக் குழப்பம் வந்து கலங்கத்தான் செய்வீங்க. எதிலும் உணர்ச்சி வசப்படாதீங்க. இயந்திரம், மின்சாரம் மாதிரி விபத்துகளுக்கு சான்ஸ் இருக்கற வேலைகளைச் செய்யறவங்க அதி ஜாக்கிரதையா இருக்கணும். வியாபாரிங்க அகலக் கால் வெக்காம இருக்கறதுதான் நல்லது.

துலாம் : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)




மத்தவங்க பார்த்துப் பாராட்டும் படியான சாதனைகளைச் செய்வீங்க இந்த வாரம். பண வரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த வரவுகள் அவசியம் வந்து சேரும். அதிர்ஷ்ட வாய்ப்புகளும் சிலருக்கு உண்டு. விருந்து - கேளிக்கைன்னு தான் பறக்கிற வாரமா இருக் கறதால மனசு உற்சாகத்துல துள்ளும். வெளி நாட்டுத் தொடர்பாலயும் ஆதாயமே கிடைக் கும். பெண்கள் பட்டுப் புடைவை, நகைன்னு

டிசம்பர் 9 முதல் 15 வரை


நடக்கும்!

வாங்கற சான்ஸ் இருக்கு. இத்தனைக்கும் நடுவுல சிறுசிறு தொல்லைகளும் குறுக்கீடுகளும் இருக்கத்தான் இருக்கும்.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

சாதாரண சாதனை படைச்சா, வெறும் பாராட்டுக்கள்தான் கிடைக்கும். ஆனா செயற்கரிய சாதனை செஞ்சா, பாராட்டுகளோடு புகழும் கிடைக்குமே! அப்படித்தான் கிடைக்கப் போவுது உங்களுக்கு. ரியல் எஸ்டேட் துறையில் இருக்கறவங்களுக்கு வளர்ச்சி உறுதி. வருமானமும் கியாரண்டி. விளையாட்டு வீரர்கள் வீரதீரச் செயல்கள் புரிவாங்க. கலைத் துறையில் உள்ளவர்களுக்கும் பாராட்டுகள் நிச்சயம். வீட்டுக்குத் தேவையான பொருள்களோடு, அலங்காரப் பொருள்களும் வாங்கப்படும்னா, பெண்களோட உற்சாகத்துக்குக் கேட்கவே வேணாமே!



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பிரச்னைகளும் எதிர்ப்புகளும் இருக்கத்தான் செய்யும். ஆனா என்ன? அதையெல்லாம் எதிர்த்துப் போராடுகிற துணிச்சலும் தன்னம்பிக்கையும் உங்ககிட்டே நிறையவே இருக்கே! அதால, நீங்க எதையும் கடுமையான உழைப்பால ஜெயிச்சுக் காட்டுவீங்க. கூடப் பிறந்தவங்களும் உங்களுக்கு சப்போர்ட்டாவே இருப்பாங்க. வாகன விஷயத்துல எச்சரிக்கை அவசியம். கொடுக்கல், வாங்கல் விஷயத்திலும் உஷாரா இருக்கணும்.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

சூரியன், குரு, புதன், சுக்ரன் ஆகியோரது சஞ்சாரம் அமோகமா இருக்கறதால, உங்க காட்டுல அடைமழைதான் போங்க! புதிய பொருள்கள், பதவிகள்னு எல்லாம் உங்களைத் தேடி வர கியூவுல நிக்கும்னா பார்த்துக்கங்க! பண விஷயம் அமோகமா இருக்கும்கிறது மட்டுமில்லே, திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் நிறையவே இருக்கு. எதுவானாலும் அதுல, ஒண்ணுக்கு ரெண்டா லாபம் கிடைக்கும். சொந்தக்காரங்க எல்லோருமே உங்களுக்கு ஆதரவா இருப்பாங்க. வீட்டுல விருந்தும் சுப நிகழ்ச்சிகளுமா ஒரே குதூகலம்தான்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்கள் எண்ணங்களும் திட்டங்களும் நிறைவேறுவதற்கான சந்தர்ப்பங்கள் கனிந்து வரும் வாரம் இது. உங்கள் திறமையும் உழைப்பும் நிச்சயம் வீண் போகாது. நிர்வாகத் துறையில் இருக்கறவங்களுக்கு வெற்றி உறுதி. அரசியல்வாதிகளுக்குப் புதிய திருப்பமும் வெற்றியும் கிடைக்கும். வியாபாரிகளின் வளர்ச்சிக்கு கியாரண்டியே சொல்லலாம். ஆனாலும் பண விஷயம் முன்ன பின்னத்தான் இருக்கும் என்பதால் சிக்கனம் அவசியம். பயணத்துலயும் எச்சரிக்கை அவசியம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பேச்சில் எச்சரிக்கையா இருப்பது முக்கியம். சின்னச் சின்ன விஷயங்களில் கூட கணவன் - மனைவிக்குள்ள சல சலப்புகளும் மனக் கசப்புகளும் வர்றதுக்கு சான்ஸ் இருக்கு. பண விஷயத்துல அபிவிருத்தின்றது வாஜ்பாய் நிம்மதியாத் தூங்கற மாதிரிதான்! இயந்திரம், நெருப்பு மாதிரி விபத்துகளுக்கு வாய்ப்பான வேலைகளில் இருக்கறவங்க அவசியம் எச்சரிக்கையோட இருக்கணும். வாரக் கடைசியில திடீர்னு சில நல்ல மாற்றங்கள் ஏற்படலாம். கலைஞர்களுக்கு மட்டும் புதிய வாய்ப்புகள் வந்து கதவைத் தட்டும். ●



மீன ராசிக்காரரான பாடகி மணி கிருஷ்ணசுவாமிக்கு புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டுமாம்!

அக்னிசர்மா பக்கம்

நாடக விமர்சனம்



மற்றும் பலர்

"விருப்ப ஓய்வு வாங்கிக்காதிங்க. கண்ட நிதி நிறுவனங்களில் பணத்தைப் போடாதிங்க. பணத்தைவிட மனிதர்கள்தான் முக்கியம்னு பைத்தியக்காரத்தனமாக நம்பாதிங்க" - நாடகம் இவற்றைத்தான் வலியுறுத்துகிறது.

தம்பி, அக்கா, அப்பா என்று உறவினருக்கெல்லாம் தன் வருமானத்தை அள்ளிவிடுகிறான் சுகவனம். ஆனால் மனைவிக்கு இதய ஆபரேஷனுக்குப் பணம் தேவைப்படும்போது அந்த உறவுகள் தேவைப்படும் உதவியைச் செய்ய மறுக்கின்றன. 'பணமே பிரதானம்' என்ற முடிவுக்கு வருகிறார் ஹீரோ வரதராஜன்.

அசட்டுத்தனம் நிறைந்த உத்தமன் சுகவனம் ரோலில் வரதராஜன் பொருத்தமாக மின்னுகிறார். (சில இடங்களில் அடக்கி வாசித்திருக்கலாமே என்றும் தோன்றுகிறது.)

புரிந்து கொள்ளாக் கணவனும் இதய நோயுமாக நொந்து போகும் மனவேதனையை வெகு துல்லியமாக வெளிப்படுத்துகிறார் நித்யா. வரதராஜனின் அப்பாவாக வரும் ஏழுமலை தன் அனுபவ நடிப்பில் பிய்த்து உதறுகிறார். (குடும்பத்தில் மற்ற அத்தனை பேரும் பேசும் பாஷைக்கு மாறாக இவர் மட்டும் "என்ன புள்ள, மச்சான்" என்றெல்லாம் பேசுவதை அடுத்து வரும் ஷோக்களில் திருத்திக் கொண்டு விடமாட்டாரா என்ன?)

இயக்குநர் 'வேதம் புதிது' கண்ணன் வசன கர்த்தாவாக மட்டும் மனத்தில் பதிகிறார்.

இயல்பான நகைச்சுவை ஆங்காங்கே சுடர் விடுவது சிறப்பு. மேடையில் ஒருபுறம் நிதி நிறுவனத்தில் தன் மொத்த ஓய்வு ஊதியத்தையும் போட சுகவனம் சம்மதிக்க, மறுபுறத்தில் அமாவாசை தர்ப்பணம்!

"இனிமே என்னுதுன்னு எதுவுமே இல்லை; எல்லாமே பகவானுடையதுன்னு சொல்லி எள்ளும் தண்ணியும் விடுங்க" என்று சாஸ்திரிகள் சொல்லும் யுக்திக்கு சபாஷ். ஆனால் நகைச்சுவை என்ற பெயரில் இரு சம்பந்திகளும் யாகவா - பாபா லெவலுக்கு மோதிக் கொள்வது மிகவும் ரசனைக் குறைவாக இருக்கிறது. ○

— ஜி.எஸ்.எஸ்.

'வலை'யில் விரியும் செய்திகள்!

தற்போது வெளிவருகிற அனைத்து தினசரி, வார, மாதப் பத்திரிகைகளும் அநேகமாக இன்டர்நெட்டிலும் காணப்படுகின்றன. (கல்கி உட்பட.) ஆனால் அச்சில் வெளிவராமல், முழுக்க முழுக்க இன்டர்நெட்டில் மட்டுமே வெளிவருகிற நாளிதழ் 'விண்ணோசை'. 'உலகத் தமிழர் தன்முனைப்பு இயக்கம்' என்கிற அமைப்பின் மூலம் கொண்டு வரப்படுகிறது இது.

"உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களின் நட்புறவுப் பாலமாக இந்த இணையம் செயலாற்றுகிறது. 'விண்ணோசை' நாளிதழ் தினமும் வெளிவரும் செய்திகளைத் தருவதன் மூலம் உலகத் தமிழரின் உறவை மேலும் பலப்படுத்துகிறது" என்றார் இதன் ஆசிரியர் சௌரிராசன்.




• சௌரிராஜன்

இப்போது, இந்த ரக 'இன்டர்நெட்' இதழ்களில், அறிவியல் வளர்ச்சி காரணமாக ஒலியையும் (sound) கேட்க முடியும். உதாரணமாக, ஒரு பேட்டியின் இடையே முக்கியமான உரையாடலை ஒலி வடிவில் (Audio clippings) தர இயலும். ஒருவரின் குரலையே தரும்போது அந்தச் செய்திக்கு நூறு சதவிகித நம்பகத்தன்மை கிடைக்குமல்லவா?

'ஒளியோவியம்' என்ற சினிமா இதழையும் மாதத்திற்கு இருமுறை இன்டர்நெட்டில் கொண்டு வருகிறார்கள். பேட்டிகள், உலக சினிமா சாதனையாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், துணுக்குச் செய்திகள் அதில் இடம் பெறுகின்றன.


— காவ்யா




சரிகம..
நான்தான் சொன்னேனே, அவர் புல்லாங்குழல் வாசிப்பு தெய்வீகமா இருக்குன்னு!
கான்டீன்
இந்த தடவை கான்டீனில் கூட்டம் கம்மிதான்.
அசியாப் பாருங்க.
இந்த முறை அரங்கத்திலே கான்டீனையும் கான்டீனில் கச்சேரியையும் ஏற்பாடு செய்திருக்காங்க!
வயலின் மேல்நாட்டு இசைக் கருவியா இருக்காம். அதுக்காக..?
ஜாகிர் உசேன் மாதிரி ஆகணும்னு ஆசைப்பட்டா இப்படித்தான்!

..பகடி

—குல்லு, மாதுரி


அரிக்கிறதே!
சே! அது ஸ்ருதி பாக்ஸ்னு நினைச்சேன். டேப் ரிகார்டரை வெச்சு மாத்திட்டீங்களே!
..வித்வான் மார்கழி மாச பஜனை செய்து முன்னுக்கு வந்தவர்!
ஸ்பான்ஸர் பண்ணவங்க இப்படித்தான் இருக்கணும்னு சொல்லிட்டாங்க!
JKB டயர்ஸ்
JKB டயர்ஸ்
JKB டயர்ஸ்

இந்த சீசனில் மட்டும் 160 கச்சேரிகள்!




ஒரு மூன்று மணி நேரக் கச்சேரிக்கு, வித்வான்கள் பெறுவது சில ஆயிரங்கள் என்றால், சுருதி மீட்டும் தம்பூராக் கலைஞர்கள் பெறுவது வெறும் நூறும் இருநூறும் மட்டுமே!

"இப்போ பரவாயில்லையே! நான் தம்பூரா மீட்டத் தொடங்கின காலத்தில் ஒரு கச்சேரிக்கு ஒரு ரூபாதான் சன்மானம். எங்கேயாவது அஞ்சு ரூபா கொடுத்துட்டா அது கூடிக் கூடிப் பேசப்படற பெரிய விஷயம்!" என்கிறார் ஐம்பது வருடத்துக்கு மேலாகத் தம்பூரா கலைஞராக இருக்கும் வெங்கட்ராமன்.

"சபாக்காரங்க அம்பது ரூபா தருவாங்க. வித்வான்கள் நூறு நூத்தம்பது தருவாங்க. அதுதான் வருமானம். இங்க-இருக்கற எந்தத் தம்பூரா ஆர்டிஸ்டுக்கும் இது திருப்தி இல்லைதான். ஆனால், கேட்பது கிடையாது. கிடைக்கிற வாய்ப்பும் போயிடுமே? எல்லா வித்வான்களும் இப்ப எலக்ட்ரானிக் சுருதிப் பெட்டி கொண்டு வந்துடறாங்க. தம்பூராதான் வேணும்னு நினைக்கிறவங்க கூட, நாங்க அதிக ஊதியம் கேட்டால், சொந்தக் காரங்களையோ, சிஷ்யர்களையோ தம்பூரா மீட்டச் சொல்லி சமாளித்துக் கொள்வார்கள்!" என்றார் லட்சுமி நாராயணன்.

புல்லாங்குழல் மாலி தொடங்கி எத்தனையோ பல பெரிய வித்வான்களுக்கு தம்பூரா இசைத்தவர் இவர். "இப்போதெல்லாம் ரேடியோ ஸ்டேஷனில் கூட எலக்ட்ரானிக் ஸ்ருதி பாக்ஸ் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். தம்பூராக் கலைஞர்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுகிறார்கள்" என்று வருத்தப்படும் இவர், தமது எழுபது வயது அனுபவத்தில், தம்பூரா போடுவதை தெய்வீக மான பணியாகவே செய்து வருவதாகச் சொல்கிறார்.

"ஆனா, பல வித்வான்கள் இதைப் புரிஞ்சுக்கறதில்லை. மேடைல பாடிட்டிருக்கறப்ப, 'அழுத்திப் போடுய்யா'ம் பாங்க. அழுத்திப் போட்டா ஸ்ருதி கலைஞ்சுடும். தம்பூரா மீட்டறதுக்கு ஒரு லாகவம் வேணும். சுருதி கலைஞ்சா



• வெங்கட்ராமன்

நாங்களே சேர்க்க மாட்டோமா? வித்வான் வாங்கி, தான் சுருதி சேர்த்துத் தருவார். இது எங்களுக்கு இன்ஸல்டாப் படும்னு கூட யாரும் யோசிக்கறதில்லை!"

"பாடுபவருக்கு ஏற்ப, நாம் மீட்டும் விதத்துக்கேற்ப, சபாக்காரர்களின் 'மூடு'க்கேற்ப அவ்வப்போது தம்பூராக் கலைஞர்களின் சன்மானத் தொகையும் மாறும் என்கிறார்கள் தந்தையும் மகனுமான குருசாமி, கௌரிசங்கர்.



• குருசாமி

சுதா ரகுநாதன், பம்பாய் சகோதரிகள், லால்குடி உட்பட ஏராளமானோருக்குத் தம்பூரா போடுபவர் குருசாமி. இன்றைய பல இளம் கலைஞர்களின் ஃபேவரிட் சாய்ஸ் கௌரிசங்கரின் தம்பூராதான்.

"எலக்ட்ரானிக் ஸ்ருதி பாக்ஸ், எங்களுக்கு ஒரு வில்லன்தான் என்றாலும் தம்பூராவின் நாதம் அதற்கு வராது என்பதை இன்னமும் பல கலைஞர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். உதாரணமாக விஜய் சிவா தம் கச்சேரிக்கு இரண்டு தம்பூராக்களை உபயோக்கிறார். கச்சேரி களை கட்டும் என்பது தவிர, இரண்டு தம்பூராக் கலைஞர்களுக்கும் வருமானம் அல்லவா?" என்கிறார் கௌரிசங்கர்.

சன்மான விஷயத்திலும் விஜய் சிவா தங்களுக்குக் கௌரவமான இடத்தை அளிப்பதாக அத்தனை தம்பூரா கலைஞர்களும் கூறுகிறார்கள்.



• லட்சுமி நாராயணன்



• கௌரிசங்கர்

கச்சேரி வருமானத்தை நம்பி மட்டுமே குடும்பம் ஓடாது என்கிற நிலையில் கேஸட் கம்பெனிகள் புண்ணியம் கட்டிக் கொள்கின்றன. எச்.எம்.வி., இன்ரெகோ போன்ற கேஸட் தயாரிப்பு நிறுவனங்கள், தொடர்ந்து கர்நாடக சங்கீதக் கேஸட்டுகள் கொண்டு வருவதால், ஃபீல்டில் உள்ள தம்பூராக் கலைஞர்களுக்கு தினசரி ரெக்கார்டிங் இருந்து கொண்டே இருக்கிறது. ஒரு ரெக்கார்டிங்குக்கு ரூ 500 முதல் 600 வரை கிடைப்பதால் அதிக பிரச்னை யில்லாமல் சமாளிக்க முடிகிறது என்கிறார்கள்.

"சில வித்வான்கள் நாம் தம்பூரா போடுவதால் திருப்தியும் மன நிறைவும் அடைந்து விட்டால் அவர்கள் மூலமும் ரெகுலரான வாய்ப்புகள் வரும். உதாரணமாக ஆந்திரப் பாடகர் நேதனூரி கிருஷ்ண மூர்த்தி நாட்டின் எந்த மூலையில் கச்சேரி என்றாலும் அனேகமாக என்னைத்தான் தம்புரா போட அழைத்துப் போவார். '82ல் எம்.எஸ். கோபாலகிருஷ்ணனுடன் வெளிநாடு கூட சென்றிருக்கிறேன்" என்கிறார் வெங்கட்ராமன்.

டிசம்பர் சீசனுக்கு மட்டும் 160 கச்சேரிகளில் தம்பூரா போட தமக்கு அழைப்பு வந்துள்ளது என்ற வெங்கட்ராமனின் மூன்று பிள்ளைகள், மூன்று பெண்களும் கூட தம்பூரா மீட்டத் தெரிந்தவர்கள் தாம்!

சினிமாவிலும் சமீபகாலமாகத் தம்பூராவுக்கு மவுசு கூடியிருப்பதாகச் சொன்னார் கௌரிசங்கர்.

'அன்னமாசார்யா' படத்தில் தாம் தம்பூரா வாசித்ததையும், கீரவாணி, ரவீந்திரன் போன்ற இசையமைப்பாளர்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருவதையும் குறிப்பிட்டார் இவர். ○

— ஔரங்கசீப்

இசை வி(ழா)மர்சனம்



போன வாரம் விமர்சனத்துக்கு எதிர்பார்த்த திக்கிலிருந்து எதிர்பார்த்த எதிர்ப்பு ஏமாற்றாமல் வந்து சேர்ந்தது. ஆமோதிப்பும் தீவிரமாகவே இருந்தது!

இந்தத் தும்புரு எழுதினால் தானே சர்ச்சையாகிறது! அருணா சாயிராம் கச்சேரியில் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஜானகி மாமியுடைய ரன்னிங் காமென்ட்ரி விமர்சனத்தை இப்போது தருகிறேன். அன்னாருக்கு நான்தான் தும்புரு என்பது தெரியாது; வருகிற வாக்கியங்களில் இருக்கும் ஒருமையின் உரிமை போக் ரோட் ஜானகி மாமியுடையது; எனதல்ல...

"இத்தனூண்டு பாட்டுக்கு இவ்வளவு நேரம் ஸ்வரம் பாடறாளே! Proportion தெரியலை (ஹம்ஸத்வனி யில் முதல் கீர்த்தனைக்கு). இது ஹுசைனி ராகம்னா... இவ்வளவு ஸ்டைலா பாடினா என்ன ராகம்னே புரியலை! ('நீவன்டி' என்று தொடங்கிய தெலுங்குக் கீர்த்தனை). சரஸ்வதி ஓடியே போயிடப் போறா (சரஸ்வதி ராகத்தில் வேகமாக ஸ்வரம் பாடியபோது). வார்த்தையெல்லாம் சரியான இடத்துல பிரிக்காம பாடினா கேட்கவே கஷ்டமாயிருக்கு... (தோடி ராகத்தில் 'நன்றாக உன் திருநாமம் தனை தினம்' என்று நிரவல் செய்தபோது.)"

மோகனத்தினிடையே கேட்டிகாபி!

ஜானகி மாமியின் துலாக்கோல் விமர்சனத்திலிருந்து அறியப்படுவது யாதெனில் அருணா சாயிராம் பாட்டில் ரேஷன் அரிசி போல் நிறைய அனாவசியங்கள். 1) கனமான குரலில் திடீர் திடீரென்று தலைகாட்டும் குளிர் ஜுர நடுக்கம். இதை ஸ்டைலாக்கிக் கொண்டிருக்கிறார். 2) கர்நாடக சங்கீதத்தின் சௌக்கியத்தை அடியோடு குலைக்கும் சூபர் ஸானிக் அவசரம். 3) கீர்த்தனைகளோடு விரோதம் கொண்டாடுகிற மாதிரியான குஸ்தி அணுகுமுறை!

சங்கர நாராயண அய்யர் என்பவரின் நினைவு நாள் கச்சேரி அது. மேற்படி அய்யர் நிறைய கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறாராம் (தமிழ், தெலுங்கு, வடமொழி...) அவர் பெயரில் குடும்பத்தார் அறக்கட்டளை நிறுவி அப்பாடல்களைப் பிரபலப்படுத்த முயன்று வருகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட வாக்கேயக்காரரின் கீர்த்தனைகளைப் பிரபலப்படுத்தும் முயற்சியில் சாஹித்யத்துக்கும் (வார்த்தைகள்) சாஹித்ய பாவத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பாட வேண்டும் என்பதை அருணா எப்படி மறந்தார்?

இத்தனைக்கும் பாவத்துக்குப் பெயர்போன பிருந்தாவிடம் பயின்றவர். குரல் சும்மா கங்கை வெள்ளம் மாதிரியிருக்கிறது. அவர் மனம் வைத்தால் சுத்தமான சரக்கைத் தரலாம். தோடி ஆலாபனையில் அதற்கான அறிகுறிகள் தெரிந்தன.

தண்ணீரிலிருந்து வெளியேற்றப்பட்ட மீன் குஞ்சாகத் தவித்தார் அருணாவுக்கு வயலின் வாசித்த ஸ்ரீராம்குமார். தோடி ஆலாபனையை எதிரொலித்தபோது அப்படியே கொத்தவரங்காய் ஆய்வது போல் அனாவசியங்களை மட்டும் கிள்ளி எறிந்த அவருடைய அடக்கமான சாமர்த்தியத்துக்குத் தலை வணங்குகிறேன்.

மிருதங்கம் வைத்யநாதனும் கடம் கார்த்திக்கும் கச்சேரி நெடுகவே ஆர்ப்பாட்டமாகத்தான் வாசித்தார்கள். அதனால் நான் தனியாவர்த்தனத்தின் போது எழுந்து வீடு பார்க்கப் போய் விட்டேன். மேலும், சாப்பாட்டு நேரம் தாண்டி விட்டால் என் பைரவி பாப்பா கெட்ட கோபத்தில் ஊளை யிட்டு ஊரைக் கூட்டிவிடும்!

அருணா சாயிராம் கச்சேரிக்கு முன்னதாக டி.கே. ஜெயராமனின் சிஷ்யர்கள் பாடிய ஏகாதசி ருத்ர கீர்த்தனைகள் பற்றிச் சொல்லியாக வேண்டும். அவையும் சங்கரநாராயண



அய்யர் இயற்றியவையே.

டி.கே.ஜெ. சிஷ்யர்கள் கோஷ்டி கானத்தில் ஸ்பெஷலிஸ்டுகள் என்பது 'கமலாம்பா' மற்றும் பஞ்சலிங்க க்ஷேத்ர கிர்த்தனை கேஸட்டுகள் கேட்டவர்களுக்குத் தெரிந்திருக்கும். மூத்த சிஷ்யரான விஜய் சிவா தலைமையில் ஏகாதசி ருத்ர கிர்த்தனைகளையும் கச்சிதப்படுத்திப் பாடினார்கள். வரிசையாக பதிமூன்றோ பதினான்கோ கிர்த்தனைகள் - இலேசாக ஓரிரு இடங்களில் பிசுறு தெரிந்தாலும் ஒரு வினாடி கூட சலிப்பு ஏற்படவில்லை.

சங்கரநாராயண அய்யர்



• சந்தான கோபாலன்



• அருணா சாயிராம்

கிருதிகளைக் கற்றுக் கொடுப்பவர்களுக்கு 'போதகா விருது' வழங்கு கிறது அறக்கட்டளை. முதல் விருது டி.கே.ஜெயின் நினைவுக்கு அல்லவா சமர்ப்பிக்கப்படிருக்க வேண்டும்!

* *

மோகனத்துக்கு நடுவே காபி கேட்கலாமா? அதுவும் சீனியர் வித்வானான சந்தான கோபாலனின் கச்சேரியில்? அன்று அந்த அக் கிரமம் நடந்த போது சிரிப்பாய்ச் சிரித்து விட்டது!

பின்னே, ரொம்ப சுஸ்வரமாக 'நன்னு பாலிம்ப நடசி வச்சிதிவோ, நா பிராண நாதா...' என்று ஆரம்பித்த பாடகர், சற்றே நிறுத்தி, சபா செயலாளரிடம் ஜாடை காட்டி "காபி" என்று கேட்டால் சிரிப்பு வராதா!

மேல் ஸ்வரங்களில் பாட அவஸ்தைப்பட்டு அவ்வப்போது குப்புற அடித்து விழுந்த பாடகருக்கு சீசன் ஆரம்பத்திலேயே தொண்டைத் தகராறு. காபி வந்தும் காப்பாற்றவில்லை! ஆனால் தம் குறையை ஓர் அமுக்கு அமுக்கி, எட்டிய உயரத்துக்குள் அவர் அந்த மோகனத்தை என்னவெல்லாம் செய்தார் - அப்பப்பா! ஒரு சமயம் தில்லானாவின் குதூகலம், ஒரு சமயம் தாலாட்டின் குழைவு, ஒரு சமயம் தானத்தில் கேட்கும் கம்பீர ஓட்டம் என்று பார்த்துப் பார்த்துப் பரிமாறி விட்டார், அதி சாமர்த்திய மாக.

ம்ருதங்கம் மூர்த்தி கொடுத்த ஆதரவில் சந்தான கோபாலன் எங்கேயோ உயரத்துக்குப் போய்விட்டார். நாமும் அவரோடு போய்த் திரும்பினோம்! கஞ்சிரா நாகராஜனும், டி.கே. மூர்த்தியும் எம்.எஸ்ஸுக்கு வாசித்துப் பழக்கப்பட்ட பழம்பெரும் ஜோடி. அவ்வப்போது அவர்கள் நிகழ்த்திய நளினமான மினி 'தனி'களை ரசிப்பதா, சந்தான கோபாலன் அவற்றுக்கு அட்டமி போட்டதை ரசிப்பதா!

அன்று திருவான்மியூர் ஆஸ்திக சமாஜத்தில் ஆத்மார்த்தமான சிறு ரசிகர் கூட்டத்துக்குப் பாடினார் நெய்வேலியார். வி. தியாகராஜன் தம் வயலினில் 'ஸ' வாசித்தாலே "ஐயோ!" என்று புளகாங்கிதப்பட்டார். பார்த்தார் தியாகராஜன். ஆதார ஸ்வரங்களுக்கும் அதிகமாக வாசிக்கப் போய் நெய்வேலியார் மூர்ச்சையாகி விட்டால் என்ன செய்ய.. வெறுமே 'ஸபஸ'வோடு நிறுத்திக் கொண்டு விட்டார்!

தம்புரா போட்டது ஓர் இளம் பெண். "ஸ்ரீ வித்யா எங்கிட்டே கத்துக்கறா. நீங்கள் எல்லாரும் நிறைய ஆசிர்வாதம் பண்ணுங்கோ" என்று கச்சேரிக்கு மத்தியில் கனகாரிய மாகக் கேட்டுக் கொண்டார் சந்தானகோபாலன். ஸ்ரீவித்யா பாடியது ஒரு அட்சரம் கூடக் காதில் விழவில்லை யென்பதால் இப்போதைக்கு குருவைப் போலவே அட்டமி போடும் அவருக்கு தாராளமான ஆசிகள்!

சபாக்காரர்களுக்கு ஒரு யோசனை: சந்தானகோபாலன் கச்சேரிகளில் காணக்கிடைக்கும் காமெடி டிராக்கை நன்கு விளம்பரப்படுத்தி ஸ்பெஷல் ரேட் வசூலிக்கலாமே! ○

கேசட் சிஷ்யர்கள்!

விஷால் எட்டு வயதுப் பையன். அமெரிக்காவில் டெக்ஸாஸில் வசிக்கிறான். தமிழ்நாட்டுக்கு வெளியே நடக்கிற தியாக ராஜ உற்சவங்களில் மிக விசேஷமானது என்று கூறப்படும் க்ளீவ் லாண்ட் (அமெரிக்கா) தியாகராஜ உற்சவத்தின் போது நடந்த போட்டியில் கலந்து கொண்டு, முதல் பரிசு பெற்றிருக்கிறான். இந்த சுட்டிப்பையனின் குரு ரவிகிரண். மிகச் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், விஷால், ரவிகிரணின் 'கேசட் சிஷ்யர்!'

அதென்ன 'கேசட் சிஷ்யர்' என்கிறீர்களா?

பல்கலைக்கழகங்கள் தபால் மூலம் டிகிரி படிப்பு சொல்லித் தருவது போல, இவர் கேசட் மூலம் இசை சொல்லித் தருகிறார். ஆனால் இது பற்றிப் பேச ஆரம்பிக்கிறபோதே, "டெலி டீச்சிங் என்கிற இந்த தொலைதூர இசைக் கல்வி, குருவிடம் நேரிடையாய்க் கற்றுக் கொள்ளுவதற்கு ஈடானதோ, ஒரு மாற்றோ இடையாது. ஏற்கெனவே இருக்கிற இசைத் திறமையை மேம்படுத்திக் கொள்ள உபரியான ஒரு வழி. அவ்வளவுதான்!'' என்கிற எச்சரிக்கையோடுதான் பேச ஆரம்பிக்கிறார்.

''இந்த நிலையில், கேசட்டில் சொல்லித் தரும் எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது ரவிகிரண்?''

"இங்கே மியூசிக் கற்றுக் கொண்டு, பின்னர் அயல் நாடு சென்று விட்டதன் காரணமாக மேற்கொண்டு தொடர முடியாமல் போனவர்களுக்காகவும், அந்நிய மண்ணில் லோக்கலாக உள்ளவர்களிடம் கற்றுக் கொண்டு ஒரு நிலையை அடைந்தபின், மேலும் தொடர விரும்புபவர்களுக்கும் தான் இந்த கேசட் முறை. ஆரம்பத்தில் இந்த முயற்சி வெற்றி பெறுமா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது உண்மைதான். ஆனால் அதையும் மீறி, வெற்றிகரமாய் நடந்து வருவது மகிழ்ச்சிக்குரியது.''



• ரவிகிரண்

ஓரளவு அடிப்படை இசை அறிவு இருக்கிறவர்களைத்தான் ரவிகிரண் தொலை தூர இசைக் கல்வியில் சிஷ்யர்களாக ஏற்றுக் கொள்கிறார். அரிச்சுவடியில் ஆரம்பிக்கிற அவசியம் கிடையாது. இசைப் பாடங்களை இவர் கேசட் மூலம் அனுப்பி வைக்கிறார். சிஷ்யர்கள் அதைக் கேட்டு, கற்றுக் கொண்டு, அவற்றைப் பாடி, கேசட்டின் ஒரு பக்கத்தில் பதிவு செய்து, தபால் மூலம் ரவிகிரணுக்கு அனுப்பி வைக்கிறார்கள். ரவிகிரண், அவற்றை நுணுக்கமாய்க் கேட்டு, அவர்கள் செய்திருக்கும் தவறுகளையும் அதன் திருத்தங்களையும் கேசட்டின் மறு பக்கத்தில் அடுத்தடுத்துப் பதிவு செய்து விட்டுத் தொடர்ந்து புதிய பாடங்களையும் பதிவு செய்து மாணவர்களுக்கு அனுப்பி வைக்கிறார். இப்படியாக, மூன்று மாதங்களில் இரண்டு, மூன்று கேசட்களில் பாடப் பரிமாற்றம் நடக்கிறது.

தவிர, வருடத்தில் பாதிநாள் ரவிகிரண் அமெரிக்காவில்தான் இருக்கிறார். அந்தச்

சமயம் அங்குள்ள சிஷ்யர்களுக்கு நேரடி வகுப்பும் உண்டு. "வழக்கமாக குருவிடம் நேரடி இசைப் பயிற்சி பெறும் சிஷ்யர்கள் வருடத்தில் இருபது, முப்பது கிர்த்தனைகள் கற்றுக் கொள்ள முடியும் என்றால் என் கேசட் சிஷ்யர்களும் இதே அளவுக்குக் கற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமில்லை, ஆர்வமும் நேரமும் இருக்கும் பட்சத்தில், ஐம்பது கிர்த்தனைகள் கூடக் கற்றுக் கொண்டு விட முடியும்!" என்கிறார் ரவிகிரண்.

இப்போது, ரவிகிரணிடம் கேசட் மூலம் இசை பயில்பவர்கள் சுமார் அறுபது பேர்!

''பல்கலைக்கழகங்கள் பண்ணுகிற மாதிரி நானும், இசைப் பாடங்களை ஆயிரக் கணக்கான கேசட்களில் பதிவு செய்து, மொத்தமாய்த் தபாலில் அனுப்பி, இசை கற்றுத் தரக் கூடாது. காரணம், ஒருவரைப் போல இன்னொருவர் கிடையாது. ஒவ்வொருத்தரின் திறமை, தேவை, இவற்றின் அடிப்படையில் தனிக் கவனம் செலுத்துவது என் ஸ்டைல். நேரிடையாக என்னிடம் மியூஸிக் கற்றுக் கொள்பவர்களுக்குக் கூட, இரண்டு பேருக்கு ஒரே நேரத்தில் சொல்லித்தர மாட்டேன்."

"இந்த முறையில் வாய்ப்பாட்டு மட்டும்தான் கற்றுக் கொள்ள முடியுமா? இல்லை இசைக் கருவிகளும் கற்பது சாத்தியமா?"

"எந்தக் கருவி இசைப்பவர்களாக இருந்தாலும் வாய்ப்பாட்டு தெரிந்திருக்க வேண்டும் என்பது என் கருத்து. பிரதானமாய் தொலை தூரக் கல்வியில் வாய்ப்பாட்டுத்தான் கற்கலாம் என்றாலும்கூட அமெரிக்காவில் வீணைவாசிப்பவர்களும் என்னிடம் மாணவர்களாய் இருக்கிறார்கள். வாய்ப்பாட்டில் திறமை பெற்று, இசைக் கருவியைக் கையாளத் தெரிந்திருந்தால், கற்ற பாடத்தை எந்த இசைக் கருவியிலும் வாசிப்பது சுலபம்!"

"ஃபீஸ் எல்லாம் எப்படி?"

"அவரவர் நிலைக்கேற்ப மூணு மாதத்துக்கு நூறுமுதல் இருநூறு டாலர் வரை!"

— அக்ஷயா



''இவர் கட்சியின் பிரசார பீரங்கி என்றார்கள். அவர் பக்கத்தில் யார் இருப்பது?''

''அவர் கட்சியின் பிரசார கைத் துப்பாக்கி.''

– லலிதா செல்லப்பா



''மாடர்னா இருக்கணும். அதே சமயம் மரபுகளையும் விட்டுக் கொடுக்கக் கூடாதுங்கிறதுல பக்கத்து வீட்டு பங்கஜம் குறியா இருக்கா...''

''எப்படிச் சொல்றே?''

''பாரேன்... மருமக கல்யாணமான கையோட கணவனுடன் அமெரிக்கா போயிட்டாளாம். அதுக்காக இன்டர்நெட் மூலமா வம்புக்கு இழுத்து மல்லுக்கு நிக்கறா!''

– தில்ஹாத்பேகம்

'மார்ம தேசம்' தொடரில் குதிரை துரத்துகிற பெண் தேவதர்ஷிணியை, நிம்மதி உங்கள் சாய்ஸ் தொடரில் வரும் 'டேர் டெவில்' பத்திரிகையாளர் தேவதர்ஷிணியை உங்களுக்குத் தெரியும். சின்னத் திரையின் ஸில்வர் ஸ்டார்! ஆனால், அவர் அப்பா ஒரு கல்லூரிப் பேராசிரியர், அம்மா ஒரு ஸ்கூலின் வைஸ் பிரின்ஸ்பால்; தவிர தேவதர்ஷிணி எத்திராஜ் கல்லூரியில் பி.காம் முடித்தபோது காலேஜ் ஃபர்ஸ்ட் என்பதெல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை.

"படிக்கிற நாட்களில் எனக்குப் படிப்பில்தான் ஆர்வம். தவிர தமிழ் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டது உண்டு. மற்றபடி ஸ்போர்ட்ஸ் டே அன்று வேடிக்கை பார்க்கப் போனதுடன் சரி" என்று கூறும் தேவதர்ஷிணி, நடிக்க வந்தது "இனிய விபத்து" என்கிறார்.

கல்லூரியில் முதல் வருடம் முடித்த கையோடு, அப்பாவின் நண்பர் ஒருவர் மூலமாக ஜெ.ஜெ. டீ.வியிலிருந்து அழைப்பு வந்தது. தொகுதி உலா என்ற நிகழ்ச்சிக்காகப் பல்வேறு தொகுதிகளுக்கும் செல்வது; தொகுதி மக்களின் பிரச்னை பற்றி சம்பந்தப்பட்ட எம்.எல். ஏவிடம் பேட்டி காண்பது இவர் வேலை. நிகழ்ச்சிக்கான இணைப்புரை, கேள்விகள் இவற்றை எழுதிக் கொடுத்து விடுவார்கள் என்றாலும், தமிழ் நாட்டின் பல்வேறு ஊர்களுக்கும், குறிப்பாக கோவில்களுக்கும் போய் வர வாய்ப்புக் கிடைத்தது. (சிநேகிதிகள், 'ரொம்ப கிட்டே வராதே! ஒரே பக்தி வாடை' என்று கிண்டல் பண்ணுவார்களாம்.)

அப்புறம் சன் டீ.வியில் சேர்ந்தார். சினிமாப் பாட்டுகளுக்கு (சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசிவிட்டு, கடைசியில் பாட்டுக்கு ஒரு லிங்க் தரும்) இணைப்புரை பிசினஸ்தான். அப்போதே 'கனவுகள் இலவசம்' என்ற தொடரில், நல்ல கேரக்டரில் நடிக்க வாய்ப்பு காலிங் பெல்லை அழுத்தியது. கதவைத் திறக்கலாமா? வேண்டாமா? என்று தயக்கம். அப்பா, அம்மா இருவரும் 'உன் இஷ்டம்' என்று சொல்லிவிட, யோசித்து விட்டு, கதவைத் திறந்து விட்டார்.

"இணைப்பு உரைக்கு ரொம்ப அலட்டிக் கொள்ள வேண்டாம். ஆனால் நடிப்பு கஷ்டமான வேலையாயிற்றே?"

"நான் அப்படி நினைக்கவில்லை. யாரோ எழுதித் தந்த ஸ்கிரிப்டை, கைகளை, தலையை ஆட்டி, ஆட்டிப் பேசுவதை விட, ஒரு கேரக்டரில் ஈடுபாட்டுடன் நடிப்பது என்பது ரொம்ப இன்ட்ரஸ்டிங்கான வேலை. நடிப்புக்குக் கிடைக்கிற அங்கீகாரம் உயர்ந்தது என்றுதான் நினைக்கிறேன்.

"கனவுகளுக்கு அடுத்தபடியாய் மர்ம தேசம்



• தேவதர்ஷிணி

தொடரில் நடிக்கும்படிக் கேட்டார்கள். நீளமான தொடர் என்பதால், சற்றே தயக்கம். ஆனால் காலையில் தகவல் சொல்லி, மாலைக்குள் என் முடிவினைக் கேட்டார்கள். ஆகவே, ரொம்ப யோசிக்காமல், ஓ.கே. சொன்னேன். அது நல்ல முடிவு என்பது வாரா வாரம் நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது!"

தேவதர்ஷிணி நடித்து, ஒளிபரப்பான தொடர்கள், ஒளிபரப்பாகிக் கொண்டிருப்பவை, இன்னும் வரவிருப்பவை என்று அவர் சொல்கிறதைப் பெரிய பட்டியலே போடலாம். தவிர "இத்தனைக்கும் எனக்கு என் குடும்பத்தினருடனும், சிநேகிதிகளுடனும் கூட நேரம் செலவிட முடிகிறது" என்கிறார் சந்தோஷம் பொங்க.

இவருடைய ஷூட்டிங் அனுபவங்கள், பெரும்பாலும் ஆக்ஸிடென்ட் அனுபவங்களாகவே அமைந்து விட்டனவாம்.

"சென்னையில் டூ வீலர் ஓட்டிக் கொண்டு போன சமயத்தில் வண்டி சரிய, இடது உள்ளங்கைக்கும், மணிக்கட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆழமான வெட்டுக் காயம். செமை ரத்தம். டாக்டரிடம் ஓடினால், டைலரை விடக் கொஞ்சம் கூடுதலாக தையல் போட்டு விட்டார். இரண்டே நாளில் பொள்ளாச்சியின் புற நகர்ப்பகுதியில் நள்ளிரவில் ஷூட்டிங். மர்ம தேசத்தின் தேசிய விளையாட்டான 'சேஸிங்' காட்சி. ஒரு பாறையைச் சுற்றி ஓடுகிறபோது, செருப்புக் கால் தடுக்கிவிட, சரிந்தேன். அகப்பட்ட இடத்தில், கையால் பாறையைப் பற்றிக் கொள்ள முயன்றேன். ஆனால், அதுவே விபரீதமாகிப் போனது! தையல் போட்ட கைப்பகுதி, பாறையில் உராய, பட்....பட்... தையல்களைப் பிய்த்துக் கொண்டு, ரத்தம் பீரிட்டது! நடு நிசியில், ஏதோ முதலுதவி செய்து அட்ஜஸ்ட் செய்து கொண்டு, டாக்டரிடம் ஓடினோம்!

"இன்னொரு சமயம்,நெஞ்சின் அலைகள் ஷூட்டிங்... மாடிப் படியில் தடதட வென்று இறங்கி வர வேண்டிய காட்சி. நாலைந்து படிகள் இறங்கியதும், காலில் ஏதோ தட்டுப்பட்டுத் தடுக்கினாலும், சமாளித்துக் கொண்டு படியிறங்கி விட்டேன். ஆனாலும் டைரக்டர் 'இன்னொரு டேக்' என்றார். நானும் பழையபடி பொசிஷன் எடுக்கப் படியேறினேன். ஏதோ கிறு கிறு என்று வந்தது. தரையெல்லாம் ரத்தம். என்னடாவென்று பார்த்தால், படியிறங்கும்போது ஒரு ஆணி அங்கே இருந்திருக்கிறது. அது காலில் குத்திக் கிழித்துவிட, யாருக்கும் உபயோகமில்லாமல் கணிசமான ரத்த தானம்!"

"இது போன்ற சமயங்களில் எல்லாம், ஏண்டாப்பா நடிக்க வந்தோம் என்று நினைப்பீர்களா?"

"நான் நினைப்பதில்லை. ஆனால் என் அம்மா அப்படி நினைப்பார்!"

— ஜூலி

அட்டை வண்ணப்படம், படம் : ஸ்ரீஹரி

சின்னத்திரையின் சில்வர் ஸ்டார்!

வட்டமேஜை

மிரண்டு போன பி.ஜே.பி. தலையங்கம் படித்தேன். மிகக் கேவலமான ஒரு கூட்டணியை அமைத்து, 'Able Leader; Stable Government' என்று அண்டப்புளுகு புளுகி இன்று Ability இல்லாத தலைவராகவும், Stability இல்லாத அரசாங்கமாகவும் இருக்கும் பி.ஜே.பி., பணவீக்கத்தையும் இரண்டு மடங்காக்கி, விலைவாசியையும் கட்டுப்படுத்தத் தவறி விட்டு, காங்கிரஸையும், கம்யூனிஸ்டுகளையும் துரோகிகள் என்றும் சந்தர்ப்பவாதி என்றும் கூறுவது நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.
சீர்காழி, கே. ஆர். வெங்கடேஷ்.

'விடுதலைச் சிறுத்தை' திருமாவளவனின் பேட்டியில் நொந்து போன மனத்தின் வெளிப்பாடு நன்றாகத் தெரிகிறது. எந்த ஜாதி சங்கங்களும் அடுத்த ஜாதியினர் மீது அடக்குமுறையும் ஆதிபத்திய உரிமையும் இருக்க வேண்டும் என நினைப்பது தவறு. எந்த ஜாதி சங்கமானாலும், நடுநிலையாளர்,

அமைதிக்கு அஸ்திவாரம்

மிதவாதிகள், தீவிரவாதிகள் என மூன்று பிரிவினர் இருக்கின்றனர். தலைவர்கள் அமைதி காக்க வேண்டும் என அறிக்கை விடுத்தாலே அதற்கு எதிர்மறையான சம்பவங்கள் நடப்பதும் வழக்கமாகி விட்டன. ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்று கூறும் காலம் விரைவில் வர வேண்டும் என பிரார்த்தனை செய்ய வேண்டும்.
வடலூர், ஆர். தமிழரசி.

'அட கேட்டதும் கிடைக்குமாம் டெலிபோன்!' என்ற கட்டுரை படித்தேன். தொலைபேசி, பஸ், தபால் எல்லாமே தனியார் மயமாக வேண்டும். அரசு ஊழியர்கள் எப்படி வேலை செய்தாலும் நம்மை விலக்க முடியாது என்ற ஒருவித அலட்சியம், பொறுப்பற்ற தன்மை மக்களுக்கு வெறுப்பாக உள்ளது. தனியார்மயமானால்தான் விமோசனம் கிடைக்கும்.
திருத்தங்கல், ஈ. சிதம்பரம்.

'சம்திங்' ஜோக் மிகவும் அருமை. உண்மையிலேயே லஞ்சம் அந்த அளவிற்கு அரசு அலுவலகங்களில் தாண்டவமாடுகிறது.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

'மக்கள் மனதால் பண்படாவிட்டால் சமயத்தினால் பயனில்லை' என்ற பேரூர் ஆதீனத்தின் கருத்தும், 'எந்த ரூபத்திலும் வன்முறை எண்ணம் வந்து விடக் கூடாது என ஒவ்வொரு முஸ்லீமும் அல்லாவிடம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறான்; மேலும் எங்களின் ஐந்து நேரத் தொழுகையும் அதுவே' என்ற அபுபக்கர் பாகவியின் கருத்தும் அனைவரின் அமைதி வாழ்வுக்கு அஸ்திவாரம் இடுகின்றன.
பொறையாறு, கங்கா கணேசன்.

அரசாங்க மருத்துவமனை என்றாலே அசுத்தமாகவோ அசிங்கமாகவோ இருக்கும் என்பதற்கு நேர்மாறான எடுத்துக்காட்டாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை விளங்குவது வரப்பிரசாதம்தான். குழந்தைகளின் இதய நோய்களுக்கு இலவச சிகிச்சை போன்ற தகவல்கள் பெரிதும் ஆறுதலாக உள்ளன.
திருவண்ணாமலை, ஆர். ராமசாமி.

கணவன் மனைவியிடையே புரிந்து கொள்ளல் என்ற குணம் எவ்விதத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதற்கு அழகிய எடுத்துக்காட்டாய் எழுதப்பட்டிருந்த 'இல்லத்தரசி' தொடர், சீதா ரவிக்கு மேலும் பெருமையளிக்கும் தொடராகும்!
மதுரை, சு. இந்துமதி.

'அறுவைச் சிகிச்சை' கதை படித்தவுடன் நெஞ்சு பொறுக்குதில்லையே என்ற பாரதியின் வரிகள்தான் நினைவுக்கு வந்தன.
சென்னை - 4, சீனு. சந்திரா.

ராமர் பிள்ளையின் மூலிகை எரிபொருள் விஞ்ஞானரீதியாக இன்னமும் ஏற்கப்படவில்லை. இந்நிலையில் பெயர் சுவாரஸ்யத்துக்காக ராவணன் தயாரித்த மூலிகை பெட்ரோல் என்று ஒரு நிகழ்ச்சி நடத்தி தேர்முக வர்ணனையைக் கல்கி தர வேண்டுமா?!
ஸ்ரீரங்கம், டி.ஆர். ராஜகோபாலன்.

வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS

26, Ranganathan Street, IInd Floor, T. Nagar, Madras - 600 017.

Phone: 4340224/4340210/-4342667. Fax: 044-2344333

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesdebuilders.com

கொஞ்ச நாளா ஒரு நூதனமான அன்புத் தொல்லைல சிக்கிட்டு இருக்கேன். என் போட்டோவை பப்ளிஷ் பண்ணச் சொல்லி சில வாசகர்கள் (முக்கியமா ஈரோடு வேலாயுதம், செகந்திராபாத் பத்மா, பொன்மலை ஸ்ரீபிருந்தா) கையில போஸ்ட் கார்ட் கிடைக்கறப்பவெல்லாம் எழுதி எழுதிக் கேட்டுட்டு இருக்காங்க. எனக்கொண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை. But, சிம்ரன், தேவயானி, ரம்பா ரசிகர்களெல்லாம் அவங்க மன்றத்துலேருந்து விலகிடற அபாயம் இருக்கு. வீணா எதுக்குப் பெண் பாவம்? கார்டூனிஸ்ட் நடனம் என்னை நல்லாவே வரைஞ்சிட்டிருக்கார். I think that's enough.

இது தொடர்பா ஒரு சம்பவம் குறிப்பிடலாம்னு தோணுது.

எட்டயபுரத்துல பாரதி விழா கொண்டாடிட்டிருந்தாங்களாம். ஒரு லட்சம் பேர் கூடியிருக்க, மேடைக்குப் போக வேண்டிய முக்கியமான ஒரு நபர் கூட்டத்தை நீந்திப் போக முடியாம தவிச்சிட்டு இருந்தார்.

“ஐயா, சாமி! நான் மேடைக்குப் போகணும். கொஞ்சம் வழி விடுங்க”ன்னு கேட்டுப் பார்த்திருக்கார்.

மக்கள், அவர் ஜிப்பால பேட்ஜ் இல்லாததால, இவர் பேச்சாளர் இல்லை; சும்மா புருடா விடறார்னு நினைச்சுட்டாங்க.

கோஷ்டி

“ஒண்ணு, நீங்க பேச்சாளர்ங்கறதுக்கு அடையாளம் காட்டுங்க. அல்லது விழா அமைப்பாளர் கல்கியையாவது வந்து சொல்லச் சொல்லுங்க. ரெண்டுமில்லாம நீங்க உள்ள நுழைய முடியாது”ன்னு ஒரு கோஷ்டி 144 போட்டுடுச்சாம்.

கல்கி வந்து அடையாளம் சொல்றதாவது? அவரேதான் சாட்சாத் கல்கி!

தன் எழுத்து மூலமா எல்லா தமிழருக்கும் பரிச்சயமாகி இருந்தவர் அது வரைக்கும் ஒரு தடவை கூடத் தம் போட்டோவை பப்ளிஷ் பண்ணிக்கலை!

ரீஸன்டா வெளிவந்திருக்கும் பகீரதனோட ‘கல்கி நினைவுகள்’ல (வானதி வெளியீடு) இதைப் படிச்சேன். கொஞ்ச நேரம் வேற ஒண்ணுமே பண்ண முடியலை. ஃபைவ்-பை-செவன் சைஸ்ல நூறு கலர் போட்டோஸை ரெடியா வெச்சிக்கிட்டு, எப்ப சான்ஸ் வரும்; தள்ளி விடலாம்னு காத்துட்டிருக்கற சில ரைட்டர்ஸை எனக்கே தெரியும். இதைப் படிச்சப்போ, அசந்தர்ப்பமா அவங்க ஞாபகம் வந்ததைத் தவிர்க்க முடியலை.

* * *

சிறுகதை விரும்பிகளுக்கு ஒரு நல்ல கலெக்ஷனை ரெகமண்ட் பண்ண விரும்பறேன். ‘பெருங்கூட்டத்தில் ஒருவன்’. (இதுல பல கதைகள் கல்கில வந்தவை.)

சிறுகதைங்கறது பொதுவா சில மாறுபட்ட சம்பவங்களை அடிப்படையா வெச்சி பின்னப்படற விஷயம். But, இதுல ஆர். வெங்கடேஷ் மாறுபட்ட கேரக்டர்களை முன்னிலைப்படுத்தி செஞ்சிருக்கார். புஸ்தகம் படிக்கற ஆர்வமுள்ள



ஒருத்தன் புஸ்தக வியாபாரி ஆறான். சக்திமான் இமேஜ் ஒண்ணுமில்லாத ஒரு சாதா குடிமகன் பெண்டாட்டிக்காகத் தெருச் சண்டை போட றான். இரங்கல் கட்டுரை எழுதித் தர்ற எழுத் தாளர், முதலாளிக்கு 'எல்லாமாகவும்' இருக்கற பொண்ணு - இப்படி வண்டி வண்டியா கேரக் டர்ஸ். எல்லாருமே நமக்குத் தெரிஞ்சவங்களா கவும் சமயத்துல (சில பர்ஸன்டேஜ்) நாமேவா கவும் தெரியற அதிசயம் அநேகமா எல்லா கதை கள்லேயும் இருக்கு. எந்த ஒரு வாசகனும் அனுத் துக்க முடியாத லாங்வேஜ், ஆசிரியரோட பெரிய ப்ளஸ். அட்டைப்படமா போட்டிருக் கற (மண்டையைப் பிச்சுக்க வைக்கும்) மாடர்ன் ஆர்ட்டைப் பார்த்து பயந்துடாம உள்ள போனா நல்லாவே என்ஜாய் பண்ண முடியும். (ராயப்பேட்டை மதி நிலையம் வெளியீடு.)

* * *

(யோசிக்காமல்) இடங்களை நிரப்புங்கள்!

ஆம்னி பஸ்ல ஒரு இருநூறு கிலோ மீட்டர்கள் சமீபத்துல போக வேண்டி இருந்த துல ரெண்டு தமிழ்ப் படங்கள் பார்க்க வேண் டியதாயிடுச்சு. நல்ல, சுத்தமான ஸிடி ப்ரிண்ட். கண்ணெதிரே தோன்றினாள், என் உயிர் நீதானே.

முழு ட்ரெஸ்ல சிம்ரனைக் காட்டின ஒரே காரணத்துக் காகவே க.எ.தோ. டைரக்ட ருக்கு யாராவது ஒரு பாராட்டு விழா நடத்தலாம். மத்தப்படி இந்தப் படம் ஏன் ஓடுதுங்கறதுக்கு என்னால காரணம் கண்டுபிடிக்க முடியலை. நட்பா? காதலா?ன்னு தினத்தந்தில டெய்லி கொட்டை எழுத்துல விளம்பரம் வருது. பெரிய எதிர்பார்ப்புக்குத் தீனி போட படத்தில் எதுவும் இல்லை. Usual filmதான்.

'என் உயிர் நீதானே' - பிரபு படம். தேவ யானி தனக்குன்னு ஒரு அப்பாவிப் பெண் இமேஜ் ஏற்படுத்திக்கப் படத்துக்குப் படம் ட்ரை பண்ணிட்டிருக்கறதை கவனிக்கிறேன். பத்து நிமிஷமானா அந்த ஸ்டைல் அலுப் பாயிடுது. கொஞ்சம் மாத்தி முயற்சி பண்ணிப் பார்க்கலாம்.

கீழே சில டயலாக்ஸ் தரேன். இதுக்கு அடுத்த டயலாக் என்னவா இருக்கும்னு கரெக்டா சொல்லிடுவீங்கன்னு நினைக்கறேன். கடந்த ஒரு வருஷத்துல நான் பார்த்த எல்லா படங்கள்லேயும் இந்த வசனங்கள் இருந்தன:

1. "என்ன உளர்றே?"
"..............................." (கோடிட்ட இடத்தை நிரப்பவும்.)

2. "நிஜமா என்னை விரும்பறீங்களா?"
"..............................."

3. "நீ இப்படிப் பண்ணுவேன்னு நான் கனவுல கூட எதிர்பார்க்கலை."
"..............................."

4. "சீ. நீயெல்லாம் ஒரு மனுஷனா?"
"..............................."

5. "என்னை நம்புங்க! என்னை நம்புங்க!"
"..............................."

(கோடிட்ட இடத்தை யோசிக்காம சரியாக நிரப்பி, போஸ்ட் கார்டில் அனுப்பினால், 'மானசிகமாக' ஒரு வெங்காயம் பரிசு.)

* * *

ரெண்டு மூணு வாரத்துக்கு முன்னால எழுதியிருந்த எண்டமூரி - சுசிலா கனகதுர்க்கா விவகாரத்துக்கு ஒரு ஃபீட் பேக்.

எண்டமூரியோட சமீபத்திய மொழி பெயர்ப் பாளர் கௌரி கிருபா நந்தன் எழுதியிருக்கார்.

எண்டமூரி எழுதின நாவல்கள் மொத்தமே அம்பதுன்னா, அவர் பெயர்ல தமிழ்ல வந்திருக்கற நாவல்களோட எண்ணிக்கை எண்பதுக்கு மேல இருக்குமாம்!

சர்ச்சைக்குள்ளான (ஹிண்டுல ரெவ்யூ வந்து) நாவலோட பேர் 'ஜீவனதரங்காலு'. இதை உண்மைல எழுதியவர் யத்தனபூடி சுலோசனா ராணி.

இதை எண்டமூரியோடதுன்னு சொல்லி மேடம் சுசிலா ட்ரான்ஸ்லேட் பண்ணி, புத்த கமா வந்தது ஒரு பக்கம் இருக்க, இந்த விஷ யமே தெரியாம கௌரி கிருபாநந்தன், ஒரி ஜினல் Authorகிட்ட முறைப்படி பர்மிஷன் வாங்கி இதை 'சங்கமம்'ங்கற பேர்ல தமிழ்ல கொண்டு வந்திருக்கார்! ரெண்டு மொழி பெயர்ப்புகளும் ஏக காலத்துல மார்க்கெட் டுக்கு வந்தப்பதான் விஷயம் வெடிச்சிருக்கு.

Any how. இந்த விவகாரத்தை வெச்சே யாராவது நாவல் எழுதலாம் போல இருக்கு.

— சுமி

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

வடிவுடன் வேதம் நித்தியமாக இருக்கிறதா? சப்த வடிவிலேயே அது வடிவுடன் இருக்கிறது. நான்கு வேதங்களையும் உச்சாரணம் பண்ணுகிறபோது சப்த ரூபத்தில் அவற்றுக்கு வடிவம் இருப்பதைப் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல... கால வெள்ளோட்டத்திலும் வேதம் நிச்சயமாக இருக்கிறது. ஒன்று சொல்லப்பட, அதை இன்னொருவர் கேட்டு, முன்பு எப்படிச் சொல்லப்பட்டதோ அப்படியே சொல்லப்படுகிறது வேதம். நாம் மாற்றிச் சொல்லக் கூடாது.

ஓரிடத்தில் வேதத்தில் சூர்ய: என்று வருகிறது என வைத்துக் கொள்வோம். 'அதை எடுத்துவிட்டு அதே அர்த்தமுடைய 'மார்த்தாண்ட' என்று போட்டுக் கொண்டால் என்ன...? இரண்டும் ஒன்றுதானே....?' என்று மாற்றி விடலாமா?

அப்படி மாற்றினால் போச்சு! சந்தியும் சேராது. ஸ்வரமும் சேராது. அதிலே என்ன இருக்கிறதோ அதைத்தான் சொல்ல வேண்டும்.

சில மந்திரங்களை உச்சாரணம் பண்ண வேண்டுமானால் அதற்கு ஸ்தானம் நாபி. நாபியிலிருந்து உச்சாரணம் பண்ண வேண்டும். நாபியைச் சுற்றி சில தேவதைகள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் திருப்தி அடைகிறார்கள். சரியாக உச்சாரணம் பண்ணாவிட்டால் அந்த தேவதைகளுக்குத் திருப்தி ஏற்படாது. சில சப்தங்கள் கண்டத்திலிருந்தே (தொண்டை) வரும். வேறு சில, வாயிலிருந்தே வரும். சில சப்தங்கள் வாயிலிருந்து கூட வராது. வெறுமே உதட்டிலிருந்தே வரும். அதனால் வேத உச்சாரணத்தின்போது த்வனி ஸ்தானத்தைத் தெரிந்து சொல்ல வேண்டும். எத்தனை மாத்திரை என்று தெரிந்து சொல்ல வேண்டும். விராம காலமும் சரியாக இருக்க வேண்டும்.



குறையொன்றுமில்லை

இதற்கெல்லாம் கட்டுப்பட்டு உச்சாரணம் பண்ணினால், அதற்கிருக்கக் கூடிய பலனைச் சொல்லவே முடியாது. எப்படி சங்கீதத்திலே ராகம் மாறாமல் பாட வேண்டுமோ அப்படித்தான் வேதோச்சாரணமும். பல ராகங்களைச் சேர்த்தால் நன்றாயிருக்குமா? அந்தந்த ராகத்தில் அந்தந்த கிருதியைப் பாடினால்தானே நன்றாக இருக்கும்! அதே போல்தான் அந்தந்த ஸ்வரத்திலும் த்வனியிலும் காலத்துக்குள்ளும் அடக்கி வேதத்தைச் சொல்ல வேண்டும். இல்லையானால் அந்த சப்தம் அபசப்தமாக அமைந்து விடும். அபஸ்வரமாக உச்சரித்த அந்த சப்தமே வஜ்ராயுதமாக மாறிப் போய்விடுமாம். வஜ்ராயுதமாக மாறி, சொன்னவர்களையும் கேட்டவர்களையும் சித்திரவதை பண்ணுமாம்!


ஆகையினாலே, வேதோச்சாரணம் என்பது பெரிய தபஸ்.

சப்த வடிவிலேயும், கால வெள்ளோட்டத்திலேயும் வேதம் நித்தியமாயிருக்கிறது என்பதைச் சொல்ல வந்து உச்சாரண முக்கியத்துவத்தைச் சொன்னேன். அதற்கு மேலே பகவானுடைய மூச்சுக் காற்றாக இருப்பதனாலே இயற்கையிலேயே நித்யமாயிருக்கிறது வேதம். வேதம் ஒன்றுக்குத்தான் நித்யத்வம் என்கிற குணம்.

அடுத்ததாக அபௌருஷேயத்வம் என்கிற குணம்.

குமாரசம்பவம் இருக்கிறது. யார் இயற்றினார்கள் என்று கேட்டால், காளிதாஸன் என்று சொல்லலாம். ஹம்ச சந்தேசம் சுவாமி தேசிகன் இயற்றினார். ஸௌந்தர்ய லஹரி – ஆதி சங்கரர் இயற்றியது. இப்படி ஒவ்வொரு கிரந்தத்தையும் எடுத்துக் கொண்டோமானால் கிரந்த கர்த்தா இருக்கிறார். ஆனால் வேதத்தை யாராவது இயற்றினார்களா என்றால், யாரும் இயற்றவில்லை. அபௌருஷேயத்வம் என்கிற குணம் வேதத்துக்கு இருக்கிறது. ஏனென்றால் ஒரு புருஷ கிருத்யமன்று அது – ஒரு புருஷனால் இயற்றப்பட்டது அன்று.

புருஷன் என்றால் பகவான் விஷ்ணு. அபௌருஷத்வம் என்றால் பகவானாலேயும் இயற்றப்படாதது வேதம் என்று அர்த்தம். மூச்சுக் காற்றாக அவன் கூடவே இருப்பதால் அவனாலும் இயற்



அருள்வாக்கு

நாமே நேரே ஈச்வரனிடம் ப்ரார்த்தித்துக் கொண்டால் அவன் நமக்குச் செய்கிற அநுக்ரஹத்தைவிட ஜாஸ்தியாகவே நாம் அவனை ப்ரார்த்திக்காமல் குருவையே ப்ரார்த்திக்கும்போது, அந்த குருவின் மூலம் பெற்று விடலாம்! எப்படி என்கிறீர்களா? நாமே நேராக ஈச்வரனிடம் ப்ரார்த்திக்கிறோம் என்றால், நம்முடைய ப்ரார்த்தனா சக்தி எவ்வளவு? ரொம்பக் கொஞ்சந்தான். மனஸின் ஆழத்திலிருந்து தீவிரமாகப் பிரார்த்திக்கவே நமக்குத் தெரியாது. அதோடு நமக்கேதான் நாம் பிரார்த்தித்துக் கொள்கிறோம். நம்முடைய ஸொந்த நலனையேதான் ஈச்வரனிடம் வேண்டுகிறோம். இதற்கு அவன் செவி சாய்க்க மாட்டானென்றில்லை. ஆனாலும் நம்முடைய அல்ப ப்ரார்த்தனா பலத்தில் நமக்காகவே நாம் வேண்டிக் கொள்வதற்கு அவன் பெரிசாக எப்படி ஒரு பலன் தருவான்? ஆனால் நாம் குருவே எல்லாம் என்று இருந்து விட்டால், 'அவர் இந்தக் குழந்தைக்காக நாம்தான் ப்ரார்த்திச்சுக்கணும்' என்று ஈச்வரனிடம் நம் சார்பில் ப்ரார்த்தனை செய்வார். அவர் நம்மைப் போல ஈச்வரனை நேரில் தெரிந்து கொள்ளாதவரில்லை. அவருடைய ப்ரார்த்தனா சக்தி மிகவும் பலமானது. நமக்கு எட்டாக்கையனாக இருக்கும் ஈச்வரனுக்கு ஸமீபத்திலேயே இருப்பவர் அவர். தன்னுடைய வலுவாய்ந்த பிரார்த்தனா சக்தியோடு அவர் நமக்காக அவனிடம் வேண்டிக் கொண்டு, எடுத்துச் சொல்லி கேட்டுக் கொள்கிறபோது அவன் அதை நிச்சயம் கேட்கத்தானே கேட்பான்? நாம் எக்கேடு கெட்டுப் போனாலும் குருவுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. அப்படியிருந்தும் அவர் பரம கருணையோடு நமக்கு உபதேசம் பண்ணி, நம் அழுக்கைப் போக்குவதற்காகப் பாடுபட்டு, ஸ்வய நலமே கொஞ்சங்கூடக் கலக்காமல் நம் பொருட்டாகவே ஈச்வரனிடம் வேண்டிக் கொள்கிறாரென்றால் அதற்கு வால்யூ ரொம்ப ஜாஸ்திதானே? நம்முடைய ஸாதனை, ப்ரார்த்தனை ஆகியவற்றுக்காக ஈச்வரன் ஏதோ கால் பங்கு, வீசம் பங்கு அநுக்ரஹம் பண்ணுவானென்றால், நமக்காக குரு ப்ரார்த்திக்கும்போது முழுப்பங்கும் பண்ணிவிடுவான். லௌகிகத்திலேயே

றப்படாதது. இதை நாம் உணர வேண்டும் என்பதால்தான் எழுதாக் கிளவி என்று பெயர் வேதத்துக்கு. எழுத்தில் எழுதி அதை நாம் படித்துவிட முடியாது! ஒருத்தர் சொல்ல, அவர் சொன்னது போலவே நாமும் சொல்வதற்கு ஒலியை எத்தனை நேரம் இழுக்க வேண்டும் என்பது பிடிபடவே ரொம்ப நாளாகும். பல நாள் அதை அப்பியாசம் பண்ண வேண்டும்.

ஆகையினாலே, சிரமப்பட்டு வேதத்தை சம்பாதிப்பதனாலே, ஸ்வரபந்தத்தோடு அது அமைந்திருப்பதனால், ஒலைபடா பிரமாண மாயிருக்கறதாலே, ச்ருதி: என்று பெயரானதனாலே, கேட்டே வரவேண்டியதானதாலே, ஆதியிலே கேட்கப்பட்டதானதாலே வேதத்துக்கு அபௌருஷேத்வம் என்ற குணம்; உயர்ந்த குணம்.

அதற்கடுத்து, அபிசின்னபரம்பராகதர்வம் – அறுபடாமல் வரக்கூடிய தொடர்பை உடையது.

வால்மீகி, அசோக வனத்திலே இருக்கிற சீதையைப் பார்த்து வர்ணிக்கிறார் :

'வேத ஸ்ருதிக்கு நஷ்டம் ஏற்பட்ட மாதிரி சீதை நஷ்டப்பட்டிருக்கிறாள்' என்று வர்ணிக்கிறார்.

அந்த நஷ்டம் தாற்காலிகமானது.

பரமாத்மா வந்து இலங்கையை முறியடித்து, ராவணனை அழித்து அந்த சீதையை மீட்டு உத்தமமான பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டான். ஆகவே இப்போது சீதை நஷ்டப்பட்ட மாதிரி இருந்தாலும் நாளைக்கு உயர்ந்த ரீதியிலே விளங்கப் போகிறாள்.

ஒரு பாத்திரத்திலேயிருந்து ஜலத்தை விடுகிறோம். நன்றாகக் கையை தாராளமாகப் பிரித்து விட்டால் பெருந்தாரையாக ஜலம் விழுகிறது. கொஞ்சம் கையைக் குவித்து, குறைத்தோமானால் தாரையும் சின்னதாகிறது. அந்த மாதிரிதான் வேதாத்யயனம் பண்ணக்கூடியவர்கள் குறையலாம்... ஆனால் வேதம் நஷ்டமாகுமா என்றால், ஆகாது!

பூலோகத்திலே வேதத்தைச் சொல்லவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். தேவலோகத்திலே சொல்லிக் கொண்டிருப்பார்கள். இங்கே சொல்லாவிட்டால், வேறு இடத்திலே சொல்லுவார்கள். அறுபடாத தொடர்பு உடையதாக அது இருந்து கொண்டேயிருக்கும்.

அதற்கடுத்து ஒரு குணமும் உண்டு வேதத்துக்கு. இது பெரிய குணம். அந்தம் என்பதே இல்லை அதற்கு; அனந்தம்தான்! அந்தம் என்றால் முடிவு.



பார்க்கிறோமோல்லியோ? கவர்னர், மந்திரி மாதிரி ஒருவரால் நமக்கு ஒரு கார்யம் நடக்குமென்றால் நாமே அவரிடம் போய் நிற்க முடியுமா? நமக்குப் பேட்டி கிடைக்குமா? அவரிடம் சாய் கால் உள்ளவராக இருக்கிற நமக்குத் தெரிந்த ஒருவரிடம் நாம் போய் முறையிட்டாலே போதுமானதாக இருக்கிறதல்லவா? இவருடைய சிபாரிசுக்காகவே மந்திரி நம்மைப் பார்க்கக் கூடப் பார்க்காமல் நமக்கு வேண்டிய கார்யம் ஆவதற்கு உத்தரவு போட்டு விடுகிறாரல்லவா?

ஈச்வரனிடம் நாம் போக வேண்டாம். நாம் போய் நடத்திக் கொள்வதைவிட இன்னம் நூறு பங்கு நன்றாக நமக்கு அவனிடம் சொல்லி நடத்திக் கொடுப்பதற்காக இருக்கிற குருவிடம் போய் அவரிடமே முறையிட்டு விட்டால் போதும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

காடக ஸ்ருதியிலே வேதமே சொல்கிறது – முடிவில்லாதது வேதம் என்று!

அப்படியிருக்கிறபோது வேதத்தை நான் அத்யயனம் பண்ணி முடித்து விட்டேன் என்று சொல்ல முடியுமா? வேதத்துக்குத் தான் முடிவே இல்லையே! இதற்கொரு சம்பவம் சொல்லலாம்.

பரத்வாஜ கோத்திரத்துக்கு ஒரு ஏற்றமுண்டு. மட்டபள்ளி லக்ஷ்மி நரசிம்ஹனை சாஷாத்கரித்தவர் பரத்வாஜ மஹரிஷி.

இந்த பரத்வாஜ மஹரிஷி மாதிரி வேதத்திலே சிரமப்பட்டவர்கள் யாருமேயில்லை. அவர் என்ன பண்ணினார்? ஏழு வயதிலே உபநயனம் ஆனவுடனே அத்யயனம் பண்ண ஆரம்பித்தார். பண்ணிக் கொண்டேயிருந்தார் - தொண்ணூற்றியாறு வயதாகி விட்டது. தொண்ணூற்றியாறு வயதானாலும் வேதத்தை அவரால் முடிக்க முடியவில்லை. பார்த்தார்...

வாஜ்பேய மகா யக்ஞத்திலே வரக் கூடிய ஒரு மந்திரம் பரத்வாஜர் செவியிலே ஒலித்தது:

ஒரு மனிதனுடைய ஆயுளை நூற்றியிருபது என்று நிர்ணயம் பண்ணுகிறது அந்த மந்திரம். அதனால்தான் சஷ்டியப்த பூர்த்தி என்று அறுபதாவது வயதில் பண்ணிக் கொள்கிறார்கள். அறுபது வயது ஆனவுடனேயே நிறைவு விழா எதற்கு? 'இன்னும் அறுபது வயது நீ வாழ வேண்டும். கடந்த 60 வயது எப்படிப் போனாலும் பரவாயில்லை. மேற்கொண்டாவது ஜாக்கிரதையாக இரு...' என்பதைக் காட்டவே இடையிலே சஷ்டியப்தபூர்த்தி என்கிற காம்யமான கர்மா, விசேஷமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியாக 120 என்று மனிதனின் ஆயுளை நிர்ணயம் பண்ணுகிறது வேதம்.

பரத்வாஜர் பார்த்தார். '96 வயது ஆகிப் போயிருந்தே, வேதத்தை முடிக்க முடியவில்லையே...' என்று கவலையில் வேத அத்யயனத்தை நிறுத்திவிட்டு இந்திரனைக் குறித்துத் தபஸ் பண்ணினார்.

இந்திரன் பிரத்யக்ஷமாகினான். "உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"இன்னும் எனக்கு 120 வயது கொடுத்தால் ரொம்ப சந்தோஷமாக இருக்கும்..."

"ததாஸ்து!" என்றான் இந்திரன்.

இரண்டாவது நூற்றியிருபது வயது கிடைத்துவிட்டது அவருக்கு. பரத்வாஜருக்கு ஒரே உற்சாகம், அந்த வேத அத்யயனம் பண்ணுவதில் எவ்வளவு உற்சாகம் பாருங்கள்.

ரொம்ப சிரமப்பட்டு வேதத்தைக் கற்றுக் கொண்டு வருகிறார். அப்படியும் முடிக்க முடியவில்லை அவராலே. மறுபடியும் இந்திரனைக் குறித்து தபஸ் பண்ணினார். மறுபடியும் அவன் தோன்றிக் கேட்டான், "என்ன வேண்டும்?"

மறுபடியும், "எனக்கு 120 வயது வேண்டும்" என்றார்.

மூன்றாவது 120 வயதும் கிடைத்தது.

அத்யயனம் பண்ணிக் கொண்டேயிருந்தார். அதிலேயும் மூன்றாவது ஆயுளிலேயும் 96 வயது ஆகி விட்டது.

இந்திரன் பார்த்தான். 'இவர் நான்காவது 120 வயதுக்காகத் தபஸ் பண்ணுவாரோ என்னவோ, அதற்குள்ளே புறப்பட்டுப் போய் விடுவோம் அவனிடம்...' என்று அவனே கிளம்பி வந்து விட்டதாக வேதம் ரொம்ப அழகாகச் சொல்கிறது.

வந்து அவர் எதிரில் நின்று; "பரத்வாஜா! உமக்கு நான்காவது ஆயுளை நான் கொடுத்தால், அந்த நான்காவது ஆயுளிலே நீர் என்ன பண்ண வேண்டும் என்று நினைக்கிறீர்?"

பரத்வாஜர் என்ன பதில் சொல்லியிருப்பார்...? எதிர்பார்த்த பதிலைத்தான் சொன்னார். இந்திரன் அவருக்குச் சொன்ன பதில் தான் எதிர்பாராததாகயிருந்தது.

(தொடரும்)



புதியதோர் உலகம் செய்வோம்........

கொடிய எய்ட்ஸ் எனும் நோயைத் தடுப்போம்.

எதையும் செய்து முடிக்கும்
ஆற்றல் கொண்ட
இளைய சமுதாயமே -
உலகை அச்சுறுத்தி வருகிற
எய்ட்ஸை தடுத்து
புதியதோர் உலகை
உருவாக்க
உலக எய்ட்ஸ்
நாளையொட்டி
அனைவரும்
சபதம் ஏற்போம்.



இளைய சக்தி இணையற்ற சக்தி

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008
தொலைபேசி எண் : 044-8255467

TNSACS/2004/98/ELEGANT

அத்தனை மாணவ மாணவிகளும், மதிய உணவு இடைவேளை எப்போது வரும் என்று ஆவலாகக் காத்திருந்தார்கள். மணியடித்தவுடன், ஹேய்...



பத்மா சேஷாத்ரிக்கு வந்த பஞ்சாப்!

என்று உற்சாகக் குரல். எல்லோரும் பேப்பர் பிளேட்டை எடுத்துத் தங்கள் முன்பு வைத்துக் கொள்ள, இரண்டு, மூன்று ஆசிரியைகள் உணவு பறிமாறத் தொடங்கினார்கள். அன்றைய மெனு, ரொம்ப வித்தியாசமானது. ஆகவே, பறிமாறுகிற போது, டீச்சர், 'இது ஆலு மேதி பராத்தா, இது தால் மக்கானி. இது ராஜ்மா போட்ட பன்னீர் மசாலா. இது பூந்தி ரய்தா...' என்று ஒவ்வொரு ஐட்டத்தையும் பெயர் சொல்லி அது எதைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகிறது என்று பாடமே நடத்த வேண்டியிருந்தது!

இந்த 'லஞ்ச் டைம் லெஸன்' அனுபவித்தவர்கள் சென்னை பத்மா சேஷாத்ரி பள்ளிக் கூடத்தின் நான்காம் வகுப்பு மாணவர்கள்.

"இவர்களுக்குப் பாடத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைப் பற்றியும் கற்றுத் தருகிறோம். வெறுமனே அவற்றைப் புத்தகத்தில் படிப்பதைவிட, நடைமுறையில் ஏதாவது விளக்கினால் நன்றாக இருக்குமே என்ற எண்ணத்தில்தான் நாங்கள் இப்படிச் செய்கிறோம்" என்கிறார் பள்ளியின் துணைத் தலைமை ஆசிரியர் புஷ்பா பாரிஜாதம்.

''வெறும் உணவுடன் நின்று விடவில்லை. பஞ்சாபி



• பரிமாறியபடியே பாடம்



யரின் பாரம்பரிய உடை அணிந்து சில மாணவ, மாணவிகள் வகுப்புக்கு வந்துள்ளனர். பொருத்தமான படங்களைச் சேகரித்து ஒட்டி, அதன் மூலம் பஞ்சாபின் முக்கியப் பண்டிகைகள் தொடங்கி, விளை பொருட்கள், தொழில்கள் எனப் பல விஷயங்களையும் விளக்கியிருக்கிறோம்'' என்கிறார் நான்காம் வகுப்பு ஆசிரியை சபரி.

"நன்றாக நடனமாடத் தெரிந்த மாணவ, மாணவிகள் ஒரு டஜன் பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பஞ்சாபின் பாரம்பரிய நடனமான "பாங்க்ரா' ஆடப் பயிற்சியளித்து, மாணவர்கள் முன்பு ஆடிக் காட்டவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்'' என்கிறார் டான்ஸ் டீச்சர் கல்யாணி.

சொன்ன கையோடு, டேப் ரெக்கார்டரில் தலர் மெஹந்தியின் கேஸட் ஒன்றைப் போட, மாணவ, மாணவிகள் உற்சாகமாக ஆட ஆரம்பித்து விட்டார்கள்!

''பஞ்சாப் மட்டுமில்லை. கேரளா, ஆந்திரா, கர்நாடகா என்று பல்வேறு இந்திய மாநிலங்களையும் இப்படி உணவு வகை, பாரம்பரிய உடை, நடனம் மூலம் மாணவர்களுக்கு மிக அருகே கொண்டு வந்திருக்கிறோம்'' என்கிறார்கள் ஹரிணி, சந்திரா என்கிற ஆசிரியைகள்.

வெஜிடபிள் புலாவ் தொடங்கி, கேரட் அல்வா, குலோப் ஜாமூன், லஸ்ஸி வரை விதம் விதமான உணவு வகைகளும் மாணவர்கள் தத்தம் வீடுகளில் தயாரித்துக் கொண்டு வந்தவைதானாம்.

"இதற்கு குழந்தைகளின் அம்மாக்கள் அளித்த ஒத்துழைப்பு அபாரமானது! நாங்கள் கொடுத்த பட்டியலிலிருந்து ஒரு ஐட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சுமார் பத்து பேருக்கு ஆகும்படி தயார் செய்து அனுப்பினர், ஒவ்வொரு அம்மாவும். குறிப்பிட்ட அந்த உணவு வகை சமைக்கத் தெரியாதவர்கள், செய்முறையைத் தேடிப் பிடித்துக் கற்றுக் கொண்டு செய்தனுப்பினார்கள்!'' என்கிறார் புஷ்பா மிஸ்!

பெற்றோர்களையும் 'படிக்க'ச் செய்கிறது பத்மா சேஷாத்ரி!

— பாரதி

படங்கள் : ஸ்ரீஹரி

ஈவ் டீசிங் — புதுவகை!

பெங்களூரில் டாக்டர் வாணிஸ்ரீ, டவுன் பஸ் என நினைத்து ஊழியர்களை ஏற்றிச் செல்லும் பஸ்ஸில் தவறுதலாக ஏறி விட்டார். பஸ்ஸில் ஏறிய பின்தான் தெரியவந்தது, அது பெங்களூர் சிட்டி பஸ் ஊழியர்களை மட்டும் ஏற்றிச் செல்ல வந்த ஸ்பெஷல் பஸ் என்று. அதில் அமர்ந்திருந்தவர்கள் அனைவருமே பஸ் ஊழியர்கள் என அறிந்தவுடன் பஸ்ஸை நிறுத்தச் சொல்லி டிரைவரிடம் கூறியிருக்கிறார். ஆனால் அவரோ சக ஊழியர்களுடன் சேர்ந்து கொண்டு கேலி செய்து திட்டியிருக்கிறார். சுமார் ஒன்றரைக் கிலோ மீட்டர் தூரம் வரை அந்தப் பெண்மணியை இறக்கி விடாமல் பேருந்தை ஓட்டியிருக்கிறார்.

வேறு வழியின்றி பஸ்ஸில் இருந்தபடியே ஏகமாகச் சத்தம் போட்டு அலற, அதைக் கேட்ட டிராபிக் போலீஸ் ஒருவர் பஸ்ஸை நிறுத்தி அந்தப் பெண்மணியை இறக்கி விட்டிருக்கிறார். இந்த விஷயம் பெங்களூர் நாளிதழ்களில் பிரசுரமாக, மறுநாளே பங்களூர் சிட்டி பஸ் நிர்வாகம் சம்பந்தப்பட்ட டிரைவரை சஸ்பெண்ட் செய்தது.

— ஆ. சண்முகசுந்தரம்

ஏன் கடவுளுக்கு நைவேத்தியம் காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷ மடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

ஆதாரம்: ஜீவப்ரஹமைத்ய வேதாந்த ரஹஸ்யம்

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20. போன்: 4915662, 4914213

சேர்த்துக் கொண்டிருந்தான்.

எங்கள் முறைக்குக் காத்து நிற்கையில்... நாங்கள் ஏற இருந்த படகிலிருந்து இறங்கியவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? சாட்சாத் எங்கள் டெபுடி சி.எம். கோபினாத் முண்டேயும், அவரது செயலாளர்களும்தான்.

'ஹா... இந்தியர்கள்' என்று முதல் சந்தோஷம்; அடுத்து, 'ஹையோ... மும்பைக்காரர்கள்' என்று அதிக மகிழ்ச்சி; கடைசியில் 'ஐயோ... தமிழர்கள்' (செயலாளர்கள் அனைவரும் தமிழ்) என்று பேரானந்தம்! முண்டே சளசளவென்று மராட்டியிலேயே பேச ஆரம்பித்து விட்டார்.

ஆனால் மரியா, வில்லித்தனமாய் எங்களை, "ப்ளீஸ், மன்னியுங்கள்; நேரமாகிறது, வாருங்கள்" என இழுத்துச் சென்று விட்டார்.



• தார்ரோடு போலவே தண்ணீர் சாலைகள் ஊரெங்கும் உண்டு!

நீலப் பட்டாடை கட்டி, நிலவென்னும் பொட்டு வைத்த அழகியை நாங்கள் ரசித்துக் கொண்டிருக்கையில்,

"வெனிஸின் அழகான, இளம் படகோட்டி இசைத்துக் கொண்டே, கோண்டோலாக்களில், இந்த ஊரின் கவர்ச்சிகளை உங்களுக்குச் சுற்றிக் காண்பிப்பார்" என்ற அறிவிப்புடன் மரியா, நான்கு நான்கு பேராக ஒரு படகில் ஏற்றி விட்டாள்.

ஸ்விட்ஜர்லாந்தில் கேபிள்காரர்களை கோண்டோலாக்கள் என்றார்கள்; இங்கே படகுகளுக்கு அந்தப் பெயர்!

"ஹௌ ரொமாண்டிக்!" என்றது ஓர் இளம் அமெரிக்க ஜோடி! "எங்களுக்கு தனி போட்" என்றார் கிழவர், கிழவியை நோக்கிக் கண்சிமிட்டியவாறே! ஸ்பானிஷ் இளைஞன் ஜப்பானியக் கிழவியை ஜோடி



• கோண்டோலாக்களில்

பாதுகாப்பாய்த் தாமும் அதே படகில் ஏறிக் கொண்டு விட்டார். 'ஹூம்... துணை முதல்வருடன் ஒரு ஃபோட்டோ கூட எடுக்க விடவில்லையே' என்று நாங்கள் குறைபட்டுக் கொள்ள, "கவலைப் படாதீர்கள்; இவர்களை விட அதிக

ஜெயஸ்ரீ ராஜ்

சுவாரஸ்யமான விஷயங்கள் தட்டுப்படும்; காமிராவுக்கு நிறைய வேலை கொடுக்கலாம்!" என்று சமாதானப்படுத்தினார்.


உண்மைதான்! படகுக்காரர்கள் மாற்றி மாற்றிப் பெரிய குரலெடுத்துப் பாட, வெண்ணிலா வானில் வர இருந்த வேளையில், எண்ணிலாக் கலைக் குவியல்கள் கண்ணில் மோத, கடலா வானா என்ற வித்தியாசம் தெரியாத நீலமயமான சூழலில், சிலுசிலுவென்ற காற்று வீச, படகில் பயணிப்பதென்பது, பரமானந்தம்தான்!

அவர்கள் பாடியதற்கு உண்மையில் என்ன பொருளோ? ஆனால் கிட்டத்தட்ட...

'மெடிட்டரேனியன் மிசை நிலவினிலே
வெனிஸ் நன்னாட்டிளம் ஆண்களுடனே
சுந்தர இத்தாலியில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடி வருவோம்...'

என்பதாக நாங்கள் அதை அர்த்தம் பண்ணிக் கொண்டோம். கைதட்டி, ஆரவாரித்து, "ஹா ஹா... வாவ்வா...!" என்று, பாடியவர்களை உற்சாகப்படுத்தினோம்.

கோண்டோலாவில் வந்திறங்கிய கோபிநாத் முண்டே!



நம்மூரில் தெருக்களில் இரண்டு புறமும் வீடுகளிருப்பது போல், அங்கே தண்ணீரில், இரண்டு பக்கமும் வீடுகள்! கதவைத் திறந்து கொண்டு நாம் ரோடில் இறங்குவது போல், அவர்கள் நீரில்தான் இறங்க வேண்டும்! நாம் காரோ, ஸ்கூட்டரோ சைக்கிளோ வைத்திருப்பது போல் அங்கே ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு படகு! – வாயிற் கதவு அல்லது தூணுடன் கட்டப்பட்டிருக்கிறது! பெரும்பாலான வீடுகளில், மனிதர்கள் அந்தப் படகை 'ரிப்பேர்' செய்து கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் சுவரில் சில கோடுகள் போட்டு, 1953, 69, 75, 88 என்றெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள் – அதாவது,

• இரு பக்கமும் வீடுகள் : நடுவில் 'நீர் வீதி'



''பொய்க் கணக்கு எழுதி தலைவர் மாட்டிக்கிட்டாரு.''

''எப்படி?''

''பாத யாத்திரை போனதுக்கு பெட்ரோல் செலவு இரண்டாயிரம்னு எழுதிட்டாரு.''

– பா. ஜெயக்குமார்

தண்ணீர் மட்டம், எந்தெந்த வருடங்களில், முந்தைய நிலைகளைக் காட்டிலும் உயர்ந்தது என்பது பற்றிய விவரங்கள்!

காஷ்மீரில் கூடப் படகுக்குள்தான் வீடுகள் உண்டு! இங்கே தண்ணீருக்குள் இவர்கள் எப்படி வீட்டைக் கட்டினார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது. பெரும்பாலும் ஒன்று அல்லது அபூர்வமாக இரண்டு மாடிகள். முதல் மாடியிலிருந்துதான் பெயிண்ட்டே அடித்திருக்கிறார்கள். கீழ் மட்டத்தில் பாசி படிந்த கற்கள். ஜன்னல்களிலிருந்து சிரித்த முகங்கள் எட்டிப் பார்த்துக் கையசைத்தன!

நம்மூரில் ஸ்கூல் பஸ் இருப்பது போல் இங்கே ஸ்கூல் போட்! எதிர்ப்பட்ட ஒரு 'போட்'டில் நிறைய குழந்தைகள்; ('இங்கே இரண்டு பள்ளிகள்' என்றார் மரியா).

அரைமணிக்கு மேலாக இந்த அழகிய, அதிசய உலகில் சஞ்சரித்து விட்டு, நிலத்தில் கால் பதித்தோம்.

நகரின் இதயப் பகுதியான 'சென் மார்க்கோ ஸ்கொயரை' அடைந்தோம். 'பியாஸா சென் மார்க்கோ'வின் புகழ்பெற்ற பைசண்டைன் சர்ச், வரிசையாக நிற்கும் 'பாஸில்லாக்கள்' எல்லாவற்றையும் கண்டு பிரமித்து, நெப்போலியன் இதை 'ஐரோப்பாவின் வரவேற்பறை' என்றானாம். இன்றளவும் இங்கே விடிய விடிய விருந்துகள் நடந்தவண்ணம் இருக்கின்றன.

வெனிஸ், கட்டடக் கலையில் ஏராளமான விருந்துகளை வாரி வழங்குகிறது. வெள்ளைச் சலவைக் கல்லாலான மேரி ஆஃப் நாஸரத் சர்ச் கொள்ளை அழகுதான்!

கட்டடங்களைச் சுற்றிக் காட்டி விளக்க ஓர் இத்தாலியப் பெண்மணி 'வழிகாட்டி'யாக நியமிக்கப்பட்டார். (வெளியூர் 'கைடு'களுக்கு இங்கே அனுமதியில்லை) மைக்கை வைத்துக் கொண்டு அவர் பேசிய அரைகுறை ஆங்கிலமும், செயிண்ட் மார்க் சர்ச்சில் ஒவ்வொரு தூணையும், சிலையையும், கதவையும் கிரேக்க நாட்டி லிருந்தும், கான்ஸ்டான்டினோப்பிளி லிருந்தும் கடத்திக் கொண்டு வந்ததாக அவர் கூறிய விளக்கமும் சிரிப்பை வரவழைக்க, இனி தாங்க முடியாது என்ற கட்டத்தில் கழன்று கொண்டு நாங்களாகவே சுற்றிப் பார்த்தோம். (கடைசி வரை 'கைடு'டன் சென்றது நாலே நாலு பேர்... ஓட முடியாத சீனியர் சிடிஸன்ஸ்?)

பிகாஸோ மியூசியத்தில் சில அற்புதமான செராமிக் பெயிண்டிங்குகளும், டேபஸ்ட்ரிகளும் கருத்தைக் கவர்ந்தன.

ஊரின் அழகைக் கண்டு எல்லோரும் 'கண் போட்டு' விடப் போகிறார்களே என்று ஒரு சின்ன திருஷ்டிப் பரிகாரம் – பழைய சிறைச்சாலைக்கும், டாஜஸ் பாலஸுக்குமிடைப்பட்ட கால்வாயின் குறுக்காகப் படர்ந்திருக்கும் 'பெருமூச்சுப் பாலம்' (Bridge of Sighs) பார்க்கச் சகிக்கவில்லை! அந்தக் காலத்துக் காதல் மன்னன் காஸனோவாவை இந்தச் சிறையிலடைக்க, இதே பாலத்தின் வழியாக அழைத்துச் சென்றார்களாம்.

கடைகளை எல்லாம் மறுபடியும் ஒரு நோட்டம் விட்டபின் வெனிஸின் வியத்தகு அழகுக்கு 'பை...பை' சொல்லி விட்டு, அன்றிரவு ஹோட்டல் வியன்னாவில் கடச்கட அரிசிச் சோறு சாப்பிட்டோம். மறுநாள் ரோமாபுரியை நோக்கிப் பயணம் செய்வதை நினைத்துக் கொண்டே தூங்கினோம்.

(தொடரும்)

தெரியுமா?



● உலகம் முழுவதிலும் ஐந்து வயதுக்குட்பட்ட இருபது கோடி குழந்தைகள் சரியான ஊட்டச் சத்து இல்லாமல் பல்வேறு நோய்களால் தாக்கப்படுகிறார்கள். இவர்களில் சுமார் 60 லட்சம் குழந்தைகள் வருடந்தோறும் இறந்து போகிறார்களாம்!

● கருவுற்றிருக்கும்போது ஏற்படும் ரத்த சோகை மற்றும் வேறு பல சிக்கல்கள் காரணமாக, வருடம் ஒன்றுக்குச் சுமார் ஆறு லட்சம் தாய்மார்கள் இறந்து போகிறார்கள்!

● வைட்டமின் 'ஏ' குறைவு காரணமாக சுமார் பத்து கோடி இளம் பிஞ்சுகள் பார்வைக் கோளாறால் உலகம் முழுவதிலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

● வயிற்றுப் போக்கு நோய் காரணமாக வருடம் ஒன்றுக்குச் சுமார் 25 லட்சம் குழந்தைகள் இறந்து போகிறார்கள்.

● உலகில் சுமார் 35 நாடுகளில் உள்ள பாதிக்கு மேற்பட்ட மக்களுக்கு உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கத் தேவையான மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை!

● தென்கிழக்கு ஆசியாவில் மட்டும் ஊட்டச்சத்துக் குறைவின் காரணமாக கருவுற்றிருக்கும் தாய்மார்களில் சுமார் 20 லட்சம் பேர் மாலைக்கண் நோயால் தாக்கப்படுகிறார்கள்.

● எய்ட்ஸ் நோய் கிருமி (HIV) தாக்கியதன் காரணமாக, உலகம் முழுவதும் மூன்று கோடி மக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை இழந்து தவிக்கிறார்கள்.

● வயிற்றில் உண்டாகும் புழுக்கள் மற்றும் குடல் சம்பந்தப்பட்ட நோய்களாய் வருடந்தோறும் சுமார் இரண்டு லட்சம் குழந்தைகள் இறந்து போகிறார்கள்! ○

— யூனிசெப் வெளியிட்டுள்ள 'உலகக் குழந்தைகளின் நிலை' என்ற புத்தகத்திலிருந்து: **ஆரெஸ்வி**

K-I-S-S என்றால் என்னவென்று அர்த்தம் தெரியாத, படிக்காத, அப்பாவி, கிராமத்து ஹீரோ. (பெயர் வேறு என்னவாக இருக்க முடியும்? ராமு) புதிதாக வரும் தாசில்தாரிணி சௌந்தர்யாவுடன் அவருக்கு ISI நட்பு. ஊரில் ஓர் அராஜகப் பண்ணையார் கும்பல். சொல்ல மறந்து விட்டோமே, ஹீரோ ஓர் அனாதை.

மேலும் ஊருக்கே உபகாரியாக இருந்து எல்லா வீட்டிலும் சாப்பிட்டு வயிற்றை நிரப்புகிறவர். ('அன்னதாதா ஸுஹீபவ:' என்று ஆசீர்வாதம் வேறு.)



வெள்ளி நிலவே

ஆனால், அழகாக ஒரு சௌந்தர்யா வந்ததும் அத்தனை பேரையும் மறந்துவிடுகிறார். காதலாவது உண்டா என்றால் அதென்னமோ தெய்வீகப் பாசப் பிணைப்பாம்.

"வெட்டு இவனை!" என்று ஒரு வில்லன் அடியாளைக் கைகாட்டுகிறார், சௌ.

போடு, ஓரேபோடு! கவர்மெண்ட் சர்வெண்ட்டின் 'கண்ணியமான' கட்டளையை வியப்பதா? இளநீர் வியாபாரி மாதிரி சீவி சீவித் தள்ளும் ஹீரோ பக்கம் போலீஸ் எட்டிக்கூடப் பார்க்காத விந்தையை வியப்பதா? என்ன ஆனாலும் டைரக்டர் சொல்லாதவரை பிரமாதமாக ஏதும் பண்ண மாட்டேன் என்று அரச மரத்தடி பிள்ளையார் போல் வீற்றிருக்கும் பிரதான வில்லன் ஆனந்தராஜை வியப்பதா? படம் முழுக்க வியர்க்க வியர்க்க வியக்க வைத்திருக்கிறார்கள்.

கிளைமாக்ஸில் டமாலென்று ஹீரோ அநாதையில்லை; பெரிய பண்ணையாரின் மகன்தான் என்று 1940 ஸ்டைலில் பிளேட்டை ஒரு திருப்பு. ("ராமு! நான்தாம்பா உன் அப்பா! நீ என் மகன்!" என்பது போன்ற உணர்ச்சிமயமான வசனங்களைத் தவற விடாதீர்கள்.)

காமெடி இல்லாமலா? மணிவண்ணன், செந்தில். பாசம் மிக்க உடன்பிறப்புகள். வாழ்வில் விதியாக நுழையும் மனைவியர். (முறையே காது மற்றும் வாய் பஞ்சர் ஆனவர்கள்.) இதை விடுத்தே நகைச்சுவைக்கு நல்ல பல சாத்தியங்கள் உண்டு. இருந்தும் கதறக் கதற அழவைப்பதே இயக்குநரின் நோக்கம் என்னும்போது, கைக்குட்டை இல்லாமல் படம் பார்க்க நுழைந்தது நம் கருவின் குற்றம்.

புதிய இசையமைப்பாளர் கரண் மட்டும் சற்றே ஆறுதல் தருகிறார். புல்லாங்குழலுக்கு சிறகு அணிவித்துப் பின்னணி இசையில் (சிற்சில இடங்களில்) அவர் பறக்க விடும் சில சுத்த கர்நாடக சங்கீத ராகங்கள் கண்ணை மூடிக் கொண்டு கேட்டால் பரம சுகமாக இருக்கின்றன. ஒரு பாடல் கூடக் காதுகளில் நிற்கிறது.

மற்றபடி, என்றோ நல்ல படங்கள் தந்த இயக்குநர் ஆயிற்றே என்று நப்பாசைப் பட்டுப் போனால் 'உதயகுமாரை உயிருள்ள வரை மன்னிக்கமாட்டேன்' என்று விரசபதம் பூண்டுத் திரும்புவீர்கள். ●

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /98* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

